கலைக்கதிர்

018

க்ருதி ஆனி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JUN 1950
MADRAS

1018
2-50.



நல்ல விதைப் பருத்தி விதையும், மாட்டுத் தீவனத்துக்குப் பருத்தி விதையும். குடியானவர்களுக்கும், வியாபாரிகளுக்கும் நியாயமான விலைகளில் சப்ளை செய்கிறோம்.

உரத்திற்கும், மாட்டு உணவிற்கும் ஏற்ற எக்ஸ்பெல்லர் கடலைப் புண்ணாக்கு சர்க்காரின் நிர்ணய விலைக்கு விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் தாராளமாகக் கொடுக்கிறோம்.

நவீன முறையில் தயார் செய்து சுத்தம் செய்யப்பட்ட திடமான கடலெண்ணெய் நம் தேசம் பூராவிற்கும் சப்ளை செய்வதுமல்லாமல், அயல் நாடுகளின் தேவைக்கும் கணிசமான முறையில் குறித்த காலத்தில் ஏற்றுமதி செய்கிறோம். இதர விபரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.



ஸ்ரீ ரங்கவிலாஸ் ஜின்னிங் & ஆயில் மில்ஸ்

பாப்பநாய்க்கன்பாளையம்

போன் நெ. 51　　தந்தி "ஆயில்மில்ஸ்"

தபால் பெட்டி நெ. 151　　கோயமுத்தூர்

MADRAS

Estd. 1933.

Telegram: VENKATESA, Udamalpet.

ஸ்ரீ

ஸ்ரீ வெங்கடேசா மில்ஸ் லிமிடெட்,

வெங்கடேசா மில்ஸ் போஸ்ட்,

உடுமலைப்பேட்டை.

100நெ. வரை மெல்லிய ரக பருத்தி நூல்கள் நூற்பதில் பிரசித்தி பெற்றது.

எங்கள் புதிய தறிகளிலிருந்து வெளிவந்த தரத்தில் சிறந்த துணி ரகங்கள் புகழ்பெற்று விளங்குகின்றன.

சலவை மில்லும் தயாராகிறது.

1951ம் ஆண்டில் உயர்ந்த சலவைத்துணிகளும் வெளிவரும்.

மானேஜிங் ஏஜண்டுகள்:

ஜி. வி. கோவிந்தசாமி நாயுடு அண்டு கம்பெனி.

குமரன் மில்ஸ் லிமிடெட்,

புதுப்பாளையம், கோயமுத்தூர்

(மேட்டுப்பாளையம் ரோட்)

1935-ல் ஸ்தாபிக்கப்பெற்றது.

மூலதனம் மானேஜ்மெண்டு தொழிலாளர்

ஆக எல்லாம் நம் இந்திய மயம்

முதல்தரமான இந்த மில்லில் தயாராகும்

சுதேசி நூலையே வாங்குங்கள்

20, 40, 60 நெ. நூல் தயாரிக்கப்படுகிறது

குணம் நிறைந்த சரக்கை உற்பத்தி செய்வதே

நிர்வாகஸ்தர்களது நோக்கம்.

கோவையில் சிறப்பாக விளங்கும் மில்களின் வரிசையில்

இந்த மில்லும் சேர்ந்திருக்கிறது.

கல்வி, தொழில் அநுபவம் நிறைந்தவர்களால்

நிர்வகிக்கப் பெற்று வருகின்றது.

வருடா வருடம் பங்குதாரர்கள் நல்ல

டிவிடெண்டு பெற்று வருகிறார்கள்.

Managing Agents :—

N. APPUSWAMY NAIDU & CO.,

Managing Director:—

G. V. MUTHUSWAMY, B. Sc.,

மகிழ்ச்சியான அறிவிப்பு

உற்பத்தி உயர்வால் சிறந்த ரக சாதனங்கள்! குறைந்த விலை!



A. C. மோட்டார்



எஸ், டைப் பம்பிங் செட்



B. S. டைப் பெல்டு பம்பு



கரும்பாலை



ரீலிங் மெஷின்

PSG உற்பத்தி சாதனங்களுக்கு நாட்டில் அதிக கிராக்கி ஏற்பட்டு நாளுக்குநாள் கிராக்கி அதிகரித்து வருகிறது.

நாட்டின் இயந்திர சாதன தேவை உயர்வை உத்தேசித்து நாங்கள் எங்களுடைய தொழிற் சாலையை பன்மடங்கு விஸ்தரித்து நூதன முறைகளில் உற்பத்தியை வெகு வேகமாக அதிகரித்து இருக்கிறோம்.

எங்களுடைய பெருவாரியான உற்பத்தி முறைகளால் செய்யப் படும் PSG இயந்திர சாதனங்கள் குறைந்த விலையில் கிடைப்பதால், உபயோகிப்பவர்கள் பெரிதும் லாபம் அடைகிறார்கள்.

உங்களுடைய தேவையை தீர்மானிக்கு முன் PSG உயர்ரக இயந்திர சாதனங்களின், குறிப்பாக மோட்டார்களின் பம்பிங் செட்டுகளின் விலை விபரங்களைப் பார்த்துக் கொண்டு முடிவு செய்யக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பி. எஸ். ஜி. இண்டஸ்டிரியல் இன்ஸ்டிடியூட்

பூளைமேடு போஸ்டு, கோயமுத்தூர், (தென் இந்தியா

நந்தி "CHARITY" கோயமுத்தூர்.

டெலிபோன் நெ. { தலைமை ஆபீஸ் ... 58
சேல்ஸ் பிராஞ்சு, கோயமுத்தூர் 148

— தயார் செய்பவை —

PSG

① மெஷின் டூல்ஸ்
② எலக்டிரிக் மோட்டார்கள்
③ செண்டிரிபியூகல் பம்புகள்
④ டெக்ஸ்டைல் மெஷினரி
⑤ ஆயில் மில்லிங் மெஷினரி
⑥ விவசாயக் கருவிகள்



பி. எஸ். ஜி. இண்டஸ்டிரியல் இன்ஸ்டிடியூட்
பூளைமேடு கோயமுத்தூர் (தென் இந்தியா)

கலைக்கதிர்

மலர் – உ   விக்ருதி : ஆனி   இதழ் – எ

ஆசிரியர் :
திரு. ஜி. ஆர். தாமோதரன்,
(B. Sc. Elec., B. Sc. Mech. (Durham). A. M. I. E. E. (London.))

★

இந்த இதழில்

வான யாத்திரை
கலையும் கண்ணீரும்
கடல் — ஒரு பச்சோந்தி
"எல்லோரும் கேளுங்கள்!"
சங்க காலப் பாண்டியர்கள்
புதினங்கள்
நெருக்கடியில் ஆள் தேடல்
கலக்கம்
உள்ளத்தின் உண்மை
எனது பூங்கா
சுழற்காற்று
சிட்னி மாநாடு
வினுக்களும் விடைகளும்
மனிதன் எம்மாத்திரம்
"ஆண்டாள்"
மீனின் மின்சாரம்

★

'கலைக்கதிர்' இதழில் வெளியிடும் கட்டுரை கதை முதலியவற்றின் கருத்துக்கள் அவற்றை எழுதிய நேயர்களுக்கே உரியன.

விலை அணா 8

வான யாத்திரை.

ஜி. ஆர். தாமோதரன்

குபேரப்பட்டணத்தின் எழிலேயும் செல்வத்தையும் கண்டு வியப்புற்றேன். இன்புற்று வாழ்வதற்கு அமெரிக்கர் தங்கள் அறிவினுலும் ஆற்றலினுலும் பல் வகை நலன்களை நாள்தோறும் பெருக்கிக்கொண்டு வருகிருர்கள். விருப்பமிருந்தால் நாம் 'வான யாத்திரை' செய்யவும் நியூயார்க்கில் வாய்ப்பு உண்டு. அவ் வான யாத்திரையில் வானத்திலுள்ள கோள்களேயும் நட்சத்திரங்களேயும் தரிசிக்கலாம். இந்த யாத்திரையைச் செய்யும் பேறு எனக்கு ஒரு நாள் கிடைத்தது.

நான் வான யாத்திரை செய்தேன் என்ருல் பலர் நம்பாமல் ஏளனம் செய்யலாம். ஒரு வேளே கனவில் நான் அந்த யாத்திரை புரிந்திருக்கலாமென ஐயுறலாம். கனு ஒன்றுமில்லே. விழித்த கண்களுடன் செய்தேன். ஆனல் வானத்தில் பறந்து சென்று வானத்தின் அற்புதங்களேக் காணவில்லே. இவ்வுலகத்திலிருந்து கொண்டே அக்காட்சிகளேக் கண்டேன்.

ஹேடன் ப்லேனடேரியம் (The Hayden Planetarium) எனப்படும் வான் காட்சிச் சாலேயில் என் வான யாத்திரையைத் துவக்கி இனிது முடித்தேன். வானத்தில் சூரியன் சந்திரன்போன்ற கோள்களும் (Planets) நட்சத்திரங்களும் எவ்வாறு தொழிலாற்றுகின்றன, அவைகளின் அமைப்பு பெருமை எத்தகையன — என்பவை நாடகமாகச் சித்தரித்துக் காட்டப்படுகின்றன. நாம் வானத்தினுள் சென்று அங்கு அவைகளேத் தரிசிப்பதுபோலவே தோன்றுகிறது.

இத்தகைய ப்லேனடேரியங்கள் (Planetariums) ஐக்கிய அமெரிக்க நாடுகளில் ஐந்து நிறுவப்பட்டுள்ளன. நியூயார்க்கிலுள்ள ப்லேனடேரியம், ஹேடன் என்ற பிரபுவின் நன்கொடையினுல் தோன்றினமையால், இது ஹேடன் ப்லேனடேரியம் (The Hayden Planetarium) எனப்படுகின்றது.

ப்லேனடேரியம் கட்டிடத்தில் நுழைந்தவுடன் நூல் நிலேயம் ஒன்று நம்மை வரவேற்கிறது. அங்கு வானத்தின் வரலாற்றினேப் புகட்டும் எல்லா வகை நூல்களும் உள்ளன. சிறுவர்களும், சாதாரண மக்களும் படித்து அறிந்துகொள்வதற்கு ஏற்றவாறு எளிய நடையில் எழுதப்பட்டுள்ள நூல்கள் உள்ளன. இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டுள்ள பேரறிஞர்களுக்கு ஏற்ற நூல்களும் உள்ளன. அவ்வப்போது வானத்தில் நிகழ்ந்த அற்புதங்களே எடுத்த படங்களும் உள்ளன. இந் நூல்களும் படங்களும் விற்பனேக்கும் கொடுக்கப்படுகின்றன. அமெரிக்கரிடம் நாம் கற்றுக்கொள்ளவேண்டிய சிறந்த பண்பு இதுதான். மக்களிடையே கல்வியைப் பரப்புவதற்கு எல்லாத் துறைகளிலும் நூல்கள் எழுதப்பட்டு வெளியாகின்றன. ஆராய்ச்சியில் அவ்வப்போது கண்ட உண்மைகள் சிறு நூல்களாக வெளிவருகின்றன. மக்களின் அறிவு வளர்ச்சிக்கு இது ஒரு சிறந்த பணி. இவ்வாறு நாமும் நம் நாட்டில் முனேந்து நம் மக்களின் அறிவு வளர்ச்சிக்காகத் தமிழில் சிறந்த நூல்களே வெளியிடவேண்டும்.

நூல் நிலையத்தைக் கடந்து உட்சென்று ஒரு கூடத்தை அடைந்தேன். அங்கே குழுமியிருந்தவர்கள் மேலே பார்த்துக்கொண்டிருந்தனர். நானும் பார்த்தேன். நான் கண்ட காட்சி என்னைச் சூரிய மண்டலத்திற்கு எடுத்துச் சென்றது. மையத்தில் சூரியன் ஒளி வீச, அதனைக் கோள்கள் சுற்றி வருவதைக் கண்டேன். வெகு தொலைவில் வெளிப் பரப்பில் (Space) சூரியனும் மற்றக் கோள்களும் எவ்வாறு நமக்குப் புலப்படுகின்றனவோ அவ்வாறு அவை அக்கூடத்தில் காட்சி அளித்தன. அக்கூடம் வட்ட வடிவமாக அமைந்திருந்தது. மச்சில் (Celing) கோள்கள் தொங்கவிடப்பட்டிருந்தன.

மையத்திலிருந்த சூரியன்மாத்திரம் சுற்றுப் புறங்களில் ஒளியை வீசியது. சூரியனைச் சுற்றி வந்த கோள்களில் ஒளி மங்கிக் காணப்பட்டது. ஒவ்வொரு கோளும் தன்னைத் தானே சுற்றிக்கொண்டு சூரியனை வலம் வந்தது. கோள்கள் யாவும் உருண்டை வடிவமுடையவை. கோளின் எப்பாகத்தின் மீது சூரியன் ஒளி வீசியதோ அப்பாகத்தில் வெளிச்சம் காணப்பட்டது. ஏனெனில் சூரியனைத் தவிர மற்றக் கோள்களுக்கு ஒளி வீசும் பண்பு இல்லை. வானத்தில் காணப்படுவது போல் அக்கூடத்திலும் கோள்கள் வெவ்வேறான அளவுடனும் வெவ்வேறு தூரத்திலும் வரிசையாகக் காணப்பட்டன.

எல்லாக் கோள்களிலும் மிகச் சிறியது புதன் (Mercury). இது சந்திரனைவிட மிகப் பெரியது அல்ல. இது சூரியனுக்கு வெகு அருகில் சுற்றி வருகிறது. புதனின் ஒரு பாதியே சூரியன் பக்கமாக அமைந்து சுற்றிவருகிறது. சந்திரனும் இவ்வாறே. சந்திரன், புதன் இவைகளின் மற்றப் பாதிப் பாகங்கள் சூரியன் ஒளி படாமல் இருளில் மூழ்கி இருக்கின்றன. அப்பாகங்கள் நம் தொலைக் கண்ணாடியில் (Telescope) புலப்படுவதில்லை. சூரியன் ஒளி வீசப்பட்ட பாகம் வெகு வெப்பமாகவும், மற்ற பாகம் வெகு குளிர்ச்சியாகவும் இருக்கின்றன. ஒரு பாதியில் என்றும் பகல்; மற்றப் பாதியில் என்றும் இரவு. புதனில் தண்ணீர், காற்று, இருப்பதாக ஒரு அறிகுறியும் புலப்படவில்லை. சந்திரனிலும் இவ்வாறே. எனவே, காற்றும் ஈரமும் இல்லாமையால் புதனிலும் சந்திரனிலும் உயிர்கள் வாழா.

புதனுக்கு அடுத்தாற்போல் வெள்ளி (venus) சுற்றி வருவதைக் கண்டேன். இது நம் பூமியை ஒத்திருக்கிறது. பூமியும் வெள்ளியும் இரட்டைச் சகோதரிகளென அழைக்கப்படுகின்றன. வெள்ளி பூமியைவிடக் கனத்திலும், உருவத்திலும் கொஞ்சம் சிறியது. வெள்ளியின் பரப்புத் தெளிவாக தொலைக் கண்ணாடியில் புலப்படுவதில்லை. எப்பொழுதும் கனத்த மேகங்களால் சூழப்பட்டிருப்பதால் அதன் பரப்பைக் காண முடியவில்லை. வெள்ளியில் மேகங்கள் காணப்படுவதால் அங்கே காற்றும் இருக்கவேண்டும். நம் பூமியிலுள்ள காற்றுக்கும் அங்குள்ள காற்றுக்கும் வேற்றுமை உண்டு. இங்குள்ள உயிர் வாயு (oxygen) அங்கில்லை. நம் பூமியிலிருப்பதை விடக் கரியமிலவாயு (carbo dioxide) அங்கு அதிகமாக இருக்கிறது. உயிர் வாயு மற்றப் பொருள்களுடன் கலந்து பண்பை இழந்து செலவழியும் தன்மையுடையது. உயிர் வாயு இவ்வண்ணமாகக் குறையக் குறைய நம் பூமியிலுள்ள செடி கொடிகள் உயிர் வாயுவை வெளிவிட்டு உற்பத்தி செய்கின்றன. வெள்ளியில் உயிர் வாயு இல்லாமையால் அங்குச் செடி கொடிகள் இரா. நம் பூமியும்

தோற்றத்தில் புதனைப் போலவும் இருந்திருக்க வேண்டும். உயிர் வாயு உண்டான பிறகு உயிர்கள் தோன்றியிருக்க வேண்டும். வெள்ளியில் உயிர்களின் முதற்படியான செடி கொடிகள் இன்னும் தோன்றவில்லை. இன்னும் சில ஆண்டுகளில் நம் பூமியைப் போல வெள்ளியும் உயிர்கள் வாழும் இருப்பிடமாக அமையும்.

வெள்ளியில் பரந்த கடல்களும் சதுப்பு நிலங்களும் காணப்படுகின்றன. வெள்ளி சூரியனுக்கும் பூமிக்கும் இடையே அருகில் வரும் போது பிரகாசமாகவும், வெகு தொலைவில் பூமிக்கு எதிர்ப் பக்கமாக வரும் போது ஒளியில் சிறிது மங்கியும் காணப்படுமென்று அக்கூட்டத்திலிருந்த அறிஞர் விளக்கினர்.

வெள்ளிக்கு அடுத்து நம் பூமியைக் கண்டேன். சூரியனை ஒப்பிடும்போது அதன் பரிமாணம் மிகச் சிறியதாகத் தென்பட்டது. அதன் பரிமாணம் சூரியனைவிட 10 லட்சமடங்கு சிறியது. மாதிரிப் பூமியில் (model) கடல்களும் கண்டங்களும் தெளிவாகக் காணப்பட்டன.

பூமியைச் சந்திரன் சுற்றி வரும் போது விண்ணில் நடைபெறும் நிகழ்ச்சிகள் யாவும் கூடத்தில் காண்பிக்கப்பட்டன. சந்திரனின் வளர்பிறை, தேய்பிறை, பௌர்ணமி, அமாவாசை, கிரகணங்கள் முதலியன எங்ஙனம் ஏற்படுகின்றன என்பதைப் பார்த்தேன். பூமி சாய்வாகச் சுழலும்போது, வடகோளம், தென்கோளம் சூரியனின் கதிர்களை நேராகப் பெறுவதனால், ஆண்டின் பல பருவங்கள் தோன்றுவது காண்பிக்கப்பட்டது.

பூமிக்கு அடுத்துச் செவ்வாய் (Mars) சுற்றி வருவதைப் பார்த்தேன். இது பூமியைவிடச் சிறியது. ஆனால், புதனைவிடப் பெரியது. இது ஆரஞ்சு நிறத்துடன் அழகாகக் காணப்பட்டது. அதன் இரு துருவங்களிலும் வெள்ளைத் தொப்பிகள் போல் காணப்பட்டது. அப்பாகங்கள் பனியினால் மூடப்பட்டிருப்பதால் அவ்வாறு காணப்படுகின்றன என்று அக்கூடத்திலிருந்த அறிஞர் விளக்கினர். இப்பனி கோடை காலங்களில் உருகி விடுவதால் அக்காலங்களில் அவை அளவில் குறைந்து தொலைக் கண்ணாடியில் காணப்படுகின்றனவாம். செவ்வாய்க் கிரகத்தின் பரப்பில் பல கருங்கோடுகள் வரையப்பட்டதுபோல் காணப்பட்டன. அவை நிலைத்துக் காணப்பட்ட போதிலும், சிறந்த தொலைக்கண்ணாடியில் அவை மாறுதலடைவது போல் தென்படுகின்றன. நிறத்திலும் நீள அகல அளவிலும் மாறுகின்றன. பருவங்களுக்கு ஏற்றவாறு மிகப்பச்சை, வெண்பச்சையாகவும், மஞ்சளாகவும், பழுப்பு நிறமாகவும் மாறி வருகின்றன. இதிலிருந்து செவ்வாய்க் கோளில் செடி கொடிகள் உயிர் வாழ்கின்றன என்பது நிச்சயமாகப் புலனாகிறது. வசந்தம், கோடை, இலையுதிர் முதலிய பருவங்களுக்கு ஏற்றவாறு செடிகள் வளர்கின்றன. இக் காரணத்தினால் நிறங்களும் மாறி மாறிப் புலப்படுகின்றன. ஆரஞ்சு நிறமாகத் தென்படும் பாகங்கள் பாலைவனங்கள். அங்கே கடல்கள் இல்லை. அங்கு உயிர் வாழப் போதிய அளவு உயிர் வாயு இருக்கின்றதா என்பது சந்தேகம். அங்குள்ள காற்று நம் பூமியிலிருப்பதைவிட இலேசாக இருக்கிறதாம். நம் பூமியைவிட அது குளிர்ச்சியானது. சீதோஷ்ண நிலையும் விரைவில் மாறி மாறி அமைகிறது. இக் காரணங்களால் மக்கள் அங்கு வாழமுடியுமா என்ற ஐயம் எழுகின்றது. பல கோடி ஆண்டுகளுக்கு முன்னர், இக்கோளத்தில் உயிர்கள் பல வாழ்ந்தி

ருக்க வேண்டுமென்றும், அங்கு இப்பொழுது உயிர் வாழ்க்கை அற்றுப் போகும் நிலைமை நிலவுகிறதென்றும் விஞ்ஞானிகள் ஊகிக்கின்றனர். நம் பூமியும் பல கோடி ஆண்டுகளுக்குப் பின்னர்ச் செவ்வாய்க் கிரகத்தின் கதியை அடையக்கூடுமென்கிறார்கள். முடிவாகக் கூறுவோமானால், இப் பிரபஞ்சத்தில் நம் பூமி ஒன்று மாத்திரம் உயிர் வாழ்க்கைக்குரிய இடமாக அமையவில்லை. செவ்வாய்க் கிரகத்திலும் உயிர்கள் வாழ்கின்றன என்று கூறத் தக்க ஆதாரங்கள் உள.

செவ்வாய்க் கிரகத்திற்கு அடுத்தது வியாழன் (Jupiter). இவ்விரண்டிற்குமிடையே அதிக இடைவெளி காணப்பட்டது. அங்கே பலப்பல சிறிய கோள்கள் சுற்றிவருவதைக் கண்டேன். இவைகள் 'அஸ்டிராய்ட்ஸ்' (Asteroids) என அழைக்கப்படுகின்றன. மிகச் சிறியவைகளாதலால் சிறந்த தொலைக் கண்ணாடியில்தான் இவை புலப்படுகின்றன. இவைகளின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. ஆதியில் இங்கு ஒரு கிரகம் இருந்திருக்க வேண்டுமென்றும், அது வியாழனின் கவர்ச்சிக்குள் சிக்கியவுடன் தூள் தூளாக உடைந்து சிதறிவிட்டது என்றும் அச்சிதறல்களே 'அஸ்டிராயிட்ஸ்' என்றும் கூறுகின்றனர். கிரகங்கள் எல்லாவற்றிலும் வியாழன் மிகப் பெரியதாகையால் அதனுடைய கவர்ச்சி பொல்லாதது.

வியாழனுக்கு அடுத்த பெரிய கிரகம் சனி (Saturn.) இவை இரண்டிற்கும் சில பொதுவான பண்புகள் உள்ளன. இவை வேகமாகச் சுழல்கின்றன. ஆகையால் இவை தட்டை வடிவமாகவும் கோழி முட்டை வடிவமாகவும் காணப்படுகின்றன. மத்திய பாகங்கள் உப்பலாகப் புலப்படுகின்றன. இவ்விரண்டு கோள்களிலும் பல ஆயிரம் மைல் கனத்தில் பனிக்கட்டி படிந்திருக்கிறது. நம் பூமியில் காற்றின் அழுத்தம் ஒரு சதுர அங்குலத்திற்கு 15 பவுண்டு இருக்கிறது. வியாழனில் காற்றின் அழுத்தம் பல்லாயிரம் டன்கள். இந்த அழுத்தத்தின் காரணமாகப் பல வாயுக்கள் நீராகவும் கடினப் பொருள்களாகவும் மாறிக் காணப்படுகின்றன. இவ்விரண்டு கோள்களிலும் அம்மோனிய வாயு (Ammonia gas) இருக்கிறது. இவைகளில் நீர்த் துளிகளான மேகங்கள் பல இருக்கின்றன. வியாழன் மிக்க குளிர்ச்சியாகவும், சனி அதைவிட மிகக் குளிர்ச்சியாகவும் இருக்கிறது.

வியாழனை 11 உபக்கோள்களும், சனியை 9 உபக் கோள்களும் சுற்றிவந்தன. சில பெரியவை; சில சிறியவை. சனியைச் சுற்றிப் பல வளையங்கள் காணப்படுகின்றன. ஆதியில் ஒரு உபகோள் சனியின் கவர்ச்சியில் சிக்கிச் சிதறுண்டு துண்டு துண்டுகளாகச் சுற்றி வருவதால் இவ்வாறு காணப்படுகின்றதென்று அங்கிருந்த வானாராய்ச்சி நிபுணர் விளக்கினார்.

சூரிய மண்டபத்தில் சூரியனும் அதனைச் சுற்றி வலம் வரும் புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி என்ற ஆறு கோள்கள்தான் காணப்பட்டன. மற்ற மூன்று கோள்கள் யுரேனஸ், (Uranus) நெப்டியூன், ப்லூடோ (Pluto) காணப்படவில்லை. சூரியனும் கோள்களும், வானத்தில் எவ்வாறு சஞ்சரிக்கின்றனவோ அந்த அளவு விகிதத்தில் அவை மண்டபத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. கூடத்தின் குறுக்களவு 40 அடி. இதற்குள் 6 கோள்கள் தான் அமைக்க வசதியிருக்கின்றது. மற்ற மூன்று கோள்களும் சூரிய

னுக்கு வெகு தூரத்திலிருப்பதால், அந்த அளவு விகிதம் 40 அடிக்குள் அடங்க வில்லையாம். இவ்வாறு அங்கிருந்த அறிஞர் பதிலளித்தார். யுரேனஸ், நெப்டியூன், ப்ளூடோ, இவை மிகக் குளிர்ச்சியாக இருக்கின்றன. அங்குள்ள காற்றும் நஞ்சாக இருப்பதால் அவைகளில் உயிர்கள் வாழும் அறிகுறிகள் ஒன்றும் இல்லை. ப்ளூடோ கிரகம் 1930-ஆண்டில்தான் கண்டுபிடிக்கப்பட்டது. கிரகங்களின் அளவினையும், தொலைவினையும் கீழ்க்கண்ட உதாரணம் நன்கு விளக்கும்.

நம் பூமியை ஒரு பட்டாணியளவு வைத்துக்கொண்டால், சூரியன் 2 அடிக் குறுக்களவுள்ள கோளமாகவும், புதன் குண்டூசியின் தலையாகவும், வெள்ளி பட்டாணியாகவும், செவ்வாய் பெரிய குண்டூசியின் தலையாகவும், வியாழன் ஓர் ஆரஞ்சுப் பழமாகவும், சனி ஒரு சிறிய ஆரஞ்சுப் பழமாகவும், யுரேனஸ் பெரிய நெல்லிக் காயாகவும், நெப்டியூன் சிறிய நெல்லிக் காயாகவும், ப்ளூடோ சிறிய பட்டாணியாகவும் இருக்கவேண்டும்.

சூரிய மண்டபத்தை விட்டு மேல் மாடிக்குச் சென்றேன். அங்கு விண்மீன் மண்டலம் அமைக்கப்பட்டிருக்கிறது. இம் மண்டபத்தின் குறுக்களவு 75 அடி. அர்த்த கோள வடிவமாக இம் மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இம் மண்டபத்தின் அர்த்த கோள வடிவமுள்ள கூரை வானமாக அமைந்தது. நட்சத்திர மண்டலங்களையும், சூரியனையும், சந்திரனையும் இக் கூரைபோன்ற திரையில் வீசும் யந்திரம் (The Projection Iustruments) அம் மண்டபத்தின் நடுவில் வைக்கப்பட்டிருந்தது. இந்த யந்திரத்தின் படத்தை அட்டையில் காணலாம். பார்ப்பதற்கு யந்திரம் விந்தையாகக் காணப்படுகிறது. 12 அடி நீளமுள்ளது. இரு பக்கங்களிலும் இரு கோளங்களிருக்கின்றன. ஒன்று வானத்தின் வட அர்த்த கோளத்தையும், மற்றொன்று தென் அர்த்த கோளத்தையும் காண்பிக்கிறது. இந்த யந்திரம் எப்பக்கமும் இலகுவாகத் திரும்பும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்கிறது. ப்ரொஜக்டரின் (Projector) ஒரு பகுதி சூரியன் சந்திரன் மற்றக் கோளங்களை வீசுகிறது. மற்றப் பகுதிகள் நட்சத்திரங்களை வீசுகின்றன. நட்சத்திரங்களின் ஒளிக்கு ஏற்றவாறு துவாரங்களின் அளவு வேறுபடுகின்றன. மங்கலான நட்சத்திரங்களை வீசும் துவாரங்களின் குறுக்களவு ஒரு அங்குலத்தில் ஆயிரத்தில் ஒரு பங்கு இருக்கிறது.

அங்குச் சூழ்ந்திருந்த ஒரே இருள், இரவை நினைவூட்டியது. அந்த ப்ரொஜக்டர் வானத் திரையில் நட்சத்திர மண்டலங்களை வீசியது. அறிஞர் ஒவ்வொரு நட்சத்திரத்தையும் 'டார்ச்' விளக்கால் காட்டி வர்ணனை செய்தார். இந் நட்சத்திரங்கள் நமது அருகிலுள்ள நட்சத்திரமான சூரியனைக் காட்டிலும் பல கோடி மடங்கு பெரிதாயும் பிரகாசமாகவும் இருக்கின்றன. ஆனால், இவை மிகத் தொலைவிலிருப்பதால் இவற்றின் பெருமை நமக்குத் தெரிவதில்லை. பரந்த வெளியில் இவை கணக்கு வழக்கின்றிச் சஞ்சரிக்கின்றன. பிரயாணம் செய்யும் கப்பல்கள் பல்லாயிரமாக இருந்தாலும் எவ்வாறு பரந்த கடலிலே எங்கேயோ ஒன்று தென்படுகின்றதோ அதைப்போலவே கோள்களும் மிகப் பலவாயினும் பரந்த வானவெளியிலே அவை சிதறிக்கிடக்கின்றன. எனவே ஒன்றோடொன்று இவை மோதி ஆபத்து விளைவிக்க இடமில்லை. வானத்தில் சில பருவங்களில் தோன்றும் எண்ணற்ற நட்சத்திரங்களாலான பால் வழியும் சித்த

ரித்துக் காட்டப்பட்டது. கார் மேகங்கள் திரண்டு இடியையும் மின்னலையும் உண்டாக்கின. இக் காட்சி மனத்தைக் கவர்ந்தது.

திடீரென்று ஒரு வால் நட்சத்திரம் பவனி வரும். சூரியனுக்கு அருகில் நெருங்க நெருங்க இது வால் நீண்டு பிரகாசமடையும் காட்சி அற்புதமாயிருந்தது. வானத்தில் திடீரெனப் பளிச்சிட்டுத் தோன்றி உடனே ஒளிக் கீற்றுப் போல் மறையும் விண்கற்களும் (Shooting Stars) அவ்வப்போது தோன்றின. அக் கற்கள் நமது காற்று மண்டலத்தில் உராய்வதால் அதிக வெப்பம் ஏற்பட்டு ஒளிக் கீற்றுப்போல் காண்கிறது. இக் கற்கள் சிறியவையானால் தேய்ந்து காற்றோடு மறைந்து விடும்; பெரியவைகள் சில பூமியை அடையும். ஐக்கிய அமெரிக்காவிலே கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பெரியதான 15½ டன் விண் கல் அங்கே வைத்திருந்ததை நான் பார்த்து மகிழ்ந்தேன். அது கற்பாங்காகவும் இடையே இரும்பு, நிக்கல் உலோகங்களின் கலப்புடையதாயு மிருக்கும்.

இவ்விண் கல்லின் வரலாறு: சில காலம் நிலக்கனியில் வேலை செய்த (miner) ஹைஸ் (Highes) என்பவர் அமெரிக்காவில் வந்து குடியேறினர். நிலத்தின்கண் எத்தகைய உலோகங்கள் காணப்படுகின்றன என்பதை ஆராய்வதில் மிக விருப்பமுடையவர். ஒரு நாள் இவரும் இவருடைய நண்பர் டேல் (Dale) என்பவரும் மலையோரமாகச் சென்றுகொண்டிருந்தபோது ஒரு கல் தென்பட்டது. அக்கல்லில் இரும்பு இருந்ததைக் கண்டு மகிழ்ச்சியுற்றனர்கள். அங்கு இரும்புக்கனி இருப்பதற்கு இது அறிகுறியாகுமென நினைத்து அந் நிலத்தை விலைக்கு வாங்கி, கனியை வெட்டி லாபம் பெறலாமென எண்ணினர்கள். அக்கல்லைப் பெயர்த்து எடுத்தபோது அது 10 அடி நீளம் 7 அடி அகலம் 4 அடி கனமாயிருந்தது. இந்த இரகசியத்தை யாரிடமும் சொல்லாமல் சில மாதங்களிருந்தார்கள். முன்னொரு காலத்தில் இங்கு வீழ்ந்த விண்கல் இதுவென்று பின்னர் அறிந்தார்கள். டேல் மனம் தளர்ந்து வேறு ஓர் இடத்திற்குச் சென்றுவிட்டார். ஹைஸ் இந்த விண்கல்லை முயன்று தன் வீட்டிற்குக் கொணர்ந்தார். மரக்கட்டைகளாலான உருளைகளைச் சக்கரங்களாகக் கொண்ட வண்டி ஒன்றில் குதிரையைப் பூட்டி, அவ்வண்டியில் அக்கல்லை மிகச்சிரமத்துடன் ஏற்றி இழுத்தார். ஒரு நாளைக்கு 50 கஜம்தான் இழுக்கமுடிந்தது. ஆகஸ்டு மாதத்தில் ஆரம்பித்து நவம்பரில்தான் தம் நிலத்திற்குக் கொண்டுவர முடிந்தது. ஹைஸ் இதனை விற்க விளம்பரப் படுத்தினர். தொல்லையாக முடிந்தது. கல் வீழ்ந்திருந்த நிலத்தின் சொந்தக்காரன் இக்கல் தனக்குச் சேர வேண்டுமென்று கேட்டான். ஹைஸ் மறுத்தார். கீழ்க் கோர்ட்டில் விசாரணை நடந்தது. ஹைஸுக்குப் பிரதிகூலமாகத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. மேல் கோர்ட்டிற்கு ஆப்பீல் செய்யப்பட்டது. இதற்குள் இந்த விண் கல்லின் இரகசியம் அம்பலமாகி விட்டது. இதனை வாங்கிக் காட்சிச்சாலையில் வைக்கப் பலர் விரும்பினர்.

இதைப் போன்று முன்னொரு வழக்கில் விண் கல் வீழ்ந்த நிலத்தின் சொந்தக்காரருக்குத்தான் கல் சொந்தமானது என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. இதனை அறிந்து ஹைஸ் வழக்கறிஞர்கள், இக்கல் நாட்டின் குடிமக்களாகிய இந்தியர்களால் வழிபட்டுவந்த கடவுள் என்று வாதாடி அதற்குச் சில இந்தியர்களைச் சாட்சியம்

கூறும்படி செய்தார்கள். இத்தகைய இந்தியச் சின்னங்கள் யார் கண்டு பிடிக்கிறார்களோ அவர்களுக்குச் சொந்தமானது என்று சட்டமிருந்தது. ஆனால், தீர்ப்பு ஹைஸுக்குப் பிரதிகூலமாக அளிக்கப்பட்டது. எவ்வளவோ முயன்றும் பலனில்லாமல் போயிற்று. நிலத்தின் சொந்தக்காரரிடமிருந்து ஹேடன் ப்லேனடேரியத்தார் இந்த விண்கல்லை 20600 டாலருக்கு வாங்கி, பிலேனடேரியத்தில் வைத்திருக்கிறார்கள்.

நட்சத்திரங்களின் காட்சிகளையும் கோள்களின் காட்சிகளையும் பார்த்துக்கொண்டிருந்தபோது மேல் மாடியிலிருந்து சங்கீதம் கேட்டது. அது மனத்திற்கு அமைதி தருவதாயிருந்தது. இத்தகைய ஒலிகள் வானத்தில் கோளங்களும், நட்சத்திரங்களும் சஞ்சாரம் செய்யும்போது உண்டாவதாகக் கூறப்படுகிறது.

மேலும் இயற்கைக் காட்சிகளான சந்திரன் நிலப்பரப்பு, பூர்ண சூரியகிரணங்களைப் பற்றிய சித்திரங்கள், துருவங்களில் தோன்றும் அற்புத ஒளியைப் பற்றிய படங்கள், கிரகங்களின் தோற்றம் முதலியவைகளை அழகான படங்களாக எழுதி வைத்திருக்கிறார்கள்.

பல கோடி ஆண்டுகளுக்குப் பின்னர் இப்பிரபஞ்ச வாழ்க்கை முடிவடையலாமோ என்ற பயமும் எழுகிறது. முதலாவதாகப் பல நட்சத்திரங்களுக்கு ஏற்படுவதைப் போல் சூரியனும் ஒரு நாளைக்கு வெடித்து அக்கினியைக் கக்கி, பூமியின் மேலுள்ள உயிர்களைப் பொசுக்கிவிடக் கூடும். அல்லது சூரியனின் சக்தி மங்கி, ஒளியிழந்து முடிவில் அணைந்து விடலாம். உயிர்களுக்குச் சூரிய ஒளி, வெப்பம் இவை கிடைக்காமல் எங்கும் பனி பெய்து குளிரில் அமிழ்ந்து உயிர்கள் மாய்ந்தொழியலாம்.

அல்லது ஏதோ ஒரு நட்சத்திரம் வேகமாக வந்து சூரியனின்மீது மோதி வெடித்துச் சிதறி நாசம் விளைத்துச் சூரிய மண்டலத்தையே அழிக்கலாம். அல்லது ஒரு பெரிய வால் நட்சத்திரம் நம் பூமியோடு மோதி அதைப் பதம் பார்க்கலாம். அப்போது பூமி அதிர்ந்து ஒரு சில பாகங்களில் நெருப்புப் பிடித்துச் சேதம் அடையும் என்று ஊகிக்கிறார்கள். ஐந்தாவதாகப் பூமியின் கவர்ச்சியால் சந்திரன் நம்மை நெருங்க நெருங்க, இரண்டிற்கும் கவர்ச்சி அதிகரித்துச் சமுத்திரங்களும் எரிமலைகளும் பொங்கி நம்மை அழிக்க ஆரம்பித்துவிடலாம். இன்னும் சந்திரன் அருகே வர அதுவே வெடித்து நாசம் விளைவித்து விடலாம். இக் காட்சிகளையும் ப்லேனடேரியத்தில் ஒளிப்படமாகக் காட்டினார்கள்.

எல்லையற்ற பிரபஞ்சமானது ஓர் எல்லைக்குட்பட்டு, ப்லேனிடேரியச் சுவர்களுக்குள் அடக்கப்பட்டுள்ளது. விண்ணின் பற்பல நாடகங்கள், அறிஞர்களும், பாமரர்களும், சிறுவர்களும் பெரியோர்களும் யாவரும் எளிதில் அறிந்துகொள்ளும் வண்ணம் ப்லேனடேரியத்தில் நடித்துக் காண்பிக்கப்பட்டன. ப்லேனடேரியத்தில் விஞ்ஞானமும் எழிலும், கல்வியும் களியாட்டமும் ஒருங்கே அமைந்துள்ளன.

இவ்வாறு சுமார் மூன்று மணி நேரம் வானத்தின் அற்புதங்களை ஹேடன் ப்லேனடேரியத்தில் கண்டதன் பயனாக, மனிதன் பிரபஞ்சத்தில் அற்பமான உயிரென்றும் பிரபஞ்சத்தை நாம் முற்றிலும் அறிந்துகொள்ளவில்லையே என்ற அதிருப்தியும், என் மனத்தில் தோன்றின. இயற்கையின் மகிமையை வியந்த வண்ணம் ஓட்டல் கம்மோடோருக்குத் திரும்பினேன்.

செய்தித் தாளைப் புரட்டுகிறோம். 'ரயிலிலிருந்து விழுந்து மரணம்', 'கத்திக் குத்து', 'படுகொலை', 'படகு கவிழ்ந்தது' என்பன போன்ற செய்தித் தலைப்புக்களே நம் கவனத்தை முதலில் ஈர்க்கின்றன. 'காந்தியடிகள் அறிவுரை' 'இந்தியா-பாகிஸ்தான் உடன்பாடு' போன்ற பயன்மிக்க செய்திகளைவிட மேலே சொன்ன அவலத் தலைப்புகளே நம் உள்ளத்தை விரைவாகக் கவர்வதற்கு என்ன காரணம்?

கலையும் கண்ணீரும்

டாக்டர்-மு. வரதராசன், M.O.L., PH.D.

துன்பம் மக்களின் பொதுவுடைமை; ஆயினும் துன்பம் எய்தும்போது அதைப் பல்வேறு வகையாக மக்கள் உணர்கின்றார்கள். துன்ப உணர்வு பலவகையாக இருப்பினும், துன்பம் அவர்களின் உள்ளத்தின் ஆழத்தை உள்ளவாறு காட்டவல்லதாக இருக்கின்றது. கலைஞர் அல்லாத மற்ற மக்கள் துன்பத்தை உணர்வதோடு நின்றுவிடுகின்றனர். கலைஞரோ, தாம் துன்பம் உணர்வதோடு நிற்காமல் உணரும் துன்பத்தை ஆராய்ந்து காண்கின்றனர்; அந்த அனுபவத்தைக் கொண்டு மற்றவர்களின் துன்பத்தையும் அளந்தறிகின்றனர். அவ்வாறு ஆராய்ந்து உலகிற்கு உணர்த்திய பெருமக்களே இளங்கோவடிகள், கம்பர் முதலானோர். மக்களுள் பெரும்பாலோர் உலகம் என்னும் நாடக அரங்கில் நடித்த பின் பயன் அறியாமல் மறைந்து போக, கலைஞர் பெருமக்களோ தாம் நடிப்பதோடு பிறர் நடித்தலையும் கண்டு ஆராய்கின்றனர். அந்த ஆராய்ச்சியின் பயனாக, உலகுக்குக் கலைச் செல்வத்தை ஆக்கி அளிக்கின்றனர்.

வாழ்க்கையில் நேரும் துன்பத்தை மக்கள் அனைவரும் வெறுக்கின்றனர். ஆயினும் கலைவடிவு பெறும் துன்பத்தை எவரும் வெறுப்பதில்லை. வீட்டிலும் நாட்டிலும் துன்பத்தைத் துடைக்க முயலும் மனம், பாட்டிலும் நாடகத்திலும் துன்பத்தை வரவேற்கின்றது. ஆழ்ந்து நோக்கினால், காவியம் ஓவியம் இசை நாடகம் முதலியவற்றில் துன்பப் பகுதி உள்ளத்தைக் கொள்ளை கொள்வதுபோல் இன்பப் பகுதி உள்ளத்தைக் கவர்வதில்லை. சிலப்பதிகாரத்தில் மதுரைக் காண்டம் பல முறை கற்கப்படுவதற்கும், கம்பராமாயணத்தில் அயோத்தியா காண்டமும் சுந்தர காண்டமும் திரும்பத் திரும்பப் படிக்கப்படுவதற்கும் காரணம் இதுவே. ஷேக்ஸ்பியர் என்னும் ஆங்கிலப் பெரும் புலவர் இன்ப நாடகமும் துன்ப நாடகமுமாகப் பலவற்றை இயற்றியிருந்தும், அவருடைய துன்ப நாடகங்களே சிறந்தனவாகப் போற்றப்பட்டு விளங்குவதற்கும் இதுவே காரணம்.

இந்த உண்மையை விளக்க, அரிய காவியங்களையும் நாடகங்களையும் ஆராயவேண்டியதில்லை. ஒரு சிறிய எடுத்துக்காட்டே போதும். நன்றாக வரையப்பட்ட ஓவியம் இரண்டு எடுத்துக் கொள்வோம். ஒன்று, அரசன் ஒருவன் முடி சூடும் காட்சி; அமைச்சரும் ஆன்றோரும் உற்றாரும் மற்றோரும் சூழ்ந்து மகிழ அரசன் முகம் மலர்ந்து முடிசூடும் காட்சி. மற்றொன்று, அரசன் உயிர் நீங்கும் காட்சி; அரசியும் மக்களும் அரச குடும்பத்தினர் பிறரும் அமைச்சர் முதலானோரும் சூழ்ந்து கண்ணீர் விட அரசன் கட்டிலில் கிடந்து கலங்கி உயிர் விடும் காட்சி. இந்த இரண்டில், காண்பவரின் உள்ளத்தைக் கவரவல்லது எது? முடி சூடும் படமா? உயிர் நீங்கும் படமா? முடி சூடும் படத்தைக் காண்பவர் போற்றுவர், வியப்பர்; அவ்வளவே. உயிர் நீங்கும் படத்தின் காட்சியோ காண்பவரை நெடு நேரம் அமைதியில் ஆழ்த்தி உள்ளத்தை உருக்கிவிட வல்லதாகும்.

வாழ்க்கையில் துன்பம் வேண்டாம், துன்பக் கண்ணீர் வேண்டாம், நாள்தோறும் நரிமுகத்தில் விழித்தலே வேண்டும் என்று எல்லோரும் விரும்புகின்றனர். ஆயினும் கலையுலகில் துன்பக்காட்சியைக் காணவும் துன்பக் குரலைக் கேட்கவும், துன்பத்தால் கசிந்து கண்ணீர் விடவும் எவரும் தயங்குவதில்லை. இவ்வாறு வாழ்க்கையில் தடுக்க முயலும் ஒன்றைக் கற்பனையில் விரும்பி வரவேற்பதற்குச் சிறந்த காரணம் இருக்க வேண்டும். அத்தகைய காரணம் என்ன?

வாழ்க்கையில் துன்பம் காணும் போது அந்தத் துன்பத்திலிருந்து தப்பி ஓட அலைகிறோம்; நண்பனுக்குத் துன்பம் வரும்போது அவனைத் துன்பத்திலிருந்து காத்து உதவ அலைகிறோம்; தப்பும் முயற்சி பயன்படாதபோது முன்னிலும் மிகுதியாக வருந்துகின்றோம். ஆனால், கலையுலகில் துன்பம் காணும்போது அவ்வாறு தப்பி ஓடவேண்டும் என்று எண்ணுவதில்லை; அலைவதில்லை; கலையுலகப் பாத்திரங்களான தலைவன் தலைவி முதலானவர்களைக் காப்பாற்ற முயலுவதில்லை; உணர்ந்து உருகும் அளவில் மனம் நிலை பெறுவதால் அலைவு இல்லாமல் அமைதியே விளைகின்றது. எண்ணங்கள் பலவாய்ப் பிரிந்து கவலைப்படும் நிலைமை இல்லை; ஒன்றுபட்டு உணர்வில் கலக்கின்றன. அதனால் துன்பக்கலை உள்ளத்திற்கு அமைதி நல்குகிறது. வழி ஒன்றாக அமையாமல் இரண்டு மூன்றாகப் பிரியும் இடத்தைக் 'கவலை' என்பது பழைய வழக்கு. எண்ணங்களும் அவ்வாறு பிரிந்து அலைவதையே கவலை என்று குறிப்பிடுவர். அவ்வாறு அலையாத கவலையற்ற நிலை இந்தக் கலையுணர்வில் உள்ளது. வாழ்க்கையில் கவலையை வளர்க்கும் துன்பம், கலையுலகில் கவலையைத் தீர்க்கும் மருந்தாக அமைவது வியப்பாகவே உள்ளது. அதனால் தான் வாழ்க்கையில் கனவிலும் வேண்டத் தகாததாக உள்ள துன்பம், கலையுலகில் ஒன்பது சுவைகளுள் ஒரு சுவையாகப் போற்றப் படுகின்றது. கலையுலகில் இன்பமும் ஒரு சுவை; துன்பமும் ஒரு சுவையே.

> நகையே அழுகை இளிவரல் மருட்கை

என்று தொல்காப்பியனார் எட்டு மெய்ப்பாடுகளுள் ஒன்றாக அழுகையைக் கூறியுள்ளார். அதனையே பிற்காலத்தார் அவலச்சுவை என்றனர். அழுகை, அவலம், துன்பம் என்றெல்லாம் பெயர் பெறும் ஒன்று, சுவை என்று போற்றப்படுமாறு அதையே கலை மாற்றியமைக்

கின்றது. வாழ்க்கையில் வரும் துன்பம் மன ஒருமைப்பாட்டைக் குலைப்பதும், கலையில் அமையும் அவலச்சுவை ஒருமைப்பாட்டை விளைப்பதுமே இதற்குக் காரணமாகும்.

மற்ெருரு காரணம் கூறுவாரும் உளர். ஒருவர் உள்ளத்தில் பதிந்துள்ள இன்ப உணர்வை எவ்வாறேனும் எவரிடத்திலேனும் முழுவதும் வெளிப்படுத்த வேண்டும் என்ற தூண்டுதல் உள்ளத்தில் அவ்வளவாக இல்லை. ஆனுல், துன்ப உணர்வை எவ்வாறேனும் எவரிடத்திலேனும் வெளிப்படுத்த உள்ளம் ஓயாமல் தூண்டுகின்றது. இன்ப உணர்வு வெளிப்படாமல் உள்ளத்தில் தேங்கி நிற்பதால் தீங்கு ஒன்றும் இல்லை. நன்மையே உண்டு. ஆனுல், துன்ப உணர்வு அவ்வாறு வெளிப்படாமல் உள்ளத்தில் தேங்கினுல், உள்ளம் தாங்க முடியாமல் முறியும்; உடல் நைந்து கெடும். ஆகையால், உள்ளம் கலந்த ஒருவரைத் தேடி அவரிடம் துன்ப உணர்வைக் கொட்ட முயல்கின்ருேம். மெய்யுணர்வாளர் இதற்கு விதிவிலக்குத்தான். ஆனுல், காரணம் வேறு. அவர்கள் துன்ப உணர்வுக்கு உள்ளத்தில் இடம் தருவதே இல்லை. துன்புற்றுக் கொண்டே அந்தத் துன்பத்தைப் பிறர்க்கும் புலனுகாமல் மறைக்கின்றனர் என்பது தவறு. துன்பம் அவர்களுக்கு நேர்கின்றது; ஆனுல், அவர்களின் உள்ளத்தைத் தாக்குவதில்லை. இன்பமும் துன்பமும் அவர்களுக்கு உண்டு. இன்பத்துள் இன்பம் விழையாமலும், துன்பத்துள் துன்பம் உருமலும் வாழும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு. ஆதலின் அவர்களின் நிலை வேறு. மற்றவர்கள் இவ்வாறு தம் துன்ப உணர்வை வெளிப்படுத்தவே உள்ளம் கலந்த நண்பரை நாடுகின்றனர். உண்மையாக உள்ளம் கலந்த நண்பர்களே கிடைத்தற்கு அரியர். கிடைத்தற்கு எளியதாய் உள்ளது கலையுலகம். துன்பக் கலையின் வாயிலாகத் துன்ப உணர்வை வெளிப்படுத்தி உள்ளத்தின் சுமையைக் குறைப்பது எளியது. அவலச்சுவை நிரம்பிய காவியம் கற்றல், அவலச் சுவையான இசை கேட்டல், துன்ப நாடகம் காணல் முதலியவற்ருல் உள்ளத்தின் துன்ப உணர்வு முழுவதுமாக வெளிப்படுகின்றது. கலையுலகக் கற்பனையான தலைவன் தலைவி முதலானேரிடம் துன்ப உணர்வெல்லாம் பாய்ந்துவிடுவதால், உள்ளம் திறந்த வெளியாகின்றது. எத்தகைய ஆழ்ந்த துன்பமும் உள்ளத்தில் ஒதுங்கியிருப்பதற்கும் ஒளித்திருப்பதற்கும் இடம் இல்லை. இவ்வாறு உள்ளத்தின் சுமையைக் குறைப்பதற்கு நண்பர்போல் உறுதுணை செய்வது அவலச் சுவை அமைந்த கலையே ஆகும். பண்புடைய நண்பரின் தொடர்பையும் நல்ல நூலின் பயிற்சியையும் திருவள்ளுவர் ஒப்பிட்டுக் கூறிய உண்மை இங்குக் கருதத் தக்கது. வாழ்க்கையில் பண்புடைய நண்பர் வாய்ப்பது அருமை; ஒருவரோ இருவரோ வாய்த்தாலும், அவர் நாம் வாழும் ஊரிலேயே—நாம் வாழும் இடத்திலேயே வாழ்வது அருமை. நாம் வேண்டும்போது நம் துயர் களைய உடனுக்குடன் வந்து உதவுவதும் அருமை. ஆகவே, அவர்களை நாடிச் சென்றே பயன்பெற வேண்டியுள்ளது. ஆயின், கலையின் துணை அத்தகையது அல்ல. ஒரு முறை பயின்ற காவியம் நாம் வேண்டும் போதெல்லாம் நமக்கு வந்து உதவும். நம்மையும் நாம் பயின்ற கலையையும் பிரித்திட எதனுலும் முடியாது; காலமும் இடமும் பிறவும் பிரிக்க முடியாத தொடர்பு

இது. ஆகவே, துன்பச் சுமையைக் குறைப்பதில் நண்பரின் உதவியை விட, காவியம் முதலியவற்றின் உதவி சிறந்தது எனலாம்.

ரிச்சர்ட்ஸ் (I. A. Richards) என்னும் ஆங்கில இலக்கிய ஆராய்ச்சியாளர் வேறொரு வகைக் காரணம் கூறி, கலையுலகில் துன்பம் விரும்பத் தக்கதாக இருப்பதை விளக்குகிறார். ஒவ்வாத நேர்மாறான பண்புகள் அவலச் சுவையில் ஒத்தனவாய் இயைந்து அமைந்துள்ளன. அணுகுவதற்கு உரிய இரக்கம் என்னும் உணர்ச்சியும், அகல்வதற்கு உரிய அச்சம் என்னும் உணர்ச்சியும் அவலச் சுவையில் ஒருங்கு இயைக்கப்படுகின்றன. இத்தகைய இயைபு வேறு எங்கும் இல்லை. இவைபோல் வேறு பல உணர்ச்சிகள் இயைவதற்கும் இடம் உள்ளது. அதனால்தான் ஒருவகை விடுதலை உணர்ச்சி, நெருக்கடிக்கு இடையே ஓய்வு உணர்ச்சி, நடுநிலையான அமைதி உணர்ச்சி இவற்றை அவலச் சுவையால் பெற முடிகின்றது. இரக்கம், அச்சம் முதலிய உணர்ச்சிகள் ஒரு முறை தோன்றியபின் அவை ஓய்வதற்கு வேறு வழியே இல்லை. அந்த உணர்ச்சிகள் அடக்கப்படுதல் உண்டே தவிர, இவ்வாறு ஓய்வு பெறுதல் வேறு எங்கும் இல்லை என்கின்றார் அவர். (What clear instance of the balance or reconciliation of opposite and discordant qualities can be found than Tragedy? Pity, the impulse to approach, and Terror, the impulse to retreat, are brought in Tragedy to a reconciliation which they find nowhere else, and with them who knows what other allied groups of equally discordant impulses...... This is the explanation of that sense of release, of repose in the midst of stress, of balance and composure, given by Tragedy, for there is no other way in which such impulses once awakened, can be at rest with out suppression—Principles of Literary Criticism.)

அறிஞர் ரிச்சர்ட்ஸ் வழக்கம் போல் நுண்மையான கருத்துக்களைக் கொண்டு இதனை விளக்க முயல்கின்றார். இருவகை உணர்ச்சிகள் ஒத்து இயைவதே அவலச் சுவையின் இன்பத்திற்குக் காரணம் என்று அவர் கூறினார். இரக்கமும் அச்சமுமாகிய இருவகை உணர்ச்சிகளும் துன்பக் காவியங்கள் நாடகங்கள் எல்லாவற்றிலும் அவ்வாறு ஒத்து இயைவதாகக் கூறுவதற்கில்லை. சிலவற்றில் இரக்கம் சிறந்து நிற்கின்றது; வேறு சிலவற்றில் அச்சம் மேற்பட்டு நிற்கின்றது. ஆதலின் அவருடைய கருத்து எல்லாவற்றிற்கும் பொருந்தியதாகக் கொள்வதற்கில்லை. ஒரு சில காவியங்களுக்கும் நாடகங்களுக்கும் பொருந்தும் கருத்தாகக் கொள்ளலாம்.

அறிஞர் லுகாஸ் 'அவலச் சுவை' என்னும் நூலில் கூறும் மற்றொரு காரணம் ஏற்புடையதாக உள்ளது. வாழ்க்கையில் மேன்மேலும் அனுபவம் பெறவேண்டும் என்றே எல்லாரும் விரும்புகின்றனர். அனுபவம் பெறுவதில் எவரும் சலிப்பதில்லை. அதற்கு ஊழ் தடையாக இருக்கலாம்; பலவகை அனுபவங்களைப் பெறமுடியாத குறை ஏற்படலாம். ஆனால், கற்பனையின் துணையால் அவற்றைப் பெறுவதற்கு நமக்கு முழு உரிமை உண்டு. வாழ்க்கையில் பெற முடியாத குறையைத் தீர்க்கக் கற்பனையுலகம் காத்திருக்கின்றது. அதனால்தான் கதைகள் ஏற்பட்டன. வாழ்க்

கையில் அடிக்கடி துன்பம் காணப்படுவதால், கதைகளும் துன்பம் மலிந்தனவாக ஏற்பட்டன. வாழ்க்கை அனுபவிப்பதற்கு எப்படிப்பட்டதாக இருந்தாலும், காண்பதற்குக் கவர்ச்சியானதாகவே உள்ளது. ஆகவே, துன்ப உணர்ச்சிகளைப் புகட்டும் கலையை நாடுகின்றோம். உள்ள உணர்ச்சிகளைத் துறப்பதற்காக அவற்றை நாடவில்லை; அவற்றை மேன் மேலும் நிறையப் பெறுவதற்காகவே துன்பக்கலையை நாடுகின்றோம் என்கின்றார். (Experience, ever more experience, is our craving. Fortune may starve us, but we are free atleast to dream. This imaginary world is there to redress the balance of the real. That is why stories were invented. And since life is often unhappy, so the stories had to be......Life is fascinating to watch, whatever it may be to experience. And so we go tragedies not in the least to get rid of emotions, but to have them more abundantly—F. L. Lucas–Tragedy). மேலும் ஆராய்ந்தபின், அவர் கூறுவது மிகப் பொருத்தமாக உள்ளது. வாழ்க்கை பயனற்றதாகவும் குழப்பமான தாகவும் உள்ளது என்றும் அவலச்சுவை அமைந்த கலையுலகம் ஒழுங்கு மிக்கதாக உள்ளது என்றும், அதனால் வாழ்க்கையில் சிக்குண்பதை விடக் கலையை நுகர்வது விரும்பத்தக்கதாக உள்ளது என்றும் கூறுகின்றார். இரக்கமில்லாமல் கொடுமை செய்து அழிக்கும் உலகிற்கு மனிதன் இரையாகின்றான் அல்லவா? அத்தகைய கொடிய உலகத்திற்கு மனிதன் தரும் மாற்றமே அவலச்சுவைக் காவியமும் நாடகமும்; ஊழ் மனிதனைச் சீறுகின்றது; மனிதன் அமைதியாக இருந்து அதையே கலையாக வடித்து மாற்றுகின்றான்—என்று தெளிவாக்குகின்றார்.

இவ்வாறு வாழ்க்கையை ஒட்டி அமைந்ததே கலை. ஆயினும் வாழ்க்கை வேறு, கலை வேறு. வாழ்க்கையின் பயனாக இன்பம் என்றும் துன்பம் என்றும் இரண்டு உள்ளன. ஆனால், கலையில் இன்பம் என்பது ஒன்றே பயனாக உள்ளது. வாழ்க்கையில் துன்பமாக உள்ள ஒன்றே கலைவடிவு பெறும்போது தூய இன்பமாகப் பயன் தருகின்றது. இரும்பைப் பொன்னாக்கும் இரசவாத வித்தையை விட, கண்ணீரைக் கலையாக மாற்றும் இந்த வித்தை வியத்தற்குரியது. வாழ்க்கையில் வரும் துன்பக் கண்ணீருக்கு மாற்றாக, அந்தக் கண்ணீரையே இன்பக் கலையாக்கிப் பயன்படுத்தும் கற்பனைத் திறன் வாழ்க!

‘கலைக்கதிர்’

ஆண்டுச் சந்தா ரூ. 6

கலையின் களஞ்சியம் சிந்தனைச் செல்வம்

REGISTRAR OF BOOKS
28 JUN 1950
MADRAS

கடல்—ஒரு பச்சோந்தி

திரு. மு. அறம்வளர்த்தான், M. A.

'இதை எப்படி நம்புவது?' என்று தோன்றும்; ஆனால், இது கற்பனையில் முளைத்த கட்டுக்கதை அல்ல. மூன்று ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவின் ஒரு பகுதியாகிய பிளாரிடாவில் (Florida) சுமார் மூன்று மாதங்கள் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சி ஆகும். 1949ம் ஆண்டின் இறுதியில் நாம் அங்கு இருந்திருப்போமானால் நேரிலேயே பார்த்திருக்கலாம்.

பிளாரிடாவின் கடற்கரையை ஒட்டிய ஊர்களில் வாழ்ந்தவர்களுக்கெல்லாம் அன்று ஒரு புதுமையான அனுபவம் ஏற்பட்டது. உடல் நலத்திற்கு ஒரு குறைவும் இல்லாமல் படுக்கச் சென்றவர்கள் காலையில் விழிக்கும்போது, தும்மிக்கொண்டும் இருமிக்கொண்டும் விழித்தார்கள். விலக்கு என்பது இல்லாமல் ஊரில் உள்ள யாவரும் தும்மிக்கொண்டும் இருமிக்கொண்டும் எழுந்தார்கள்! ஒருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. அவர்களுடைய முகங்கள் அத்தனையும் கேள்விக் குறிகளாகக் காட்சியளித்தன.

கடலிலிருந்து கரையை நோக்கி அடித்த காற்றில், எரிச்சல் தரக்கூடிய ஏதோ ஒரு வாயு கலந்திருப்பதாகத் தோன்றியது. கண்ணைக் கசக்கிக்கொண்டும், மூக்கைச் சிந்திக்கொண்டும் அவர்கள் கடற்கரைக்கு ஓடினார்கள். அங்கு என்ன கண்டார்கள் தெரியுமா? கடல் நீர் எல்லாம் செக்கச் செவேலென்று இரத்தம்போல் சிவந்திருந்தது! கரை ஓரத்திலெல்லாம் இறந்த மீன்கள் கூட்டங் கூட்டமாக ஒதுக்கப்பட்டுக் கிடந்தன! இன்னும் ஒதுக்கப்பட்டுக் கொண்டும் இருந்தன! இறந்து கிடந்த மீன்களைக் கடற்பறவைகள் கொத்தி எடுத்துக்கொண்டு பறந்தன. ஆனால், என்ன ஆச்சரியம்! ஒரு சில கணங்களில் அந்தப் பறவைகளும் சோர்வுற்றுச் சுழன்று கீழே விழுந்து இறந்து போயின!

இவற்றையெல்லாம் பார்த்து வியந்த மக்கள் கடலருகே சென்றனர். அருகே செல்லச் செல்ல, அவர்களுடைய தும்மலும் இருமலும், கண்கரிப்பும் மிகுதியாயின! ஒருவன் கொஞ்சம் கடல் நீரை வீட்டுக்கு எடுத்து வந்து அடுப்பில் வைத்துக் காய்ச்சிப் பார்த்தானாம். அதிலிருந்து வெளி வந்த வாயு அவனைச் சுற்றிப் பரவவே அவன் போட்ட தும்மலும், இருமிய இருமலும், மூச்சுவிடத் திக்குமுக்காடிப்போன 'திறமும்' அங்கிருந்த மற்றவர்களைக் கதிகலங்க வைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

அமெரிக்காவை விட்டு ஜப்பானுக்குச் செல்வோம். ஆகாயவிமானத்தில் ஏறி ஜப்பானின் மேற்குக் கடற்கரையோரமாக நாம் பறந்து சென்றால், சில மாதங்களில்—

பொதுவாக ஆகஸ்டு--செப்டம்பர் மாதங்களில், கடல் கடலாகக் காட்சியளிக்காது; செவலை நிற மான பரந்த சதுப்பு நிலம்போன்று தோன்றும்! ஜூன்–ஜூலை மாதங் களில் ஐரோப்பாவில் உள்ள பால் டிக் கடலின் மேல் பறந்து சென் ருல், கீழே பல நூற்றுக்கணக்கான சதுர மைல் அளவுக்குக் கடல் பச் சைப் பசேலென்று புல்வெளியாக மாறியிருப்பதைக் காணலாம்.

இந்தியக் கடல்களில் இது போன்று நிகழ்வதை நாம் பார்த்த தில்லை; நிகழ்ந்ததாகக் கேட்டது மில்லை. ஒரு சமயம் திருப்பாற் கடலில் செந்தூள் எழுந்தது என்று ஒரு புலவர்வாயிலாகக் கேள் விப் படுகிறோம். ஏதோ வருத்தம் காரணமாகத் திருமகள் தன் மார் பில் அடித்துக்கொள்ள, அங்கி ருந்த செம்பஞ்சுக் குழம்பு தூளா கிக் கடல் எங்கும் பரந்து விட்ட தாம். அதனுல் திருப்பாற்கடல் தீப்பிடித்தது போல் காட்சி அளித் ததாம். கற்பனையின் ஆழ அகல நீளங்களை எல்லாம் எல்லை தட்டு மட்டும் எட்டிப்பிடித்த இடைக் காலப் புலவர்களில் ஒருவருடைய கவிதைக் காட்சி இது.*

திருப்பாற்கடல் செந்தூள் எழுந் தது கற்பனை உலகில். அதில் வியப்பு அடைவதற்கு ஒன்றும் இல்லை. ஆனுல் காரிய உலகில், அமெரிக்கா வில் உள்ள பிளாரிடாவில், 1946ம் ஆண்டு இறுதியில், 'கடல் தீப் பிடித்தது' என்ருல் யாரும் வியப் படையாமல் இருக்க முடியாது. நாம் வியப்பதோடு நின்று விடு வோம். ஆனுல் வியப்புக்குப் பின் தான் விஞ்ஞானியின் வேலை தொடங்குகிறது. "வியப்புக்குக் காரணம் அறியாமை, அறியாமைக் குக் காரணமும் வியப்பே." அறி யாமையைப் போக்குவதுதானே விஞ்ஞானத்தின் வேலை.

* * * *

கடலும் வானமும் ஒரே நிற முடையவை. அவை நீலநிறம் பெறுவதற்கான காரணமும் ஒன்றே. கடல் நீருக்கு எனத் தனியாக நிறம் கிடையாது. கடல் நீரைக் கையில் எடுத்தால் அது நிறமற்றுப் போவது தெரியும். அதுபோல வானத்துக்கும் உண் மையிலே நிறம் கிடையாது. ஆனுல், கடலும் வானமும் நீல நிறம் பெறுவதற்குக் காரணம் சூரியனிலிருந்து வருங் கதிர்களின் ஒளிச் சிதறலாகும் (Scattering of light). ஆகாயத்தில் உள்ள நுண் ணிய துகள்கள் (particles) சூரிய னின் கதிர்களைச் சிதறச் செய்வ தால் வானம் நீலநிறம் பெறுகிறது என்றும், நீரிலுள்ள நுண்ணிய அணுக்கள் அவ்வாறு செய்வதால் கடல் நீலநிறம் அடைகிறது என் றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

நடுக்கடல் தீர்ந்த நீலமாய் இருக் கும். ஆனுல், கரையருகே அவ்

---

* காளமேகப் புலவர் பாடிய பாட்டு இங்கே குறிக்கப் பெறுகிறது.

சுத்தபாற் கடலின் நடுவில் தூளி
தோன்றிய அதிசய மதுகேள்
மத்தகக் கரியை உரித்தவன்மீது
மதன்பொருது அழிந்திடு மாற்றம்
வித்தகக் கமலை செவிபுறக் கேட்டாள்
விழுந்துநொந்து அயர்ந்தழுது ஏங்கிக்
கைத்தல மலரான் மார்புறப் புடைத் தாள்
எழுந்தது கலவையின் செந்தூள்.

இச்செய்யுள் 'கடல் நடுவிற் செந்தூள் எழப்பாடியது' என்ற தலைப்பின்கீழ் வழங்கும் (பெருந்தொகை 1601)

வளவு நீலமாய் இருக்காது; மஞ்சள் அல்லது பச்சைகலந்த நீலமாய் இருக்கும். நீரில் கரைந்துள்ள ஒருவகை "மஞ்சட் பொருளே" இதற்குக் காரணம். கடலில் உள்ள பல்வேறு வகையான பாசிகளிலிருந்து இந்த மஞ்சட்பொருள் உண்டாகிறது.

ஆறுகள் கடலோடு கலக்கும் இடங்களிலும் நீர் தெளிந்து நீலமாக இருக்காது. இதற்குக் காரணம், நீரில் கலந்துள்ள உலோக உப்புக்களாகும்.

மஞ்சட் பொருளோ, உலோக உப்புக்களோ கடல் நீரில் கரைந்திருப்பதால் அதன் இயல்பான நீல நிறம் மாறுகிறது. கடலின் நிற மாறுதலுக்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. அதுவே நமக்கு இங்கு முக்கியமானதாகும். பல்வேறு வகைப்பட்ட நுண்ணிய உயிர்கள் நீரில் மிதந்து வாழ்கின்றன. அவை விலங்கினத்தைச் சேர்ந்தவையாயும் இருக்கலாம்; அல்லது செடி இனத்தைச் சேர்ந்தவையாயும் இருக்கலாம். இரு இனங்களையும் சேர்ந்த உயிரணுக்கள் (Cells) கடல்நீரில் மிதந்து வாழ்கின்றன. கடலின் மேல் தளத்தில் மிதந்து நிற்கும் இவ் உயிர் அணுக்களை யெல்லாம் மொத்தமாகச் சேர்த்து ஆங்கிலத்தில் Plankton என்று கூறுகிறார்கள்.

பிளாங்க்டனில் உள்ள உயிரணுக்கள் பலவகைப் பட்டவை. ஒவ்வொரு வகையும் ஒவ்வொரு நிறமுடையது. பிளாங்க்டனில் எந்தவகை மேம்பட்டு நிற்கிறதோ அதன் நிறமே கடலின் நிறமாகி விடும்.

சாதாரண காலங்களில் பிளாங்க்டனில் உள்ள பல்வேறு உயிரினங்களின் இடையே சமநிலை நிலவுகிறது. ஆனால், அடிக்கடி சில சில காரணங்களை முன்னிட்டு, இந்தச் சமநிலை (Equilibrium) குலைவு படுகிறது. ஒருவகை உயிரினம் திடீரென்று மிகுதியாகப் பெருகத் தொடங்கிவிடுகிறது. அதனால் பிற இனங்கள் அழிய நேரிடுகிறது. பெருகிவிட்ட இனத்தின் நிறம் எதுவோ, அந்த நிறத்தைக் கடல் பெற்றுவிடுகிறது. தன் இயற்கையான நீல நிறம் மாறி, செவலையோ, பச்சையோ, சிவப்போ அல்லது வேறு எந்த நிறமோ அடைந்து விடுகிறது. இவ்வாறு திடீரென்று ஏற்படும் "நிறமாற்ற"த்தை ஆங்கிலத்தில் "blooming" அல்லது "discoloration" என்று அழைக்கிறார்கள்.

இது போன்ற நிற மாற்றம் கடலில் மட்டுந்தான் நிகழ்வதாக எண்ணவேண்டியதில்லை. நம் ஊர் அருகே உள்ள நீர் நிலைகளின் நிறத்தைத் தொடர்ந்து கவனித்து வருவோமானால் அது எத்தனையோ மாற்றங்கள் அடைவதைக் காணலாம்.

நகரங்களின் தண்ணீர் வசதிக்காகக் கட்டியிருக்கும் நீர்த் தேக்கங்களிலும் இந்த 'நிற மாற்டம்' ஏற்படுவது உண்டு. நிற மாற்றம் ஏற்படும்போது ஒரு விதமான கெட்ட நாற்றமும் உடன் உண்டாகிறது. நீரைத் தூய்மைப்படுத்துவதற்காக இரசாயனப் பொருட்கள் வேறு சேர்ப்பதால் நீரின் நாற்றம் இன்னும் 'முன்னேற்றம்' அடைந்து விடுகிறது! இதனால்தான் சில சமயங்களில், நகரத்துக் குழாய்களில் வரும் நீரைக் 'கண்டோ, உண்டோ, உயிர்த்தோ' அனுபவிக்கிறது என்றால் அவ்வளவு எளிதாக முடிவதில்லை.

* * * * *

கடலில் ஏற்படும் நிற மாற்றங்களில் மூன்றே முக்கியமானவை:

1 செவலே. 2. நீலப்பச்சை. 3. சிவப்பு.

அமெரிக்காவில் வாஷிங்டன் கடற்கரையில் ஒரு ஆண்டில் பல தடவைகள் நிற மாற்றம் ஏற்படுகிறது. வான நிலேயில் சில மாறுதல்கள் நிகழும்போது இது ஏற்படுகிறதாம். இதற்குக் காரணமான உயிரணுக்கள் (Aula codiscus kittoni) மிக வேகமாகப் பரவுகின்றன. ஒரு சில மணி நேரத்தில் கடலின் மேல்தளம் எல்லாம் செவலே நிறப் பரப்பாகக் காட்சியளிக்கும். ஜப்பானில் ஆகஸ்ட்–செப்டம்பர் மாதங்களில் இத்தகைய நிற மாற்றம் ஏற்படுகிறது. இங்கிலாந்துக்கருகில் உள்ள வட கடலில் (North Sea) இந்த நிற மாற்றம் ஏற்படும் பகுதிகளில் ஹெர்ரிங் என்ற மீன் வசிக்கிறதில்லேயாம்.

ஜப்பான், பிரேசில், மெக்சிகோ முதலிய நாடுகளில் கடல் சில காலங்களில் நீலப் பச்சை நிறம் அடைகிறது. பால்டிக் கடல் பசும் புல்வெளிபோல் தோன்றுமாம். இதற்குக் காரணமான உயிரணுவில் (Myxophyceae) இரண்டு வித வர்ணங்கள் உள்ளன. 1 நீலப் பச்சை. 2. சிவப்பு. சிவப்பு வர்ண அணுக்கள் மிகுதி யாகிவிட்டால் கடல் சிவப்பு நிறமடையும் செங்கடல், வெர்மிலியன் (குங்குமக்) கடல் இதற்கு எடுத்துக்காட்டுக்களாகும். பச்சை வர்ண அணுக்கள் மிகுந்தால் பச்சை நிற மாற்றம் ஏற்படும்.

செவலே, பச்சை நிறமாற்றங்களே விடச் சிவப்பு நிற மாற்றமே மிக முக்கியமான தாகும்; மிகக் கொடுமையானதும்கூட.

1832-ல் புகழ்பெற்ற விஞ்ஞானி டார்வின் சில்லி (Chile) நாட்டின் கடற்கரையோரமாகக் கப்பல் பயணம் செய்தபோது கடல்நீர் மங்கிய சிவப்பாய் இருப்பதைக் கண்டார். ஒரு துளி நீரை அணுப் பெருக்கியின் (Microscope) கீழ் வைத்து ஆராய்ந்தபோது, நுண்ணிய உயிர்கள் பல துள்ளிக்கொண்டும், முட்டி மோதிக்கொண்டும் இருப்பது தெரிந்தது.

பிற நிறமாற்றங்களுக்கும் இந்தச் சிவப்பு நிற மாற்றத்துக்கும் ஒரு முக்கியமான வேற்றுமை உண்டு. பிறவற்ருல் கடலில் உள்ள உயிரினங்கள் சாவ தில்லே. சிவப்பு நிற மாற்றம் காரணமாகக் கடலில் வாழும் மீன்கள், முத்துச் சிப்பிகள், நண்டுகள், இன்னும் பிற உயிர்களும் இறந்துவிடுகின்றன.

கலிபோர்னியா, தென் ஆப்பிரிக்கா, பிரிட்டிஷ் கொலம்பியா, ஜப்பான் முதலிய நாடுகளில் சிவப்பு நிறமாற்றம் அடிக்கடி ஏற்படுகிறது. ஜப்பான் இதுபற்றி மிக்க கவனம் செலுத்தி ஆராய்ச்சி செய்துவந்திருக்கிறது. காரணம் இதன் விளேவாக ஜப்பானியக் கடலிலுள்ள முத்துச்சிப்பிகள் இறந்து விடுவதே ஆகும். இதைத் தடுப்பதற்காக ஜப்பானியர் பல வகையான முறைகளேக் கையாண்டு வருகிருர்கள்.

1946 நவம்பரில் தொடங்கி 1947 பிப்ரவரி வரை பிளாரிடாக் கடலில் நிகழ்ந்ததை விட, சிவப்பு நிறமாற்றத்துக்கு வேறு நல்ல எடுத்துக்காட்டு இருக்க முடியாது.

சுமார் மூன்று மாதங்கள் வரை அது நீடித்திருந்தது. மீன், கிளிஞ்சல் போன்ற சிற்றுயிர்கள் மட்டுமல்லாமல், ஆமை போன்ற பெரிய பிராணிகள்கூடக் கொல்லப்பட்டனவாம். கடற்கரைகளிலெல்லாம்

மீன்கள் கூட்டங் கூட்டமாக ஒதுக்கப்பட்டுக் கிடந்தனவாம். பெரிய உருளை எந்திரங்களின் உதவி கொண்டு அவை புதைக்கப்பட்டனவாம்.

சிவப்பு நிறமாற்றம் ஏற்படும் போது, கடலில் நஞ்சு உண்டாகிறது என்பது தெளிவு. சிவப்பு நீர்ப் பகுதியில் நுழைந்தவுடன் மீன்கள் இறந்துவிடுவதால் அந்த நஞ்சு மிகக் கொடியது என்பதும் தெளிவு. ஆனால், அந்த நஞ்சின் தன்மை, தோற்றம் முதலியன பற்றி இன்னும் ஒன்றும் திட்டமாகத் தெரியவில்லை. அவை பற்றி அமெரிக்க விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகிறார்கள். கடலில் நிறமாற்றங்கள் ஏற்படக் காரணங்கள் என்ன, அவற்றை முன்னோக்கி விலக்க முடியுமா, விலக்க வழிகள் என்ன, அவை துவங்கியபின் தடுக்க, நிறுத்த முறைகள் என்ன— முதலிய கேள்விகளைப் பற்றியும் அமெரிக்க விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகிறார்கள்.

இவ்வாராய்ச்சிகளால் பல புதிய விஞ்ஞான உண்மைகள் கண்டு பிடிக்கப்படலாம். சிறப்பாக, கடல் வாழ் உயிரினங்களைப்பற்றியும், நஞ்சுகளின் தன்மைகள் பற்றியும் புதிய செய்திகள் தெரியவரலாம்.

அறிஞரின் தியாகம்

"மேடையில் ஏறித் திட்டுவதை வீரமுழக்கம் என்கிறார்கள்; பத்திரிகைகளில் இவ்வாறு எழுதுவதை அஞ்சாத எழுத்து என்கிறார்கள். திட்டிப் பேசவும் தூற்றி எழுதவும் தெரியாதவர்களைப் பயங்காளிகள், கோழைகள், வீரமில்லாதவர்கள் என்று எண்ணுகிறார்கள்; நகையாடுகின்றார்கள். பொதுமக்கள் இந்தப் போக்கில் போகின்றார்கள்; அறிஞர்கள் அடங்கிக் கிடக்கின்றார்கள்.......... அறிஞர்கள் அடக்கமாக இருப்பதற்குக் காரணம் என்ன? அச்சம், கோழைத் தன்மை, வீரம் இல்லாமை என்று பிறர் தூற்றுகின்றவை பொய்யான காரணங்கள். உண்மையான காரணம் அறிஞர்களின் பரந்த நோக்கமே ஆகும்......... அவர்கள் உடனே விளைந்து ஒரு நாள் இருந்து மறையும் பயனை நாடவில்லை; நெடுநாள் நிலைத்து நிற்கும் பயனையே நாடுகின்றார்கள். அதனால் பல இடர்களுக்கும் பழிகளுக்கும் ஆளாகின்றார்கள். இது ஒருவகைத் தியாகம் ஆகும். உண்மையை ஆராய வல்லவர்கள் இதையே பெரிய தியாகம் என்றும் உணர்வார்கள்."

—டாக்டர்—மு. வ.

"மாகாண அரசினரும் சரி, மத்திய அரசினரும் சரி, பணத் தொல்லையால் அல்லற்படுவதைப் பார்த்தே வருகிறோம். இந்த நிலையில் 'எல்லோரும் படியுங்கள்' என்ற முழக்கத்தின் மூலம் கட்டாயக் கல்வி பரப்புவது நல்ல தொண்டாகினும் விரைவில் வெற்றி காணும் வழியன்று".

—பின்னே வேறு வழி ஏது? இதோ ஓர் இயக்கம்:

"எல்லோரும் கேளுங்கள்!"

திரு. ம. பொ. சிவஞான கிராமணியார்

தலைப்பைப் பார்த்தவுடன் என் மீது கேள்விகளை வீசிவிடாதீர்கள்! நான் கேட்கச் சொல்வது பிறரது அறிவை அளவெடுக்கும் கேள்வியன்று. தனது அறியாமையைப் போக்கிக்கொள்ளும் கேள்வியேயாகும். சரியாகச் சொன்னால், 'கேள்வி' என்பது வாயால் கேட்பதன்று; செவியால் கேட்பதாகும். இக்காலத்தில் வாயால் கேட்பதே கேள்வி என்ற வழக்கம் வந்துவிட்டதால், இந்த விளக்கம் தேவைப்பட்டது. இனி, பொருளில் புகுவோம்.

இந்தியா அடிமையிலிருந்து விடுதலை பெற்றுவிட்டது. ஆனால், அறியாமையிலிருந்து இன்னும் விடுதலை பெறவில்லை. மக்களில் நூற்றுக்குப் பத்துப் பேரே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் என்பது ஆட்சியாளர்களின் கணக்கு. அந்தப் பத்துப் பேரிலும், பகுத்தறிவாளர் எத்தனை பேர் என்பது சிந்திக்கவேண்டிய விஷயம்.

கடந்த காலத்தில் கல்வியைப் பற்றிய விஷயத்திலும், கற்றறிந்த சில மேதாவிகள் கூட மூடநம்பிக்கையில் மூழ்கிக் கிடந்தனர். "அடுப்பூதும் மங்கைக்குப் படிப்பெதற்கு?" என்று அடுப்பூதும் திறமையற்ற ஆண் மக்களில் பலர் கேட்டதுண்டு.

"ஒருவன் கற்றறிந்த புத்திமானாயிருப்பதும், இன்னொருவன் கல்லாத மூடனாயிருப்பதும் அவனவன் பாவ புண்ணியத்தின் பலனே" என்றனர், பழி—பாவத்திற்கஞ்சாதோர் சிலர். ஆனால், இந்தத் தவறான எண்ணங்களிலிருந்தெல்லாம் இன்றைய தமிழகம் விடுதலை பெற்று வருகிறது. என்றாலும், மற்றொரு மூட நம்பிக்கை மக்களின் அறிவு வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்துவருகிறது. அதாவது "படிப்பு" என்றவுடன் ஏட்டுப் படிப்புத்தான் எல்லோரது கவனத்தையும் கவர்ந்து வருகிறது. இது காரணமாகவே, ஏட்டுப் படிப்பு இல்லாதோரெல்லாம், கல்லாதாரெனக் கருதப்படுகின்றனர். இது, சந்திரனில் படிந்துள்ள களங்கம் போன்று, அறிவாளிகளிடையே இருந்துவரும் அறியாமையாகும். அறிவு பெறுவதற்கான சிறந்த சாதனம் ஏட்டுக் கல்வியே என்பதை எவரும் மறுப்பதற்

இல்லை. ஆனால், ஏட்டுக் கல்வி பெறமுடியாத நிலையில் உள்ளவர்கள், கேள்வி மூலம் அறியாமையைப் போக்கிக்கொள்ள முடியும். ஆம்; அறிவுத் திறமையைப் பெறுவதற்குக் கேள்வி ஞானமும் சிறந்த சாதனமாகும். அதனால்தான், "கற்றிலனாயினும் கேட்க!" எனக் கட்டளையிட்டார் வள்ளுவர்; மற்றும் திருக்குறளில், கல்வி என்ற அதிகாரத்தை அடுத்தே 'கேள்வி' என்ற அதிகாரம் இடம் பெற்றிருப்பதால், கல்வியைப்போன்றே கேள்வியாலும் அறியாமையைப் போக்கி, அறிவைப் பெருக்கமுடியும் என்பதும் புலனாகிறது.

கேட்பினும் கேளாத் தகையவே
—கேள்வியால்
தோட்கப் படாத செவி

என்ற குறளில், "கேள்வி ஞானத்தைப் பெறாத மக்கள் காது படைத்தும் செவிடர்களே" என்று கூறுகிறார் வள்ளுவர்.

கவியரசர் கம்பரும் இராம கதையில் (நகரப் படலத்துள்) "வெண்மையில்லைபல் கேள்வி மேவலால்" என்றார். அதாவது கேள்வி ஞானம் பெறுவதற்கு அயோத்தி மக்களுக்கு நிறைய வாய்ப்பு இருப்பதால் அவர்களிடையே அறியாமை இல்லை என்கிறார்.

"கல்லாருமில்லை கல்விமுற்ற
வல்லாருமில்லை"

என்றும் கூறுகிறார். கம்பரது கருத்தையும், வள்ளுவரின் கட்டளையையும் பின்பற்றித் தமிழகமெங்கும் கேள்வி ஞானத்தைப் பெருக்குவோமாயின் நூற்றுக்கு நூறு மக்களை அறிவுடையோராக ஆக்க இயலும். ஆனால், ஏட்டின்மூலம் கற்பதுதான் கல்வி—வானளாவும் கட்டிடத்தில் கற்பதுதான் கௌரவம் — தாய்மொழியையும் தாய் இனப் பண்பையும் புறக்கணித்து, அயல் மொழியையும் அம்மொழி வழிப்பட்ட பண்பையும் கற்பது தான் நாகரிகம் என்ற தவறான எண்ணங்கள் முதலில் மறைய வேண்டும்.

மாகாண அரசினரும் சரி, மத்திய அரசினரும் சரி, பணத் தொல்லையால் அல்லற் படுவதைப் பார்த்தே வருகிறோம். இந்த நிலையில் "எல்லோரும் படியுங்கள்" என்ற முழக்கத்தின் மூலம் கட்டாயக் கல்வி பரப்புவது நல்ல தொண்டாகினும் விரைவில் வெற்றி காணும் வழியன்று. "எல்லோரும் கேளுங்கள்!" என்ற கோஷத்தை எழுப்பி மக்கள் அனைவரும் கேள்வி ஞானத்தைப் பெறத் திட்டமிட்டுப் பணியாற்ற வேண்டும்.

தமிழ் மக்களுக்குக் கேள்வி ஞானம் பெற எத்தனையோ வசதிகளும் வாய்ப்புகளும் இருக்கின்றன. ஏட்டுக் கல்வி கற்றோரின் எண்ணிக்கை நூற்றுக்குப் பத்தாகவுள்ள இந்தக் காலத்திலும், தமிழ் நிலத்து மக்கள், வேறு எந்நிலத்து மக்களையும்விட அறிவில் மிக்கவராகவே திகழ்கின்றனர். காரணம், தமிழகத்தில் கேள்வி ஞானம் பெறுவதற்கான சாதனம் இயற்றமிழாக அல்லாமல் இசைத் தமிழாக இருப்பதே யாகும். இந்தப் பெரு வாய்ப்பு வேறு எந்த நாட்டு மக்களுக்கும் இருப்பதாக எண்ணுவதற்கில்லை.

புகழேந்திப் புலவர் இயற்றிய அல்லி அரசாணிமாலை, பவழக் கொடி மாலை, புலந்திரன் தூது போன்ற நூல்களெல்லாம் பெண்ணினத்தின் அறிவை வளர்க்கும் சின்னஞ் சிறு கதைகள் அன்றோ? புகழேந்திப் புலவரின் சிறு கதைகளை யெல்லாம், அவர்கள் தாங்களாகவே படித்துக் கற்றார்களா? இல்லை; அப்படிக் கற்றவர்கள்

மிகச் சிலரே யாவர். பிறர் படிக்கக் கேட்டுக் கற்ற பெண் மக்களே அதிகம். ஓய்ந்த நேரங்களிலெல்லாம் படித்த பெண்ணொருத்தி புகழேந்தியின் காவியத்தைப் பாடுவாள்; படிக்காத பெண்கள் பலர் அவள் பக்கத்தில் அமர்ந்து செவி கொடுத்துக் கேட்பார்கள். இந்தக் காட்சியை இன்றைக்கும் தமிழகத்துக் கிராமங்களில் காணலாம். புகழேந்தியின் கற்பனைக் கதைகள் மட்டுமல்ல; மதுரை வீரன், தேசிங்குராஜன் போன்ற தமிழ் வீரர்களின் உண்மை வரலாறுகளையும் பாரதம், ராமாயணம் போன்ற கற்பனை கலந்த காவியங்களையும் இதே முறையில்தான் ஆண்களும் பெண்களும் கற்றுக் களிப்படைகின்றனர்.

கல்வியைப் பற்றி அறிஞர்களிடையே தவறான கருத்து இருப்பது போலவே, கல்வி துவங்கும் பருவத்தைப் பற்றியும் தவறான கருத்து நிலவி வருகிறது. ஐந்தாண்டுகளுக்குப் பிறகு இல்லங்கடந்து பள்ளிக்குச் செல்வதிலிருந்துதான் படிப்புத் துவங்குவதாகக் கருதுகின்றனர்; இது சரியன்று: ஏட்டுக் கல்வி துவங்கும் முன்னரே நம் நாட்டில் கேள்விக் கல்வி துவங்கிவிடுகிறது. தொட்டிலில் வளரும் குழந்தைக்குத் தாலாட்டும் பாட்டின் மூலம் அன்னையர் போதிக்கும் எண்ணங்களுக்குத்தான் அளவுண்டோ?

தரையில் தவழும் பருவத்தில் தாயிடம் கேட்ட நிலாப் பாடல், வான நூலின் ஆரம்பப் பாடமன்றோ?

குந்தி விளையாடும் பிள்ளைக்கு "சாய்ந்தாடம்மா, சாய்ந்தாடு" "கை வீசம்மா கை வீசு" என்று கற்பிக்கப்படுவதெல்லாம் ஆரோக்கிய சாஸ்திரத்தின் ஆரம்பப் பயிற்சியே யல்லவா?

ஓடியாடும் பருவத்தில், அன்னையர் சொல்லும் கதைகளுக்கும் கணக்கில்லை. அந்தக் கதைகளெல்லாம், இன்று நாம் பணம் செலவழித்துப் படிக்கும் சிறு கதைகளை விட, எவ்வளவோ சிறப்பானவையாகும். அன்னையர் சொல்லும் கதைகளிலே தாய் இனத்தின் அன்பும், தமிழினத்தின் பண்பும் கலந்திருக்கின்றன. ஆகவே, அன்னையரிடம் கேட்கும் கதைகளினால் குழந்தையின் அறிவு வளர்வது மட்டுமன்று; உள்ளத்தில் அன்பும், பண்பும் வளரவும் முடிகிறது. ஆம்; நம் ஒவ்வொருவருக்கும் இல்லந்தான் ஆரம்பப் பள்ளி. பெற்றெடுத்த அன்னைதான் ஆரம்ப ஆசிரியை. அன்பும் பண்பும்தான் அவள் துவக்கிவைக்கும் பாடங்கள். இதைப் பல்கலைக் கழகப் பட்டதாரிகளும், கல்வித்துறை அறிஞர்களும் கருத்தில் வைக்க வேண்டும்.

கடந்த காலத்தில் பெரும்பாலும் மக்கள் பெற்றுவந்த கேள்வியறிவு சமய அறிவாகவே இருந்து வந்தது. சமயஞானம் என்பது தமிழகத்தில் இறக்குமதியான சரக்கன்று. தமிழினத்தவருடைய எண்ணங்களின் எதிரொலியே யாகும். வேதத்தைப் படிக்கவும், படித்தவர் சொல்லக் கேட்கவும் வேதியருக்கு மட்டுமே உரிமையுண்டு என்று ஒரு கூட்டத்தார் நினைத்திருந்த காலத்திலும் வேதாந்த ஞானத்தை வீதிதோறும், வீதிதோறும் வலியச் சென்று வழங்கிய பெருமை தமிழகத்துப் பண்டாரங்களின் தனியுரிமை. தமிழகத்தில் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் பேசும் சாதாரணமான பேச்சுக்களில்கூட அறிவு செறிந்த கற்பனைகளும், ஆத்ம ஞானக் கருத்துக்களும் வெளிப்படுவதைக் காணலாம். இந்தத் திறமை அவர்

களுக்கு எப்படிக் கிடைத்தது? கேள்வி ஞானத்தின் மூலமே யாகும்.

நந்தவனத்திலோர் ஆண்டி—அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை
வேண்டிக்
கொண்டுவந்தான் ஒரு தோண்டி—
அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு
டைத்தாண்டி.

இந்தப் பாடல் நாம் அடிக்கடி கேட்டுவரும் பண்டாரப் பாட்டுக்களில் ஒன்று. உலகை நந்தவனமாகவும், ஆத்மாவை ஆண்டியாகவும், படைப்புச் சக்தியைக் குயவனுகவும், உடலை அவன் தந்த தோண்டியாகவும் கற்பனை செய்து, நிலையற்ற உடலைக் கொண்டு நிலையான பொருளை அடையும் மார்க்கத்தைப் போதிக்கிறது இப்பாடல். இம்மாதிரி எத்தனை எத்தனையோ ஆத்ம ஞானப் பாடல்களை வீதிகளிலே நித்த நித்தம் கேட்டு வருகிறோம். இவையனைத்தும் சமயத் துறையில் நாம் பெற்றுவரும் கேள்வி ஞானமன்றோ? சமயத் துறையில்தான் கேள்வி ஞானத்தைப் பெறும் வசதிகள் அனைத்தையும் பயன்படுத்தினர் நம் முன்னோர். பண்டை நாளில், ஆலயங்களெல்லாம் சமயக் கல்லூரிகளாக இருந்தன. புலவர்கள், புராணிகர்கள், பாகவதர்கள் ஆகியோரெல்லாம் அக் கல்லூரிகளின் பேராசிரியர்களாக இருந்து சமய ஞானத்தைப் போதித்தனர். இன்று ஆலயங்களில் மூலைக்கு மூலை நாம் காணும் அழகான மண்டபங்களெல்லாம் ஒரு காலத்தில் கேள்வி ஞானத்தைப் போதிக்கும் மன்றங்களாகத் திகழ்ந்தவையாகும். சமயத் துறைக்குப் பயன்பட்ட அதே மண்டபங்களை இன்று சமூகத் துறைக்குப் பயன்படுத்தவும் முடியும். புராணிகர் கடைப்பிடித்த நடைமுறையைக் கொண்டே இன்றைய உலகத்துக்குத் தேவையான புத்தம் புதிய கருத்துக்களைப் போதிக்கலாம். இதில் பிழையொன்று மில்லை. சான்றாக, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் 'நந்தனார்' என்ற புராணக் கதையின் பாணியிலே சீர்திருத்தக் கருத்துக்களைப் போதிக்கும் 'கிந்தனார்' காலட்சேபம் நடத்திவருவதைக் கூறலாம்.

பழைய பிரசாரமுறைகளும், இசைக் கருவிகளும் மக்கள் மனத்தைக் கவரும் சக்தி பெற்றவை. அவற்றையெல்லாம் கேள்வி ஞானத்தைப் பரப்புதற்கும் பயன்படுத்தினர் நம் முன்னோர். பூசாரிவசமுள்ள உடுக்கை, பம்பை, சிலம்பு ஆகிய கருவிகளைவிடக் கேள்வி அறிவுக்குத் திறம்படப் பயன்படும் கருவிகள் வேறுண்டோ? உடுக்கை அதிர, சிலம்பு ஒலிக்க, பம்பை முழங்கப் பூசாரி மதுரை வீரனின் கதையைக் கூறும் போது, பாமர மக்கள் மெய்ம் மறந்து கேட்பதைப் பட்டி தொட்டிகள்தோறும் இன்னும் காணலாம். பெரும்பாலும் பூசாரிக் கலைக்கே பயன்பட்டு வந்த வில்லுப் பாட்டில் சாத்தூர் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் சுதந்திரப் போர் வரலாறு, கட்டபொம்மன் வரலாறு ஆகியவற்றை நடத்தி வருவதைக் காண்கிறோம். இதே முறையில் பூசாரிக் கருவிகளைக் கொண்டு கிராம மக்களிடையே விவசாயத்தின் மேன்மையையும், தொழிலின் பெருமையையும் கதைகளின் மூலம் போதிக்கலாம். இந்தக் கருவிகள் மூலமே கப்பலோட்டிய தமிழன், வீரபாண்டியக் கட்டபொம்மன் ஆகியோர் நடத்திய வீரப்போரை விளக்குவதன் மூலம் இந்திய நாட்டின் விடுதலை இயக்க வரலாற்றைக் கற்பிக்கலாம்.

கேள்வி அறிவைப் பெருக்கப் பயன்படும் மற்றொரு சாதனம் தெருக் கூத்தாகும். பண்டைக் காலத்தில் பாமர மக்கள் நாடகக் கலையின் மேன்மையைத் தெருக்கூத்துகள் மூலமாகவன்றி, வேறு வழியில் அறிய வழி ஏது? தெருக் கூத்தாளர்களின் நடிப்பும், அவர்கள் நடத்தும் நாடகங்களின் அமைப்பும், அந்த நாடகங்களில் போதிக்கப்படும் கருத்தும் இன்றைய நாகரிக உலகுக்குப் பொருந்தாதனவாக இருக்கலாம். ஆனால், பாமர மக்களின் கலைஞானத்தைப் பெருக்கத் தெருக் கூத்துத்தான் ஆரம்ப நிலையாகப் பயன்பட்டது என்பதைப் மறக்கக் கூடாது. அது மட்டுமன்று; மதுரைவீரன், வீரபாண்டியக் கட்ட பொம்மன் போன்ற தமிழ் வீரர்களின் வரலாறுகளை மறையவிடாமல் காத்த பெருமையும் தெருக்கூத்தாடிகளுக்கே உண்டு. ஆகவே, தெருக் கூத்து முறையைப் பயன்படுத்தியும் எட்டுக் கல்வி கற்க வசதியற்ற மக்களிடையே கேள்வி அறிவைப் பரப்பலாம். ஆனால், தெருக் கூத்து என்று சொல்லும்போது "அகோ தெப்படியென்றால்,........ மகாராஜா சபைக்கு வரும் விதங் காண்க" என்று கூறும் கட்டியக் காரன் வசனத்தைக் கருத்தில் வைத்துச் சொல்லவில்லை. அண்மையில் தேனாம்பேட்டையில் குறைந்த கட்டண டிக்கட்டுகளின் மூலம் திறந்த வெளி நாடகங்கள் நடைபெற்றன வல்லவா? அந்த முறையைத்தான் கையாளவேண்டும் என்று கூறுகிறேன்.

பொதுவாக, நாடகங்கள் என்பன கிராமப்புறத் தெருக் கூத்துகளின் மறுமலர்ச்சியே யன்றி வேறல்ல. திறந்தவெளி நாடகங்கள் ஊர்கள்தோறும் நடைபெறுவதற்குத் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும். இந்த நாடக மேடைகளில் நகைச்சுவையரசு என். எஸ். கிருஷ்ணன் தயாரித்து நடத்தி வரும் "ஐம்பதும் அறுபதும்" போன்ற புத்தம் புதிய நாடகங்கள் இடம் பெறவேண்டும். பழைய தெருக் கூத்துப் பாணியைப் புதிய கருத்துக்களுக்குப் பயன்படுத்த முடியும் என்பதற்கு "ஐம்பது அறுபதும்" எடுத்துக் காட்டாகும்.

கேள்வி ஞானத்தைப் பெருக்கும் பொறுப்பை அரசாங்கமோ, அரசாங்க அதிகாரிகளோ நேரிடையாக ஏற்பதால் போதிய பலன் கிட்டாது. மக்களிடையே செல்வாக்குப் பெற்றுள்ள உத்தியோகப் பற்றற்றவர்களிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைத்து, அரசாங்கமும் அதிகாரிகளும் எல்லா வகையிலும் உதவி புரியவேண்டும். நகராட்சி நாடாட்சி மன்றங்களும் இந்தத் துறையில் கவனம் செலுத்தலாம். சென்னை நகராண்மைக் கழகத்தார் பாண்டு வாத்தியக் குழுவினரை அமர்த்தி, நகரப் பூங்காக்களிலும், கடற்கரையோரப் பகுதிகளிலும் பாடச் செய்வதன்மூலம் மக்களின் இசை ஞானத்தை வளர்க்கின்றனர். இது போலவே, கல்வி—சுகாதாரம் சிக்கன வாழ்வு ஆகியவற்றில் மக்கள் அறிவு பெறுவதற்காக இசைக் கருவிகள் மூலம், காலட்சேபம், நாடகங்கள் முதலியன நடத்தலாம்.

"எல்லோரும் கேளுங்கள்!" என்ற இயக்கம் வெற்றியடையத் தமிழ் எழுத்தாளர்கள் பெரும் பணியாற்ற வேண்டும். எழுத்தாளர்களின் எழுதுகோல் மக்களின் கேள்வி ஞானத்தைப் பெருக்குவதற்கான புத்தம் புதிய கதைகளை, கவிதைகளை ஆயிரம்

ஆயிரமாக எழுதிக் குவிக்கவேண்டும். அப்படி எழுதப்படும் கதைகளிலும் கவிதைகளிலும் மக்களின் பாராட்டுப் பெற்றவைகளுக்கு அரசியலார் பரிசு தரவேண்டும்.

"எல்லோரும் கேளுங்கள்!" என்ற இயக்கம் பாமரர்களுக்காகவே நடத்தப்படுவது என்ற உண்மையை மறந்துவிடக் கூடாது. எனவே, இந்த இயக்கத்தில் ஈடுபடுவோர் படித்துப் பட்டம் பெற்றோரா யிருப்பினும் பாமரத் தன்மையைப் பழிப்பவராயிருக்கக் கூடாது. பண்டிதர்களாயினும் பாமரர்களோடு நெருங்கிப் பழகுவது மூலம்தான் அவர்களுக்குத் தொண்டு புரியமுடியும்.

"எல்லோரும் கேளுங்கள்!" என்ற இயக்கத்தால் அறியாமை அகலும்; அறிவு வளரும். பாரதியார் கூறியதுபோல், "வெள்ளம்போல் கலைப் பெருக்கும் கவிப் பெருக்கும் மேவுமாயின் பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழி பெற்றுப் பதவி கொள்வார்" என்பது திண்ணம்.

ஆகவே, "எல்லோரும் கேளுங்கள்!" என்ற முழக்கத்தோடு, "காது படைத்தும் செவிடர்களாய் வாழாதீர்" என்று வள்ளுவர் செய்த வேண்டுகோளும் நாடெங்கும் பரவ வேண்டும். "அறிவு பெருகட்டும்; அறியாமை ஒழியட்டும்" என்ற வாக்கியங்கள் தமிழகத்தின் மூலை முடுக்குகள்தோறும் ஒலிக்கவேண்டும். ஆட்சியாளர்கள் செய்வார்களா? அறிவியல் நிபுணர்கள் சிந்திப்பார்களா?

"இன்றிலிருந்து"

1947 ஆகஸ்டு 15-ம் தேதியில் உரிமை வாழ்வு கிடைத்தது. நாடெங்கும் கேளிக்கை; கொண்டாட்டம். இத்தனை கொண்டாட்டத்துக்கும் கேளிக்கைக்கும் காரணமாக இருந்த சுதந்திரச் சிற்பி காந்தியடிகள் அன்று உண்ணாவிரதம் இருந்தார். அன்று அவர் மதக் கலவரத்தைப் போக்கக் கல்கத்தாவில் இருந்தார். 'மனு காந்தி' என்ற தொண்டர் அடிகளை நோக்கி, உபவாசத்திற்குக் காரணம் கேட்டார். "நல்ல சந்தர்ப்பங்களில் நான் எப்பொழுதும் உண்ணாவிரதமே இருக்கச் சொல்வது வழக்கம். இன்றுமுதல் நம்முடைய பொறுப்பு எவ்வளவு அதிகமாகியிருக்கிறது! ஏகாதசி உபவாசத்தால் மனம் கடவுள்பால் திரும்புவதுபோல இன்றைய விரதம் நம் பொறுப்புணர்ச்சியைத் தூண்டிவிடும். "ஏ, கடவுளே! நாங்கள் சுதந்திரம் அடைந்துவிட்டோம். அந்த எக்களிப்பிலே இன்ப வேட்டையில் நாங்கள் இறங்கிவிடாமல், பொறுப்புணர்ச்சியை இன்றிலிருந்து அளித்துக்கொண்டே இரு" என்று பிரார்த்தனை செய்வதற்காகவே மௌனமும் மேற்கொள்வது. நமக்கு எத்தகைய செருக்கும் ஏற்படக்கூடாது. இன்றுமுதல் நாம் மேலும் மிக்க பணிவுடன் இருந்துவர வேண்டும்" என்று காந்தியடிகள் விடையளித்தார்.

(மனு காந்தியின் நூலிலிருந்து......)

சங்க காலப் பாண்டியர்கள்

திரு. தி. வை. சொக்கப்பா, M.A.,L.T.

மதிவாணன்: இறையனார் களவியலுரையின்கண் பாயிரப்பகுதியில் கடைச்சங்கம் இரீஇயினார் நாற்பத்தொன்பதின்மருள் கவியரங்கேறிய பாண்டிய மன்னர் மூவர். அம் மூவருள் மதிவாணன் ஒருவனெனச் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் தம் உரைப்பாயிரத்தால் அறிகிறோம். தமிழ்ப் புலமை வாய்ந்த இத் தென்னவன் ஒரு சிறந்த நாடகத் தமிழ்நூல் இயற்றியுள்ளான். அது 'மதிவாணர் நாடகத் தமிழ்நூல்' என வழங்கிற்று. அந்த இசை நாடக நூலின் சில சூத்திரங்களே—சிலப்பதிகார உரை மேற்கோள்களாக எடுத்தாளப் பட்டவையே—எஞ்சி நமக்கு இது போது கிடைத்துள்ளன.

பொற்கைப் டாண்டியன்: அறியாது தவறிழைத்த காலத்திலும் தங்களையே முறைசெய்துகொள்ளத் தமிழ் நாட்டுக் காவலர்கள் தவறவில்லை என்பதற்குச் சான்றாய் விளங்கிய மன்னன். இவன் தவறிழைத்த தன் கையைக் குறைத்துக்கொண்டு பொற்கை அமைத்துக்கொண்ட கதையைச் சிலப்பதிகாரம், பழமொழி முதலிய நூல்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. என்னே தமிழரசர்களின் முறைசெய்யும் மாண்பு! இப் பாண்டியன் திருவாரூரின்கண் ஆட்சி செய்த நீதிச் சோழனை நினைவூட்டுகின்றான்.

அறிவுடை நம்பி: இவன் குடிகளை மிக வருத்தி இறைவாங்கினான் என்ற செய்தியைப் பிசிராந்தையார் பாட்டொன்றால் [1]உவகித்தறியலாம். அப் புறப்பாட்டில் அரசிறையை நெறியறிந்து முறையே கொண்டால்தான் நாடு வளமுறும், மக்கள் இன்பமுடன் வாழ்வர் எனப் பிசிராந்தையார் இறைபெறுவதில் மன்னன் கைப்பிடிக்கவேண்டிய நெறியைப் பாண்டியனுக்குக் கூறியுள்ளார். அப் புலவரால் நெறிப்படுத்தப்பட்ட பாண்டியன் மக்கள் நலத்தை நாடி ஆட்சி புரிந்து பெயருக்கேற்ப நல்லறிவுடைய நம்பியாய்த் திகழ்ந்தான். நமக்குக் கிடைத்திருக்கும் இவனுடைய நான்கு பாடல்களால் [2]இவனது செந்தமிழ்ப் புலமை நன்கு விளங்குகிறது. இவன் பாடிய புறப்பாட்டு, மக்களால் உண்டாகும் இன்பம் எத்தகையது என்று அழகாக விவரிக்கிறது. 'மயக்குறு மக்களை யில்லோர்க்குப் பயக்குறை யில்லைத்தாம் வாழுநாளே' என்ற தொடர்கள் படித்து இன்புறத் தக்கன. கோப்பெருஞ்சோழனின் ஆருயிர் நண்பனை பாண்டிநாட்டுப் பிசிராந்தையார் இம்மன்னனுக்கு நல்லறிவு கொளுத்தி நெறிப்படுத்திய வரலாற்றால், உறையூரை யாண்ட கோப்பெருஞ் சோழனும் அறிவுடை நம்பியும் ஒருகாலத்தவர்கள் என்பது பெறப்படுகிறது.

---

1. புறம் 184.
2. புறம் 188. அகம் 28. நற்றிணை 15. குறுந்தொகை 230.

311744

இளம்பெருவழுதி: கடைச்சங்கப் பாண்டிவேந்தருள் ஒருவன். பாட்டிசைக்கும் திறம் பெற்றவன். இவன் இயற்றிய இரண்டு பாடல்கள் (பரிபாடல்—15. புறம்—182.) கண்ணன் பால் இவனது அன்பையும், இவனது பேரறிவினையும் புலப்படுத்துகின்றன. இவன் பாட்டுக்கள் நற்றிணை[3] யிலும் காணப்படுகின்றன. கடலில் செல்கையில் கலங் கவிழ்ந்து மாண்ட காரணத்தால் 'கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி' எனக் குறிக்கப் பெற்றான். இவன் அரசு கட்டில் ஏறவில்லை.

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்: பகைவரிடமிருந்து ஒல்லையூரை வென்று புகழ்பெற்ற காரணத்தால் இப்பெயர் பெற்றனன். இவனும் இவன் மனைவி பெருங் கோப்பெண்டும் நடாத்திய காதல் வாழ்க்கையும் அந்நங்கை நல்லாளின் கற்பு நெறியும் எண்ணி யெண்ணிப் பெருமிதம் அடையத் தக்கன. காதலர் இருவரும் கற்றுணர்ந்தோர், நல்லிசைப் புலமை வாய்ந்தவர். மாவன், ஆந்தை, அந்துவஞ்சாத்தன், ஆதனழிசி, இயக்கன் முதலியோர் இப் பாண்டியனின் ஆருயிர் நண்பர்கள். இத்தகைய நட்பு மன்னர்களுக்குள் மிக அருமையாகக் காணப்படும் பண்பாடாகும்.[4] பூதப்பாண்டியன் சேரசோழ வேந்தருடன் போரிட்டு இறந்தான். இவன் மனைவி கணவனை இழந்த காரிகையின் கைம்மை நோன்பின் கடுமையை யெண்ணி அஞ்சிச் சான்றோர் தடுத்தும் மனம் பொறாது, கணவனின் ஈமத்தீப் பாய்ந்தாள். பெருங் கோப்பெண்டு பாடிய புறப்பாட்டு ஒன்று உண்டு. (புறம்—246).

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்: தென் குமரிக்குத் தெற்கிலிருந்த தமிழகம் கடல்கோட்படவே, தமிழக மன்னர்கள் புது நிலந் தேடி வடக்கே முன்னேற லாயினர். ஆரியர் தெற்கே வந்தவண்ண மிருந்தனர். புறத்தே பகையைக் காட்டிய ஆரியக் கூட்டத்தினரைத் தமிழ் மன்னர் எதிர்த்து விரட்டினர். வடநாட்டு ஆரியப் படைகளைக் கடந்த காவலர்களில் இவன் தலை சிறந்தவன்போலும்! பாண்டியருள் நெடுஞ்செழியன் என்னும் பெயருடைய வேந்தர் பலர் இருத்தலால், இவனை மற்றவர்களினின்றும் வேறுபடுத்த 'ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்' என இவனது வெற்றியை அடைமொழி யாக்கிச் சிறப்பித்துள்ளனர். 'வடவாரியர் படை கடந்து, தென் தமிழ்நா டொருங்கு காணப், புரைதீர் கற்பின் தேவி தன்னுடன், அரசு கட்டிலிற் றுஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன்' என்று இளங்கோவடிகள் இவன் வரலாற்றை மிகச் சுருங்கிய முறையில் நமக்குத் தந்துள்ளார். பாண்டிநாட்டுப் புரவலனைச் சேரநாட்டுப் புலவன் பாடுவதில் தனிச் சிறப்புண் டல்லவா? மேலும் ஏறக்குறைய அதே காலத்தில் வாழ்ந்தவரின் கூற்றில் உண்மைச் செய்தி புலப்படுமன்றோ? நெடுஞ்செழியன் பெரிய வீரன்மட்டு மல்ல, கல்வியின் பெருமையையும் கற்றோரின் சிறப்பையும் நன்கு அறிந்தவன் என அவன் பாடிய பாட்டால்[5] அறிகிறோம். குடும்பம், சமுதாயம், அரசியல் யாவும் கல்வியினால் பயனடைதலால் கற்றல் நன்று என்ற அழகிய கருத்தை அப் பாட்டில் விளக்கி நம்மை இறும்பூ தெய்தச் செய்கிறான்.

நன்கு ஆராயாது கற்புடைய மங்கை கண்ணகியின் கணவன் கோவலனைக் கள்வனெனக் கொல்வித்தவன் இம்மன்னனே எனப் பல அறிஞர்கள் கருது

3. நற்றிணை 55, 56.
4. இங்கிலாந்து அரசன் முதலாம் சார்லசைப் பற்றி அவன் நண்பனும் மந்திரியுமான தாமஸ் வெண்ட் வொர்த் 'அரசர்களை நம்பாதே' (Put note your trust in princes) என்று சொல்லியிருப்பதை நோக்கவும்,
5. புறம்—183,

கின்றனர். நெடுஞ்செழியன் 'பொன் செய் கொல்லன் தன்சொற் கேட்ட யானோ அரசன்? யானே கள்வன்! மன்பதை காக்கும் தென்புலங் காவல் என்முதற் பிழைத்தது; கெடுக' என் ஆயுள் எனத் தன் தீச்செயலை நினைத்துப் பெரிதும் வருந்தி அரசு கட்டிலிலே மயங்கி விழுந்து உயிர் துறந்தனன். இச்செய்தி அறிந்த அவன் மனைவி கோப்பெருந்தேவியும் உடனே உயிர் நீத்தனள். அறியாது செய்த குற்றத்தை உணர்ந்த மாத்திரத்தில் தன் உயிரை விட்டனன் எனின் இவன் செங்கோற் சிறப்பை என்னென்பது! 'கண்ணகி தன் கேள்வன் காரணத்தால்— மண்ணில் வளையாத செங்கோல் வளைந்ததே' என்ற சிலப்பதிகார ஆசிரியரின் சான்று நெடுஞ்செழியனது செங்கோலின் மாண்பை வலியுறுத்துகிறது.

வெற்றிவேற் செழியன்: நெடுஞ்செழியன் இறந்தபின், கொற்கை நகரத்தில் இளவரசனாயிருந்த இளஞ்செழியன் அரசு கட்டில் ஏறினான். இம்மன்னன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனின் தம்பி என்று சிலரும், மகன் என்று வேறு சிலரும் கூறுகின்றனர். முடி சூடிய பிறகு நன்மாறன் என்ற பெயரைத்தாங்கினான். சித்திரமாடம்[6] என்னும் ஓரிடத்தில் இறந்ததால் இவ்வரசன் சித்திரமாடத்துத் துஞ்சிய நெடுமாறன் எனக் கூறப்படுகிறான். இலங்கை வேந்தன் முதலாம் கஜபாகுவும் இவனும் சம காலத்தவர்கள். ஆதலால் இவன் கி.பி. இரண்டாம் நூற்றாண்டினிறுதியில் ஆண்டவனென்று திரு. K. A. நீலகண்ட சாஸ்திரியார் கருதுகிறார். இம்மன்னனது ஆட்சியில் மழையின்றி மக்கள் பெரிதும் வருந்தினர். அப்போது கடைச்சங்கப் புலவர்கள் பாண்டிய நாட்டை நீங்கி அயல் நாட்டிற்கேகினர். மக்கள் இன்புற்று வாழக் கண்ணகிக்குக் காவலன் பெருவிழா நடத்தினான். மேலும் கோவலனைக் கொல்லக் காரணமாயிருந்த பொற் கொல்லன் மீது சினங்கொண்டு ஒரு நாளில் ஆயிரம் பொற்கொல்லர்களைக் கொன்று அச்சமூகத்தினர்மீது பழி தீர்த்துக் கொண்டான் என்று சொல்லுவர். இம்மன்னனை மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் பாடியுள்ளார். (புறம்-59) இப்புலவரே மணிமேகலை ஆசிரியர்.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்: இப்பாண்டியனது இயற்பெயர் நெடுஞ்செழியன் என்பது. தலையானங்கானம்[7] என்னுமிடத்தே தன்னை எதிர்த்த முடி வேந்தர் இருவரும் வேளிர் ஐவருமாகிய எழுவரை வென்று மேம்பட்டது கொண்டு தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் எனப் பாராட்டப்பட்டான். இளமையிலேயே ஆட்சியேற்றனன். சோழன் ராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும், சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையும், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என வேளிர் ஐவரும் இப்பாண்டிய மன்னனை இளைஞன் என்றெண்ணி இகழ்ந்து பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரையை முற்றினர். கோட்டை வாயிலில் போரைத் தொடங்கிக் 'கொடியன் எம்மிறையெனக் கண்ணீர் பரப்பிக் குடிபழிதூற்றும் கேலோன் ஆகுக' என்று வஞ்சினங் கூறிக் கடும்போரிட்டு அவ்வெழுவரையும் முற்றுகை விடுத்தோடச் செய்தான். பிறகு தோற்ற மன்னர்களை விரட்டிச் சென்று சோழ நாட்டில் தலையாலங்கானம் என்னும் இடத்தில் வெற்றி பெற்று வாகை மிலைந்தனன். தலையாலங்கான வெற்றி புற அகநானூ

6. வெள்ளியம்பலம், இலவந்திகைப்பள்ளி முதலியன போலச் சித்திரமாடம் என்பது ஓரிடம்.
7. தலையாலங்கானம்—தலையாலங்காடு (திருவாரூருக்கு வடமேற்கில் எட்டுக்கல் தொலைவில் இருக்கிறது.

றுப் பாட்டுக்களிலும் மூன்றும் இராச சிங்க பாண்டியனது சின்னமனூர்ச் செப்பேட்டிலும் குறிக்கப்பெற்றுள்ளது. இப்பறந்தலையில் யானைக் கட்சேய்மாந்தரஞ்சேர விரும்பொறை சிறை பிடிக்கப்பட்டான் என்று புறப் பாட்டால்[8] அறிகிறோம். பிறகு இவன் எதிரி நாட்டின் பல பகுதிகளைத் தாக்கினான். கொங்கு நாட்டுதிபனை அதிகனை உறையூருக்கருகில் கூகைக் கோழி வாகைப்பறந்தலையில்[9] புறங் கண்டான். நீடூர்த் தலைவன் வேள் எவ்வியுடன் பொருது[10] மிழலைக் கூற்றத்தையும் (புதுக்கோட்டை நாடு) முத்தூர்க் கூற்றத்தையும் (தஞ்சை மாவட்டம் அறந்தாங்கிக் கூற்றம்) கைப்பற்றிப் பாண்டி நாட்டின் பரப்பை வடக்கில் அதிகப்படுத்தினான்.

மாங்குடி மருதனார் இயற்றிய மதுரைக்காஞ்சியெனும் அகவலிலிருந்து இவனுடைய போர்ச் செயல்கள் இன்னும் சில தெரியவருகின்றன. கடற்கரையையும், நாவாய்கள் வந்து தங்கும் துறைமுகத்தையும் உடையதும் கடல் அகழியே சூழ்ந்ததுமாகிய வடநாட்டின் கண் உள்ள நெல்லூரைக் கைக்கொண்டான்; குட்ட நாட்டவரை வென்றான். இவ்வெற்றிகளால் சோழ மண்டலத்தையும் தொண்டை நாட்டையும் பாண்டிநாட்டொடு சேர்த்து ஆண்டான் என்று கொள்ளலாம்.

நடுயாமத்திலும் தானைத் தலைவன் போரில் புண்பட்ட வீரர்களை முறையே தனக்குக் காட்டிவர, பாண்டியன் துயில் கொள்ளாது அவர்களைக் கண்டு பரிகரிப்பான் என்று நக்கீரர் இயற்றிய நெடுநல்வாடை தெரிவிக்கிறது. இவ்வாறு போர் விருப்பம் மிக்குடையவனா யிருந்ததால் அவைக்களப்புலவர் தலைவர் மாங்குடிமருதனார் இவனுக்கு நிலையாமையை அறிவுறுத்தி அற நெறியைக் கைப்பிடித்து ஒழுகுமாறு மதுரைக் காஞ்சியை இயற்றினார்.

இந்த நெடுஞ்செழியனைக் குறுங் கோழியூர்கிழார், குடபுலவியனார், கல்லாடனார், மாங்குடிகிழார், இடைக் குன்றூர்கிழார் முதலியோர் பாடியுள்ளனர். நாடெங்கும் கல்விச்சாலை, அறச்சாலை, மருத்துவச்சாலை நிறுவிப் புலவர் புகழும் பேறு பெற்றனன். குடபுலவியனார்

'நீரின்றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே-'
புறம்—18

என்று அறிவுரை புகட்ட, செழியன் நீர் நிலைகளை ஏற்படுத்திக் வயல் வளம் பெருக்கினான்.

இம்மன்னனே பாடிய புறப் பாட்டொன்றுளது.[11] அதன் கண் குடி பழி தூற்றும் கொடுங் கோன்மை, புலவர் பாடும் புகழ்பெறாமை, இரவலர்க்கு ஈயாமை முதலியவற்றைக் கண்டு எவ்வாறு அவன் அஞ்சி ஆட்சி புரிந்தான் என்று விளக்கப்பட்டிருப்பதைக் கண்டு பெருமிதமடையலாம். புலவர்களைப் புரந்த புரவலனாய்த் திகழ்ந்தான்.

---

8. புறம்—17 9. குறுங்தொகை—393 ஊர்ப்பறந்தலையில் 10. மணவாயில் உறத்தூர் என்னும்
11. புறம் 72.

★ புதினங்கள் ★

திரு. அ. ச. ஞானசம்பந்தம், M. A.

புதினத்தின் பல்வேறு உறுப்புக்களுள் சூழ்நிலை அமைப்பு என்பதும் ஒன்று. அதாவது புதினம் கூறும் செயல்கள் நடைபெறும் காலமும் இடமும் ஆகும். இப்பகுதியில்தான் மக்கள் வாழ்க்கை, அவர்கள் பழக்க வழக்கங்கள் முதலியன இடம் பெறுகின்றன. இப்பரந்த உலகில் வாழும் மக்கள் கூட்டம் பல்வேறுபட்ட பண்பாடுகளுடன் கூடியது. எந்த இடத்தில் கதை நடைபெறுவதாகக் கூறப்படுகிறதோ அதற்கு ஏற்றபடியே இச் சூழ்நிலை அமைக்கப்படல்வேண்டும். 'தேசங்கள் தோறும் பாஷைகள் வேறு' என்ற பழமொழி, நிறைந்த உட்கோள்களை உடையது. இன்னும் கூறப்போனால் ஒரே மொழி பேசும் பல்வேறு பகுதியினருள்ளும் பழக்க வழக்கங்கள் மாறுபடுதலைக் காணலாம். அவ்வாறு இருக்க, இப்பழக்க வழக்கங்கள் தெரியாதவர் புதினத்தில் சூழ்நிலை அமைப்பது பெருந் தவறாக முடியும். யாழ்ப்பாணத்தார்களும், திருநெல்வேலியார்களும், சென்னையார்களும் தமிழே பேசினும் இவர்கள் எண்ணங்கள், பண்பாடுகள் முதலியன பெரிதும் வேறுபட்டு இருக்கக் காணலாம். எனவே, சூழ்நிலை அமைக்கும் புதின ஆசிரியன் இதில் அதிக கவனஞ் செலுத்தல் வேண்டும். கிராமங்களில் செயல் நடைபெறுவதாகக் கூறவந்த ஒரு புதின ஆசிரியன் பழைய தல புராண முறையில் மாட மாளிகைகளையும், கூடகோபுரங்களையும் வருணிக்கப் புகுதல் எவ்வளவு தவறு!

சூழ்நிலை அமைப்பை நன்கு அறிந்த புதின ஆசிரியன் இரு வகை அமைப்புக்களை மேற்கொள்ளலாம். ஒன்று, சமுதாய அடிப்படையில் (Social Setting) நிகழ்வது. மற்றொன்று, பாத்திர அடிப்படையில் (Material Setting) நிகழ்வது. இவ்வகைப் பிரிவினைகள் திறனாராய்ச்சியினும், மேலை நாட்டுப் புதினங்களிலும் காணப்பெறுகின்றனவே தவிரத் தமிழ் நாட்டில், தமிழ் மொழியில் தோன்றிய புதினங்களில் இப் பாகுபாட்டைக் காண்பது கடினம். தமிழர் சமுதாயத்தையும், பண்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டு தோன்றியவை என்று கூறத்தக்க புதினங்கள் இருக்கின்றனவா என்பது ஐயத்திற்கிடமானதே. இதுதான் இல்லை என்றாலும் அவ் வினத்தாரின் ஓரிரு பண்பாட்டையேனும் எடுத்து விளக்கக் கூடிய புதினங்கள் உண்டா என்றால் அவையும் விரல்விட்டு எண்ணத் தகுந்தனவாகவே உள்ளன. மேலே கூறிய

இரண்டு குறிக்கோள்களையும் கொண்டு ஒரு புதினம் செய்தல் என்பது மிகக் கடினமானதே. ஆனால், இவ்வகையில் யாரேனும் முயன்று அதில் தோற்றுப் போனாலும் அது வரவேற்றற் குரியது. 'கான முயல் எய்த அம்பினில் யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது' என்ற பேருண்மையைத் தமிழ்ப் புதின எழுத்தாளர்கள் நினைவில் கொள்வது நலம். ஒரே புதினத்தில் இவை அனைத்தும் இடம் பெறுவிடினும் ஒரே ஆசிரியர் இயற்றிய பல புதினங்களில் இவை இருப்பினும் நலமே.

இம் முறையில் உள்ள கடினம் கருதிப் போலும் மேலைநாட்டில் கூட இத்தகையோர் எண்ணிக்கை குறைந்துவிட்டது. தற்காலம் சிறப்புப் பெறுவது ஒவ்வொரு பகுதியை எடுத்துக்கொண்டு விரிப்பதே யாகும். போர் வீரனுடைய வாழ்க்கை, மாலுமி வாழ்க்கை, மிகப் பெருஞ் செல்வன், நடுத்தர மனிதன், ஏழை முதலானவர்கள் வாழ்க்கைகளை எடுத்துக் கொண்டு புதினம் செய்யும் முறை மேலைநாட்டு இன்றைய இலக்கியங்களில் பல்கி யுள்ளன. இம்முறை ஓரளவு தமிழ்ப் புதினங்களிலும் இடம் பெறினும் இன்னும் நன்கு சிறக்க வில்லை. இந்திய நாட்டில் சற்று முன்னாள் வரை தலைவிரித் தாடின சிற்றரசர்கள் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு எத்தனையோ புதினங்கள் இயற்றி யிருக்கலாம். ஆனால், இன்றைத் தமிழ்ப் புதினங்கள் பெரும்பாலும் பணக்காரர்களைத் திட்டுவதும் தொழிலாளியைப் போற்றுவதும் தமது கடமையாகக் கொண்டுள்ளன. செல்வர்களின் வாழ்க்கை முறையைப் படம் பிடித்துக் காட்டக்கூடிய புதினங்கள், அவர்கள் மன நிலையை வெளியிடும் புதினங்கள் என்று கூறத் தக்க நிலையில் ஒன்றும் இல்லை. காரணம் என்ன? புதின ஆசிரியர்கள் கூர்ந்து நோக்கும் இயல்புடையவராய் இல்லாமையே ஆகும். தான் எந்தப் பகுதியை எழுதினும் ஆசிரியன் அதனைக் கூர்ந்து நோக்கி அதனிடம் காணுதன வெல்லாம் காண்டல் வேண்டும். இவ்வாறு கூறுவதால் இல்லாத பொய்களை யெல்லாம் எழுதவேண்டும் என்பது கருத்தில்லை. ஏனையோர் கண்டும், உட்பொருள் அறியாமல் இருப்பவற்றின் பொருளை இவ்வாசிரியன் அறிந்து உண்மை கூறவேண்டும் என்பதே கருத்தாகும்.

ஒரு காலத்தில் அரசர்களைப் பற்றிக் கூறுவதே கதை என்றிருந்ததுபோலத் தற்காலத்தில் இனப் போராட்டம், காதல் என்பவை இருப்பதே கதை என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. சாதாரண மனிதன் ஒருவனுடைய அன்றாட வாழ்க்கையை ஒரு புதினத்திற்கு அடிப்படையாக்கலாம் என்பதை நம்மவர் நினைப்பதில்லை. எளியவர் வாழ்க்கையில் நடைபெறும் அன்றாடப் போராட்டங்களும் கூடச் சிறந்த கலைஞன் கையில் சிறந்த கலையாக முகிழ்க்க முடியும். நாம் அன்றாடம் பார்த்துப் பழகும் சூழ்நிலையில் கதைகள் அமைப்பதும் சிறந்த ஒன்றுதான். ஒரு சூழ்நிலையில் தோன்றி வளர்ந்த ஒருவன் முற்றிலும் மாறான மற்றோர் சூழ்நிலையில் வாழும்படி செய்து அதில் தோன்றும் அழகுகளையும் புதினங்கள் எடுத்துக் காட்டலாம். இம்முறைகளில் எவை கையாளப் படினும், ஒரு சமுதாயத்தின் ஒரு பகுதியைப் பற்றிமட்டும் கூறும் புதினம் கீழே தரப்பட்டுள்ள ஒரு சட்டத்தை மட்டும் மறவாமல் இருத்தல் வேண்டும். பாத்திரத்

தின் குணதிசயங்கள் சூழ்நிலையைப் பொறுத்தே இருக்கும் என்ற சட்டமே அதுவாகும். இப்பகுதி சிறப்படையும் புதினமே சிறந்தது என்று கூறப்படும். தஞ்சாவூரிலுள்ள ஒரு பெரிய நிலக்கிழாரும் சென்னையிலுள்ள ஆலை முதலாளியும் பணக்காரர் என்ற பொதுப் பெயரினுள் அடங்குவரேனும் இருவருக்கும் பண்புகள் வேறுபடும். இதன் காரணமே சூழ்நிலை எனப்படும். புதின ஆசிரியன் இதனை நன்கு அறிந்தே தனது கதையை நடத்திச்செல்ல வேண்டும்.

சரித்திரங்களை அடிப்படையாகக் கொண்டு எழும் ஒருவகைப் புதினங்களும் வேற்றுமொழி இலக்கியங்களில் உண்டு. ஆனால், நம்முடைய தாய் மொழியில் இதுவும் போதிய அளவு இல்லை. இவ்வகைப் புதினங்களில் ஓரளவு ஆசிரியனுடைய சுதந்திரம் கட்டுப்படுத்தப் பெறுகிறது. நடைபெற்ற சம்பவங்கள் ஆசிரியனுடைய விருப்பம் போல் நடைபெறுவதில்லை. எனவே அவற்றை வைத்துக்கொண்டு தான் அவன் வேண்டிய அளவு பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். சரித்திரத்திற்கு மாறாகப் போகாமலும், கலைச் சுவை குறையாமலும் இருக்கவேண்டிய இக்கட்டான நிலை இவ்வகைப் புதினம் இயற்றும் ஆசிரியனுக்கு உண்டு.

இதனையும் அடுத்துப் புதினத்தில் காணவேண்டிய இயல்பு ஒன்று உண்டு. புதின ஆசிரியன் வாழ்க்கையைப்பற்றிக் கொண்டுள்ள எண்ணமே அதுவாகும். எத்தகைய மனிதனும் உலக வாழ்க்கைபற்றி ஒரு தத்துவம் கருதி யிருப்பான். நாடகத்தைப் போலப் புதினமும் நேரடியாக வாழ்க்கையைப் படம் பிடிப்பது தான். மக்களுடைய எண்ணங்கள் உணர்ச்சிகள் முதலியவை தாமே நாடகத்திலும், புதினத்திலும் இடம் பெறுகின்றன? வாழ்க்கையில் காணப்பெறுகிற இவற்றை வைத்துக்கொண்டு ஆசிரியன் புதினம் இயற்றுகிறான். ஆதலின் எங்கேயாவது ஓரிடத்தில் வாழ்க்கையைப் பற்றி அவன் என்ன நினைக்கிறான் என்பதைக் கூறித்தானே ஆக வேண்டும்? வாழ்க்கையைப் பற்றி அவன் கொண்டுள்ள கருத்துக்களை வெளியிட அவன் இயற்றும் புதினம் கருவி யன்று. என்றாலும் அதிலேயே கிடந்து உழலும் ஒருவனுடைய மனத்தில் மேலே கூறியவைகள் ஓரிரண்டு ஆழமான அனுபவங்களைப் உண்டாக்காமல் இருப்பதில்லை. அவ்வாறு உண்டாக்கி இருப்பின் மகிழ்ச்சி துயரம் உணர்ச்சி என்பவற்றைப் பற்றி அல்லது வாழ்க்கையைப் பற்றி அவன் கொண்டுள்ள எண்ணம் வாய்ப்பு வரும்பொழுது வெளிவரத்தானே செய்யும். வெளிப்படும் எண்ணம் நேரடியாகவும் இருக்கலாம்; மறைமுகமாகவும் இருக்கலாம்.

வாழ்க்கைத் தத்துவம் பேசச் சிறந்த இடம் புதினமா என்று கேட்கப்படலாம். இல்லை என்பதே விடை. என்றாலும் உலகில் ஒரு புதினங்கூட, அது புதினம் என்ற பெயருக்கு உரியதாக இருந்தால், இத் தத்துவம் பேசாமல் இல்லை. காரணம் என்ன? வாழ்க்கையைத்தான் புதினம்பேசுகிறது. வாழ்க்கையில் தோன்றும் அனுபவத்தைத் தான் பேசுகிறது. எனவே, வாழ்க்கையிலும், அனுபவத்திலும் தோன்றும் தத்துவமும் அதில் இடம் பெறுதல் வியப்பன்று அல்லவா? மேலும், சிறந்த எழுத்தாளர் அனைவரும் தீர்ந்த சிந்தனையாளர்கள்

அல்லவா? அவர்களுடைய சிந்தனை யாகிய உலையில் உலகில் நடைபெறும் செயல்கள் சென்று வீழ்கின்றன. மேலும் அவர்கள் கூர்ந்து நோக்கும் இயல்பினர். நடைபெறும் செயலின் அடியில் இருக்கும் மனித மனத்தை அவர்கள் ஆய்ந்து இதுதான் உலகியல் என்ற முடிவுக்கு வருகின்றனர். இம்முடிவிலிருந்து வாழ்க்கையைப் பற்றி அவர்கள் கூறும் தத்துவம் செம்மையுடையதாக இருக்கும் என்பதில் ஐயம் ஒன்றும் இல்லை. இத்தகையவர்கள் கண்ட இத் தத்துவங்கள் அவர்களுடைய புதினங்களில் இடம் பெறுதல் இயற்கை. சிலர் இயற்றிய புதினங்களில் முந்திரிக் கொட்டைபோல இத்தத்துவம் வெளியில் நீட்டிக் கொண்டிருத்தலும் உண்டு. சிறந்த ஆசிரியர்களுடைய நூல்களில் இத் தத்துவம் உள்ளே மறைந்து இருத்தலும் உண்டு.

இத்தகைய தத்துவத்தை ஆசிரியன் எவ்வாறு நமக்குத் தருகிறான்? அவன் என்ன தத்துவத்தைத் தர வேண்டும் என்று நினைக்கிறானோ அதற்கேற்ற பாத்திரங்களையும், சூழ்நிலையையும் செயல்களையும் ஏற்படுத்திக்கொண்டு கதையை நடத்திச் செல்லு முகமாகவே இதனைப் பெறவைத்தல் ஒரு முறையாகும். நாடக ஆசிரியன் தன் பாத்திரங்களின் செயல்கள், பேச்சுகள் என்ற இரண்டின் துணை கொண்டே இதனைச் செய்ய முடியும். ஆனால், புதின ஆசிரியனுக்கு மற்றொரு சிறந்த சாதனம் என்னவெனில் நேரடியாக அவனுடைய கருத்தைக் கூற வசதி உண்டு என்பதே யாகும். புதினத்தில் கூறப் பெறும் தத்துவத்தை அளவிட இரண்டு அளவுகள் உண்டு. முதலாவது அதனுடைய உண்மைத் தன்மை; இரண்டாவது அதனுடைய நல்லியல்பு. வாழ்க்கைத் தத்துவத்தில் உண்மை என்பது யாது? நாம் காணக்கூடியவற்றையே உண்மை என்று கூறிப் பழகி விட்டோம். எனவே, நம் அனுபவத்திற்கு அப்பாற்பட்டவற்றைப் புதினங் கூறி அதிலிருந்து ஒரு வாழ்க்கைத் தத்துவம் கற்பித்து இருப்பின் அதனைப் பொய் என்று தள்ளிவிடுகிறோம். இது தவறு. நம் அனுபவத்தின் அப்பாற்பட்டது உண்மையற்றது அல்ல. அது மெய்யா என்று வேண்டுமானால் கேட்கலாமே தவிர உண்மையா என்று கேட்பது தவறு. எனவே, புதினம் உண்மை கூறவேண்டுமே தவிர, மெய்ம்மை கூறவேண்டிய இன்றியமையாமை இல்லை. மெய்ம்மை (Facts) கூறும் நூல்கள் கலைகள் அல்ல; உண்மை கூறும் கலை நூல்களில் மெய்ம்மை இருக்க வேண்டும் என்ற கடப்பாடு இல்லை.

நல்லியல்பு (Morality) இருக்கும் அல்லது போதிக்கும் தன்மை உள்ளதே சிறந்த புதினம். வாழ்க்கையில் இருப்பதை அப்படியே கூற வேண்டும்; அதுவே பொய்மை என்று கூறும் சிலர் நல்லியல்பை மறந்து புதினம் இயற்றுகின்றனர். ஆனால், உலக மொழிகளில் நிலை பெற்ற புதினங்களை ஆராய்ந்தால் இவ்வுண்மை வெளிப்படும். ஜான் அடிங்டன் சைமன்ஸ் என்ற பெரியார் கூறிய சொற்றொடர் நினைவிற்குக் கொணர்தற் குரியது. "உலக இலக்கியங்களை ஆராய்ந்தால் ஓர் உண்மை வெளிப்படுகிறது. மனித மனத்தின் ஆழத்தில் உள்ள தற்காப்பு உணர்ச்சி நல்லியல்பு இல்லாத இலக்கியங்களை உதறித் தள்ளிவிடுகிறது'' என்பதே அவ்வுண்மை.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

அலைந்து வரும் நெருக்கடியில் அணிவகுத்து ஆள்தேடல்?

திரு. ச. த. இராசேசுவரி அம்மையார், M.A., L.T.

17—ம் பிள்ளை

யார் அந்த விஞ்ஞானப் பெரியார்? 1834 ஆம் வருஷம்—ஆம்! 116 வருஷத்திற்கு முன்னர். இடமோ, எல்லோரும் இன்று பேசும் ருஷியாதான். ஆனால், அதில் மிக மிகப் பிற்போக்கான சைபீரியாவின் நம்பத்தகாத இடம். அங்கே ஒரு குழவி பிறக்கிறது. "பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்க," என்று வாழ்த்துவதற்கு 16 பிள்ளைகள் என்று பொருள் கொள்ளும் அறிவுச் சுடர்களும் உண்டு. பதினாறும் பெற்றுப் பதினேழாவதும் பெறுகிறாள் ஒரு தாய். அந்தக் குழவி தான் நம் கதாநாயகன். குழவி பெறும் காலக் கோளாறு, தந்தையார் கண் இழந்து குருடராகிறார். தாயாரோ பிள்ளைகளைப் பெற்றுப் பெற்று மெலிந்து போனாலும் உயிரைக் கையிலே பிடித்துக்கொண்டு பிள்ளைகளை வளர்த்து முன்னுக்குக் கொண்டு வருகிற முயற்சியே முயற்சி! கடைக்கோடிப் பிள்ளை கல்வி கற்று வேதிநூற் பேராசிரியராக உயர்கின்றார். இவருடைய தாயார் முன்னம் கூறிய நங்கையைப்போல மணிகளைக் கோத்தாரோ என்னவோ? ஆனால், இவர் தமது 35-ம் வயதில் அணுக்களைக் கோவையாக அடுக்கிவைக்கிறார். அணுவை அடுக்குவது எங்கே? அணுக்களின் பெயர்களைத்தான் அடுக்கி வைக்கிறார். எப்படி அடுக்குவது? அப்போது விஞ்ஞானிகள் அறிந்து இருந்தது அணுக்களின் எடை ஒன்றேதான். ஆகவே, எடை வரிசையாக அன்றி வேறு வகையாக அடுக்க அவருக்கு வழியே தெரியாது. முதல் படத்திலே உள்ள எழுநிலை மாடம் அவர் அடுக்கிய அணு நிலை மாடமாகும். முடிவு நிலைக் கோபுரத்தோடும் அடி நிலை வாயிலோடும் விளங்கும் அணுவரிசையாக அது விளங்குகிறது.

மெண்டலீவ் கோபுரம்

அடிநிலை வாயில் அன்று அவர் அமைக்கவில்லை. அது பின்னே விளங்கப் போகிறது. முதல் நிலை மாடத்திலிருந்துதான் முதல் முதல் அவர் அமைத்து வருகிறார். எடை வரிசையாகவே மேலே மேலே அடுக்கிக் கொண்டு போகின்றார். சங்கீதத்தில் ஏழு சுவரங்கள் இருப்பது அவருக்கு நினைவு வருகிறது போலும். ஏழு அணுக்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்குகின்றார். பின்னே மற்றோர் ஸ்தாயி வர வேண்டும் எனத் தோன்றுகிறது போலும். அதனையும் அடுக்குகிறார். மூன்றாவது வரிசையை அடுக்கும்போது மேலே மூன்று அணுக்களைக் கோபுரத்தில் புகும்படி அடுக்கி வைக்கிறார். அதே ஸ்தாயியில் முன் அடுக்கிய ஸ்வரங்க

ளின் எதிரொலிபோல அந்த ஸ்வரத்தின் எதிரேயே வேறு ஏழினை அடுக்குகின்றார். இப்படி இந்த நெடுக்கு வரிசையில் (7+7+3) என்று (17) இருக்கக் காண்கிறோம். இது என்ன புதுக் கணக்கு? நாம் நம்முடைய தாய்க்கு 17-வது பிள்ளையாகப் பிறந்ததினாலே இப்படிப் பதினேழாக அடுக்கின்றாரோ என்னவோ அறியோம்? அடுத்த இரண்டு வரிசைகளும் இப்படியே 17, 17 ஆக அமைகின்றன. கடைசி வரிசையோ முடியவே காணோம். இப்படி அடுக்கிய வரிசைகள் ஒவ்வொன்றிலும் ஒரு பொது இயல்பு விளங்கிவரக் காண்கின்றார். அதனையும் அந்த எழுநிலை மாடப் படத்தில் குறித்துள்ளோம். நாம் அறிந்த அணு எடையினையும் பொருட்படுத்தாது அங்கு வரவேண்டிய வரிசைக்கேற்ற குணத்தையுடைய அணுக்களைச் சிலபோது மாற்றி அமைத்து வைக்கிறார். மணிகோத்த மங்கையும் அப்படி மாற்றி அமைத்தாள் அல்லவா? இவர் ஏன் இப்படிச் செய்கிறார்? அப்போது கண்ட எடை சரியன்று என்பது இவருடைய கொள்கை. தங்கம் (au) 196, இருடியம் (Ir) 197, பிளாடினம் (Pt) 198, ஆசியம் (Os) 199 என்பது அப்போது அறிந்த எடைப்படி ஏற்படும் வரிசை. இவரோ (Os), (Ir), (Pt), (An) என்று இனவரிசையாக முறைப்படுத்துகிறார். யுரேனிய அணுவின் எடை அன்றைய கணக்கில் 119 தான். இந்த எடை (2×119)=238 என்று கணக்கிட்டு எழுதி விடுகிறார். இவருடைய வீரமே வீரம். இந்த விஞ்ஞான வீரம் உண்மையை விளக்குவதுதான் பெரிய ஆச்சரியம். இதன் காரணம் என்ன? அணுக்கள் மடக்கலங்காரம் பொலிய விளங்குகின்றன என்ற உண்மையை இவர் தெள்ளத் தெளியக் கண்டுவிடுகிறார். என்ன காட்சி அது? முதல் நிலையில் காரப் பொருள்கள் (alkaline) விளங்குகின்றன. இரண்டாம் நிலையில் தரையில் காணும் கார உலோகங்கள் விளங்குகின்றன. அந்த அந்த நிலைகளிலுள்ள அணுக்களின் அணு முகங்கள் ஒத்திருப்பதைக் காணலாம். இரண்டாவது படமாக நாம் இங்கே கண்டிருப்பது விஞ்ஞானிகள் இப்போது நம்புகின்ற படமாகும். இரண்டு படத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இவருடைய பெருமை விளங்கும். இருட்டில் தடவிக் கொண்டே மலை இடுக்கில் செல்வோர் போலப் போகின்றார். இவ்வாறு சென்ற மெண்டலீவ் என்பார் இந்த அணுக்கோபுரத்தைக் கட்டிய அற்புதத்தை என்னென்பது? இந்த வரிசையில் மடக்கணியே விளங்குவதால் மடக்கு வரிசை என்று இதனை வழங்கலாம். இந்த மடக்கு நிலை வரிசைகளில் ஒவ்வொன்றில் நிற்பவற்றை ஒவ்வொரு குடும்பம் என வழங்குவதும் இயல்பேயாம்.

பணக் கணக்கு.

ஆப்பிரிக்காவிலே வாழும் காட்டுமிராண்டிகளது குடும்பம் போலப் பலவகை அணுக்களும் இவருக்கு முன் குழம்பிக் கிடந்தன. அவர்களிடம் காசு அல்லது பணம் வழக்கில் இல்லை. முட்டை வாங்குவது என்றால் 30 கோழிகளைத் தருவார்கள். பெட்டை வாங்குவது என்றால் 300 கோழிகள் தருவார்கள். பெண்ணை மணப்பதற்கு 30 முட்டைச்சோழிகளைப் பரியமாகத் தருவார்கள். இந்தச் சோழிக் கணக்கு பெரிய குழப்பம்தான். காசுகளை வழங்கத் தொடங்கியதும் ஒரு தெளிவு பிறந்தது. இந்தியாவில் புதிய நாணயங்களை ஏற்படுத்தவேண்டும் என்ற ஓர் அவா சிலருக்கு இருக்கிறது. அதன்படி 10 தம்படி 1 அணா, 10 அணா ஒரு ரூபாய், 10 ரூபாய் ஒரு பொற்காசு, என்று போகலாம். இங்கே 10 தம்படி ஒரு அணா ஆனதும் ஒரு தம்படி இரண்டு தம்படி எனத் திருப்பித்திருப்பி வரும். மெண்டலீவ் என்பார் அணுக்கடை

யில் ஒரு நாணய முறையை நுழைத்தார். 8, 8 ஆக இந்த முறை வழங்குகிறது. இந்த அடிப்படையான காசு எது? ஹைட்ரஜன் அணுவினை இவர் கோபுரத்தில் காணேம். என்றாலும் ஹைட்ரஜன் அணுக்கள் சேர்வதாலேயே பிற அணுக்கள் பிறக்கின்றன என ப்ரௌட் (Prout) என்ற ஆசிரியர் 1815 இல் கூறினர். ஆனல் எடைகள் பின்னம் பின்னமாக வந்தால் அதனைப் பிற விஞ்ஞானிகள் ஒப்புவதற்கு இல்லை. என்றாலும் ஹைட்ரஜன்தான் அடிப்படைக் காசு என அறிவோம். மேண்டலீவ் கண்ட மடக்கு நிலைவரிசை வேதி ஆராய்ச்சியாளரைத் தூண்டிப் புதிய பொருள்களைக் கண்டுபிடிக்குமாறு செய்தது.

திருடரைப் பிடிக்கும் துப்பு

மேண்டலீவ் கோபுரத்தில் 21, 31, 32, 43, 61, 72, 75, 87 என்ற எண்ணுள்ள அறைகளில் ஆட்களை அவர் காணவில்லை. நேரே மேலும் கீழும் உள்ள பொருள்களைக் கண்டு தலைமறைந்து திரியும் இந்த ஆட்களின் இயல்பினை அவர் எடுத்துக் கூறினர். 21, 31, 32 என்பனவற்றை முறையே போரான் போலி (Eka-Boron) அலுமினியப் போலி (Eka-Aluminium) சிலிகான் போலி (Eka-Silicon) எனப் பெயரிட்டு அழைத்தனர். 1873-இல் அலுமினியப் போலி தலைகாட்டியது. அதனைக் காலியம் (Gallium) என்று இன்று வழங்குகின்றனர். 1879-இல் போரன் போலி சிறைப்பட்டது. இதை ஸ்காண்டியம் (Scandium) என வழங்குகின்றனர். 1879-இல் சிலிகான் போலி பிடிபட்டது. இதனை இன்று ஜெர்மானியம் (Germanium) என்று வழங்குகின்றனர். மேண்டலீவ் வழக்கினைப் பின்பற்றியே இவற்றினை அறிஞர்கள் கண்டுபிடித்ததாலேயே இந்தக் கோபுரம் கனவுக் கோபுரம் அன்று நனவுக் கோபுரம் என்பது உறுதியாயிற்று. 1922-ஆம் ஆண்டில் இந்த மடக்கு நிலையின் உதவியாலேயே 72-ஆம் ஆளான ஆப்னியம் (Hauffnium) என்பார் வெளிப்பட்டார். 1925-இல் இருவர் அகப்பட்டுக் கொண்டனர். 75-ஆம் எண்ணுள்ள அணு ரீனியம் (Rhenium) என்பது. 43-ஆம் எண்ணுள்ளது மசூரியம் (Mesurium) என்பது. அதற்கு அடுத்த ஆண்டில் 61-ஆம் எண்ணுள்ள பேர்வழி விஞ்ஞானப் புலவர் கையில் சிக்கி இல்லினியம் என்ற ((Illinium) திருநாமம் சூட்டப் பெற்றார். இன்று 92 பொருள்கள் எனப் பேசுகின்றோம். இவற்றில் இரண்டு அணுக்கள் இன்னும் தலைமறைவாகவே இருக்கின்றன. 85-வது எண்ணுள்ள ஒன்று "உப்பாக்கி" (Halogen) ஆதல் வேண்டும். இதனை 1931-இல் கண்டதாக ஒருவர் கூறியது உண்டு. 87-வது எண்ணுள்ள மற்றொன்றோ "கார உலோகம்" ஆதல் வேண்டும். இதனை 1930-இல் கண்டதாகக் கூறியதும் உண்டு. இந்த இரண்டுபோக மற்றவை எல்லாம் இன்று அகப்பட்டு உள்ளன.

நேற்றுப் பிறந்த குழந்தைகள்

ஆனல் ஒன்று கூறலாம். 92-இல் பெரும்பான்மைய 19-ஆம் நூற்றாண்டில் கண்டெடுத்த குழவிகளேயாம். மிகப் பழைய காலம் தொட்டுச் செம்பு, வெள்ளி, இரும்பு, பொன், வெள்ளீயம், காரீயம், கரி, கந்தகம் என்பனவற்றினை உலகம் அறியும். அதனல் அன்றோ இவற்றின் பெயர்களைப் பல மொழிகளிலும் வழங்கக் காண்கிறோம். இரசம் என்பது 2350 ஆண்டுகளுக்கு முன்னர்த்தான் தெரிய வந்தது. 16-வது நூற்றாண்டிலேதான் மேலைநாட்டார் எரிகந்தகம் (Phosphorous), ஆர்செனிக் (Arsenic), ஆண்டிமோனி (Antimony), பிஸ்மத் (Bismuth), நாகம் (Zinc), ப்லாடினம் ((Platinum) என்பவற்றை அறியலாயினர். 1750 - முதல் 1800 - க்குள் பொட்டாசியம் (Potassium), சோடியம் (Sodium), ஆக்ஸிஜன் (Oxygen),

க்ளோரைன் (Chlorine), டைடானியம் (Titanium), க்ரோமியம் (Chromium), மாங்கனீஸ் (Manganese), நிக்கல் (Nickel), மாலிப்டீனியம் (Molybdenium), டாலியம் (Tallium), டங்ஸ்டன் (Tungsten) என்று 15 பொருள்கள் அகப்பட்டன. மேற்கூறியவையோடு சேர்த்து இந்த 29 பொருள்களே. அக்காலத்தில் மக்கள் அறிந்ததாகும். இவை போக மிகுதி நிற்பன பெரும்பாலும் 19-ஆம் நூற்றாண்டில்தான் அறிவு உலகில் பிள்ளையாகப் பிறக்கின்றன. மெண்டலீவ் மடக்கு நிலை வரிசையில் அடிநிலை வாயிலாக அமைந்தவை தீண்டாத் திருமேனிகளாம் ஆவிகளாய் இருப்பன என முன்னர்க் கண்டோம். இவற்றின் வரலாறு மிக மிகச் சுவையுள்ளது.

துப்பறியும் காவியம்

இவற்றினைக் கண்டுபிடித்த வரலாறு பெரியதொரு துப்பறியும் காவியமாகக் கலைவாணர் பாடுதற்கு உரியது. ராம்சே (Ramsey) என்ற அறிஞரே இங்கு ஷேர்லாக் ஹோம்ஸ் (Sherlock Homes) ஆக விளங்குகின்றார். காற்றில் நைட்ரஜன் (Nitrogen) உண்டு. உலகில் வழங்கும் நைட்ரஜனைக் கலவைகளிலிருந்தும் பிரிக்கலாம். இந்த இரண்டு வேறு நைட்ரஜன்களையும் பிரித்துப் பார்த்ததில் காற்றிலிருந்து எடுத்தது எடை மிக்கு இருந்தது. ஆதலின் அதிலே ஒரு திருடன் தலைமறைவாக உள்ளான் என்றார் ராம்சே. மாக்னீஷியத்தின் மீது (Magnesium) காற்றில் எடுத்த நைட்ரஜனைப் பாய்ச்சியபோது Mg_3N_3 என்ற கலவை பிறந்தது. ஆனால், நைட்ரஜனில் ஒரு பகுதி கலவையில் சேர மறுத்துச் சோம்பேறியாகவே இருந்தது. இதுவே தலைமறைவாய் இருந்த திருடன் என்று கண்டு அதற்குச் சோம்பேறி என்ற பொருள்படும் பெயரையே ஆர்கான் (Argon) என இட்டனர். மற்றோர் ஆவி சமாதி கூடிய சன்னியாசிபோல ஒன்றினும் கலவாது கிடந்தது. ஹிலிபிராண்ட் (Hillebrant) என்பவர் யுரேனிய மூலப் பொருளைக் காய்ச்சியபோது சமாதியில் இருந்து வெளிவந்து இந்த ஆவி காட்சி கொடுத்தது. இதன் நிறமாலையை ராம்சே ஆராய்ந்தபோது இந்த ஆவி சூரியனிடத்தே சிறப்பாக இருப்பது கண்டார். இதனுக்குச் சூரிய ஆவி அல்லது ஹீலியம் (Helium-Helios) சூரியன்—எனப் பெயரிட்டார். எனவே இங்கு ஹிலிபிராண்ட் கண்டது புதுப் பொருள் அல்ல, பழைய நண்பரே எனத் தெரியவந்தது. ஆர்கானை — (188.) சூட்டில் நீரிப்பொருளாக ஓடச் செய்தார். ஓடாது சிறிது மிஞ்சி ஆவியாகவே இருக்கக் கண்டார். இங்கும் கள்வரோ? ஆம் ஒருவர் இருவர் அல்ல, மூவர். துப்பறியும் சிமான் கண்ணில் இவை தப்ப முடியுமா? இவை மூன்றினுக்கும் மூன்று புதுப் பெயர்கள். இட்டார் புதியன் அல்லது நியான் (Neon), மறைந்தான் அல்லது க்ரிப்டான் (Krypton); அயலான் அல்லது ஜெனன் என்று பெயரிட்டார். இந்தச் சோம்பேறிக் கூட்டத்தைச் சேர்ந்த ரேடான் (Radon) என்பது ரேடியம் சிதையும்போது வெளியாயிற்று. மெண்டலீவ் கோபுரத்தின் அடிநிலைவாயில் இவ்வாறு திறந்த வெளியாயிற்று.



இன்று காணும் மடக்குநிலை வரிசை.

	A I	B	A II	B	A III	B	A IV	B	A V	B	A VI	B	A VII	B	A VIII	VIII	VIII B	B	
1	1·H 1·008																	2 He 4·00	8 மடக்கு
2	3 Li 6·94		4 Be 9·02		5 B 10·82		6 C 12·00			7 N 14·01		8 O 16·00		9 F 19·00				10 Ne 20·18	8 மடக்கு
3	11 Na 23·00		12 Mg 24·32		13 Al 26·97		14 Si 28·06			15 P 31·02	24 Cr 52·01	16 S 32·06		17 Cl 35·46				18 A 39·94	
4	19 K 39·10		20 Ca 40·08		21 Sc 45·10		22 Ti 47·90		23 V 50·95				25 Mn 54·93		26 Fe 55·84	27 Co 58·94	28 Ni 58·69		18 மடக்கு
		29 Cu 63·57		30 Zn 65·38		31 Ga 69·72		32 Ge 72·60		33 AS 74·93	42 Mo 96·0	34 Se 79·2		35 Br 79·92				36 Kr 82·9	
5	37 Rb 85·44		38 Sr 87·63		39 Y 88·92		40 Zr 91·22		41 Cb 93·3				43 Ma		44 Ru 101·7	45 Rh 102·91	46 Pd 106·7		18 மடக்கு
		47 Ag 107·88		48 Cd 112·41		49 Ir 114·8		50 Sn		51 Sb 121·76	74 W 184·0	52 Te 127·5		53 I 126·93				54Xe 130·2	
6	55 CS 132·81		56 Ba 137·36		அரு மண்		72 Hf 178·6		73 Ta 181·4				75 Re 186·31		76 OS 190·8	77 Ir 193·1	78 Pt 195·23		32 மடக்கு
		79 Au 197·2		81 Hg 200·61		81 Tl 204·89		82 Pb 207·22		83 Bi 209·0		84 Po 210		85				86Rn 222	
7	87		88 Ra 225·97		89 Ac 226X		90 Th 232·12		91 Oa 230·0		92 U 238·14	•							

படம் 2

மெண்டலீவ் கோபுரம்

மடக்குநிலை வரிசை.

கோபுரச் சிகரம்			Ni. 58·7 Co. 58·9 Fe. 55·8	Pd. 106·7 Rh. 102 Ru. 101·7	Pt. 195·2 Ir. 193·1 Os. 190·8			உடனிலை அணு முகம் 8
7-ம் நிலை	F 19	Cl. 35·5	Br. 79·7 Mn. 55	I 126·9 Ma. (99)	? 218 Re. 187			உடனிலை அணு முகம் 7 எதிர்மறை அணு முகம் 1
6-ம் நிலை	O 16	S 32	Se. 79·2 Cr. 52	Te. 127.5 Mo. (96)	Po. 210 W 184	U 238		உடனிலை அணு முகம் 6 எதிர்மறை அணு முகம் 2
5-ம் நிலை	N 14	P 31	As. 75 V 51	Sb. 121.8 Cb. 93	Bi. 209 Ta. 181·5	U-x 234		உடனிலை அணு முகம் 5 எதிர்மறை அணு முகம் 3
4-ம் நிலை	C 12	Si. 28	Ge. 72·6 Ti. 48	Sn. 118·7 Zr. 91	Pb. 207·2 Hf. 178·6	Th. 232		உடனிலை அணு முகம் 4 எதிர்மறை அணு முகம் 4
3-ம் நிலை	B 10·8	Al. 27	Ga. 69·7 Se. 45	In. 114·8 Y 89	Ti. 204·4 La. 138·9 (140 Mds.)	Ac. 226		உடனிலை அணு முகம் மூன்று உடையன
2-ம் நிலை	Be. 9	Mg. 24·3	Zn. 65·4 Ca. 40	Cd. 112·4 Sr. 87·6	Hg. 200·6 Ba. 137·4	Ra. 226		உடனிலை அணு முகம் இரண்டு உடையன
முதல் நிலை	Li. 6·9	Na. 23	Cu. 63·6 K 39·1	Ag. 112·4 Rb. 87·6	Au. 197·2 Cs. 132·8	? 224		உடனிலை அணு முகம் ஒன்று உடையன
அடிநிலை வாயில்	He. 4	Ne. 20·2	A 39·9	Kr. 82·9	Xe. 130·2	Rn. 222		அணு முகம் அற்றன.
	ச	ரி	க	ம	ப	த	நி	

சென்ற இதழ்த் தொடர்ச்சி

கலக்கம்

திரு. தா. ஏ. சண்முகம் M.A., M.Litt.

உள்ளத்தில் எழும் கலக்கம் பல்வேறு வழிகளில் வெளிப்படுகிறது. கலக்க நிலையில் உடலுறுப்புகள் வேலை செய்யும் முறையை ஆராய்ந்தால் பல்வேறு மாறுதல்களைக் காணலாம். சான்றாக இருதயத் துடிப்பு (Heart-Beat) அதிகம் ஏற்படும்; நாடி (Pulse) வேகமாக அடிக்கும். சில சமயங்களில், நாடி மெதுவாகப் போவதும், இருதயத்தைச் சுற்றி ஏதோ வழி இருப்பதுபோன்ற உணர்ச்சி ஏற்படுவதும் உண்டு. கலக்கத்திற்கும் சுவாசிப்பதற்கும்கூடத் தொடர்பு உண்டு. கலக்க நிலையில் பெருமூச்சு வாங்குவதும் மூச்சுத் திணறுவதும், சில சமயங்களில் மாரடைப்பது போன்ற உணர்ச்சியும் ஏற்படுவதும் உண்டு. கலக்கம் அதிகம் ஏற்பட்டால் பசியும் அதிகம் உண்டாவதில்லை. சில சமயங்களில் வாந்தியும் பேதியும் ஏற்படுவதுண்டு. உடலில் நடுக்கம், தொண்டையை அடிக்கடி கனைத்தல், நெற்றியை அடிக்கடி சுருக்குதல் முதலியவைகள்கூடக் கலக்க நிலையைக் குறிக்கும். இவைகளோடுகூடத் திடீரென்று உடலயர்ச்சி ஏற்படல், உடல் முழுவதும் வியர்வை கொட்டுதல் முதலியவைகள் ஏற்படும். இரவு முழுவதும் தூக்கமில்லாமல் (Insomnia) இருக்கும் நிலையும், ஒரு வித மயக்க நிலையும் சுறுசுறுப்பற்ற நிலையும் உள்ளத்தில் இருக்கும் கலக்கத்தைக் குறிக்கும்.

உள்ளத்தில் கலக்கம் உச்ச நிலையை அடைந்தால் குழவிகள் (Infants) வீறிட்டு நெடு நேரம் அழ ஆரம்பிக்கும்; உடலெல்லாம் சிவந்து மலஜலம் கழிக்க ஆரம்பிக்கும். குழந்தைகளிடம் (Children) இந்த நிலை ஏற்பட்டால் கோபத்துடன் தரையில் விழுந்து புரண்டு புரண்டு அழ அழ ஆரம்பிக்கும்; எதிரிலுள்ள பொருள்களை உடைத்தெறியும். முதிர்ச்சி அடைந்தவர்களிடம் (Adults) இது கோபமான செய்கைகள், பேச்சுக்கள் இவைகளின் வழியாக வெளிப்படும். இந்த நிலையில் சிலர் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் குற்றங்களையும் செய்திருக்கிறார்கள். மேற்கூறியவைகளோடுகூட ஒருவன் பேச்சிலும் (Speech) யோசனையிலும் (Thinking) அர்த்தமற்று, தொடர்பு அற்று இருந்தால் அது அவனுள்ளத்தே உள்ள கலக்கத்தைக் குறிக்கும். கலக்க நிலையில் அதிக சந்தேகம் தோன்றுவதும் பெருந்தவறுதல்கள் இழைப்பதும் இயற்கை.

கலக்கமானது உள்ளத்திலும் பல மாறுதல்கள் ஏற்படுத்துகிறது. கலக்கத்தால் பீடிக்கப்பட்ட ஒருவன் எப்போதும் வாழ்க்கையில் எவற்றையும் துக்கமாகவே நோக்கும் இயல்புடையவனாக இருப்பான். ஒரு வீட்டில் நெருங்கிய உறவினர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தால் கலக்க நிலையில் இருப்பவர்களின் உள்ளத்தில் அவர்கள் ஒருவேளை இறந்துவிடுவார்களோ என்ற எண்ணம் அடிக்கடி தோன்றும்.

அதேபோன்று ஒருவர் தாமே ஓர் ஆபத்தற்ற எளிய நோய்வாய்ப் பட்டாலும் தாம் இறந்து விடுவோம் என்றும் தாம் இறந்துவிட்ட பின்பு எப்படித் தம்மை தூக்கிச் செல்வார்கள் என்றும் எவரெவர் வருத்தப்படுவார்கள் என்றும் வாழ்க்கையின் துக்க மானவைகளைப் பற்றிய எண்ணங்களில் ஈடுபடுவார்.

குமரப் பருவத்து மாணவர்களிடத்துக் கலக்க நிலைகளில் இங்கு ஓரிரண்டை நோக்குவோம். கலக்க நிலையை அறியும் முறைகளில் தற்போது சிறப்பாகக் கையாண்டு வரும் முறை அமெரிக்க நாட்டிலே ஹார்வார்ட் பல்கலைக்கழகத்திலே (Harvard University) உளநூல் பேராசிரியரான மர்ரே (H. A. Murray) என்பவர் ஆராய்ச்சி வாயிலாகக் கண்டு பிடித்த டி. ஏ. டி. முறையாகும்.* இந்த டி. ஏ. டி. முறை மாறுபாடுகளுடன் பல் வேறு வகைகளில் உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது. அதன் ஒரு வகையை நமது தென்னிந்திய வாழ்க்கைக்குத் தக அமைத்துக் கீழ்த்தரப் பொருளாதார நிலைமையிலுள்ள குமரப் பருவத்தினரின் உள்ள நிலையை ஆராய்ந்தபோது அவர்களின் கலக்கத்தால் வேதனையுறும் இளைஞர்கள் பலர் இருந்தனர். அவர்களில் ஒருவனது விடைகள் சிலவற்றை இங்கு நோக்குவோம்.

ல. கி. 14- வயது. தகப்பனுருக்குத் தற்போது வேலையில்லை. முன்னே வெற்றிலை பாக்குக் கடை வைத்திருந்தார்; தாய் பால் விற்று, அதனுல் வரும் ஊதியத்தைக் கொண்டு அவன் குடும்பம் நடந்து வந்தது; சிறுவனுடன் பிறந்தவர்கள் நான்கு பேர்; அவன் நான்காவது பையன். சென்னையிலுள்ள சம்பளமில்லாத ஒரு பள்ளியில் எட்டாம் வகுப்பில் படிக்கிறுன். சாதாரண நுண்ணறிவை (Intelligence) உடையவன்; வகுப்பில் அடக்கமாக இருக்கும் மாணவர்களில் ஒருவன். பெற்றோர்களால், இவன் முரட்டுச் சுபாவமும் பிடிவாத குணமும் உடையவன் என்று கருதப்படுகிறுன். அவனுடைய கற்பனைகள் பின் வருமாறு:

"எனக்குக் காயம் பட்டிருக்கிறது. அதனுல் நான் நின்றுகொண்டிருக்கிறேன். என்னை ஆஸ்பத்திரியில் சேர்ப்பார்கள். ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்து வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள். வீட்டிலே இரண்டு மூன்று நாட்கள் மருந்து கொடுப்பார்கள். ஆனுல் நான் இறந்துவிடுவேன்"

மற்றும் சில பதில்கள்:—

"நான் ஓர் ஏழை. எனக்குச் சுற்றத்தார் யாரும் இல்லை. ஒரு நாள் யார் வீட்டிலாவது திருடலாம் என்று எண்ணினேன். நான் திருடிக்கொண்டு பயந்து பயந்து திரும்பி வரும்போது என்னைப் பிடித்துவிடுகிறுர்கள். போலீஸாரிடம் ஒப்படைக்கிறுர்கள். தாய் தகப்பனுர் யாரும் உதவிக்கு வரவில்லை. என்னை ஜெயிலில் அடைக்கிறுர்கள்."

"எனக்கு ஜுரம் கண்டு இருக்கிறது. எனக்குப் பக்கத்தில் என்னுடைய தகப்பனுர் உட்கார்ந்து கொண்டிருக்கிறுர். நான் இறந்து விட்டேன். என் தகப்பனுருக்கு நான் இறந்துவிட்டது தெரியவில்லை. பையன் தூங்குகிறுன் என்று என் முகத்தில் கையை வைக்கிறுர். என் மூக்கிலிருந்து மூச்சு வரவில்லை."

மேற்கூறிய கற்பனைகளையும் அம் மாணவனின் சூழ்நிலையையும் பொருளாதார நிலைமையையும் ஆராய்ந்தால்

* Thematic Apperception Technique (T. A. T.)

எப்படி அவனது மனம் கலக்கத்தினுல் பீடிக்கப்பட்டிருப்பது காரணமாக அவன் தனது வாழ்க்கையில் நோய்வாய்ப்படல், இறத்தல் போன்ற துக்ககரமான நிகழ்ச்சிகளையே முன்னே காண்கிருன் என்பதும், களவு செய்யவும் அவனது உள்ளம் தூண்டுகிறது என்பதும் தெளிவு படுகின்றன. இவைகளுக்கெல்லாம் பொதுவான காரணம் அவனது தற்போதைய வறுமை வாழ்க்கையே யாகும். குமரப் பருவத்திலே உடலிலும் உள்ளத்திலும் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன. இம் மாணவன் குமரப்பருவத்து ஆரம்பத்தில் இருப்பது காரணமாகவும், அவனுள் ஏற்படும் மாறுதல்களுக்குத்தக ஆதரவு சமூகச் சூழ்நிலையினின்றும் வராதது காரணமாகவும், எதிர்கால வாழ்விலும் சுக வாழ்வு வாழமுடியாது என்ற எண்ணத்தினுல் பீடிக்கப்பட்டுக் கலக்க நிலையை அடைந்திருக்கிருன். இது போன்ற நிலையில் சிறுவர்கள் பலர் குற்றங்களைச் செய்யவும் துணிகின்றனர்.

உள்ளத்திலே கலக்கமேற்படுவது மனிதர்கள் யாவருக்கும் இயற்கை என்று முன்பே கண்டோம். சாதாரணமாக மனிதனிடத்தே ஏற்படும் கலக்கமானது உடல் உள்ளங்களின் சம நிலையைப் போக்கினுலும் அது அவன் சமூகத்தில் முன்னேறுவதற்குரிய ஒரு சக்தியாகவும் அமைகிறது. ஒருவனது உள்ளத்தில் ஏதோ ஒரு ஆபத்து நேரிடலாம் எண்ணம் தோன்றுவதன் விளைவாகக் கலக்கம் ஏற்படுகிறது. அந்தக் கலக்கம் ஏற்படுவதற்குக் காரணமான ஆபத்தைப் போக்கி உயிரைக் காப்பாற்றிக்கொள்ள அதே உள்ளம் பல வகைகளை ஆராய முயலுகிறது. இந்தச் சமயங்களில் மனிதன் சில சமயங்களில் உன்னத வழிகளையும் கற்பனையினுல் அறிகிருன். அவைகள் அவனது முன்னேற்ற வழிகளாகவும் அமைகின்றன. ஏன் ஒருவனது தன்மை வளர்ச்சி (Personality Development) அவன் எவ்வளவு வெற்றிகரமாகத் தன்னுள்ளத்தே அவ்வப்போது எழும் கலக்க நிலையைத் தகுந்த முறைகொண்டு தீர்க்கிருன் என்பதை யொட்டி அமைகிறது. இது சாதாரண உள்ள அமைப்பை உடைய (Normal Mind) மனிதனைக் குறிக்கும்.

கலக்க நிலை ஒருவனிடத்துக் காணப்படுவதின் விளைவாக அவன் பிறழ்வான உள்ள நிலையை உடையவன் என்று கூறமுடியாது. ஒருவன் தன்னுள்ளத்தே எழும் கலக்க நிலை உண்டாவதற்குக் காரணமான, எதிர்பார்க்கப்பட்ட ஆபத்தை எவ்வாறு போக்குகிருன் அல்லது தனது உடலுக்கோ உயிருக்கோ ஊறு நேராது எவ்வாறு தடுத்துக்கொள்ளுகிருன் என்பவற்றினின்றே நாம் நிர்மாணிக்க முடியும். ஒருவன் கலக்கத்தை விளைவிக்கும் தூண்டுதலைப் போக்குவதற்குரிய நடத்தையை மேற்கொள்ளாவிடின் அவனது உள்ளம் பிறழ்வான நிலையில் உள்ளது என்றே கூறலாம். இந்த உண்மையை, நாடி நோயால் (Neurosis) பீடிக்கப்பட்டவர்களிடம் காணலாம். ஒரு நடுத்தர வயதுடையவன் ஒரு எலியையோ பூனையையோ கண்டு அதற்குத்தக நடத்தையை மேற்கொள்ளாமல் கலக்க மடைவதும், தன் மகன் ஒரு வகுப்பினின்றும் மற்ருெரு வகுப்புக்கு மாற்றப்படுவான் என்று ஆசிரியர் கூறியபோதிலும், மகன் பரீட்சையில் தோல்வி அடைவானே என்று ஏங்கிக் கலங்குவதும் பிறழ்வான நிலையையே குறிக்கும்.

பிறழ்வான கலக்க நிலை ஏற்படுவதற்கு அடிப்படையான காரணம் சுயேச்சையாகவும் தன்னம்பிக்கையோடும் எந்தக் காரியங்களையும், செய்ய முடியாது தவிக்கும் குழவி (Infancy) குழந்தை (Childwood) குமரப் பருவங்களில் (Adolescence) பெற்ருேர்

களும் மற்றவர்களும் அவர்களுக்கு நிம்மதியான வாழ்க்கை வாழ்வதற்கான வழிகளைக் கொடுக்காமையே யாகும். உணவு, தட்ப வெப்ப நிலைகளினின்றும் போதிய தற்காப்பு, பயம் கோபம் முதலிய இயல்பூக்கங்கள் (Instincts) புனித வழிகளில் (Sublimation) வெளிவரப் பல்வேறு ஆட்டங்கள், பெற்றோர்களிடமிருந்து ஆதரவு, அன்பு, அவர்கள் செய்யும் நற் காரியங்களில் மகிழ்ச்சியைத் தெரிவித்தல், அவர்களுக்கு ஊக்க மூட்டுதல் ஆகிய இவைகளினால் குழந்தை பிற்காலத்தில் எந்தக் காரியத்தையும் சாதிக்கத் தன்னம்பிக்கையும் தைரியமும் அடைந்து உள்ளத்தில் எழும் கலக்கத்தைச் சிறந்த முறை கொண்டு போக்கிக் கொள்வதால் உயர்வு அடைந்து, தான் உயரச் சமூகமும் உயர்ந்து வாழும். இங்ஙனமின்றி உயிர் வாழ்வதற்குப் போதிய உணவு அற்று, பெற்றோர்களிடமிருந்து அன்பும் ஆதரவும் அற்றுப் பிறப்பின் காரணமாக அமைந்த இயல்பூக்கங்கள் இயற்கை வலிவோடு வேலைசெய்யச் சமூகத்திலே ஆண்டுதோறும் நாடி நோயால் பீடிக்கப் படும் மக்கள், இளங் குற்றவாளிகள் (Juvenile Delinquents) குற்றவாளிகள் (Criminals) முதலியவர்கள் எண்ணிக்கை வளர்ந்து கொண்டேதான் போகும். அந்த நிலையில்தான் தற்போது நமது நாடு இருக்கிறது.

வரிசை மாற்றம்

ஆங்கிலேய ரிடையே அவர்களைப் போலவே பழகவேண்டு மென்று இந்தியச் சீமான் ஒருவருக்கு ஆசை ஏற்பட்டது. தேநீர் விருந்துகளில் கலந்துகொண்டால் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று ஒரு நண்பரிடம் கேட்டார். "கொஞ்சம்கூட வெட்கப்படக்கூடாது. ஆண் பெண் இருபாலினரிடமும் சாதாரணமாகப் பழகவேண்டும். அவரவர்களுடைய................" என்பதுபோல என்னென்னவோ அந்த நண்பர் சொல்லிக் கொடுத்தார்.

சீமான் ஒரு விருந்துக்குப் போனார். அவருக்கு இரண்டு பக்கத்திலும் இரண்டு பெண்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்தான் வெட்கப்படக் கூடாதே! வலப்புறம் திரும்பினார்: "ஓ! உங்களைச் சந்திப்பதிலே நிரம்ப மகிழ்ச்சி யடைகிறேன். ....உங்களுக்குக் கலியாணம் ஆகிவிட்டதா?......" என்று கேட்டார். அந்த அம்மாள் தன் உடம்பை ஒரு குலுக்குக் குலுக்கி, "இல்லை" என்று சொன்னாள். சீமான் கேட்கிறார்: "உங்களுக்கு எத்தனை குழந்தைகள்? எல்லோரும் சௌக்கியம் தானே?"......அந்த அம்மாள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்ததைக் கண்டு நம் சீமான் பயந்தே போனார். தாம் ஏதோ தப்புச் செய்துவிட்டதாக எண்ணினார்.

இடப்புறம் திரும்பி அங்கிருந்த அம்மாளிடம் சாதாரணமாகப் பழகத் தொடங்கினார். "ஓ! உங்களைச் சந்தித்தது என் பாக்கியம்..........உங்களுக்கு எத்தனை குழந்தைகள்? எல்லாரும் சௌக்கியந்தானே!........." அந்த அம்மாளுக்கு ஒரே மகிழ்ச்சி, இப்படி ஒரு இந்தியச் சீமான் தன் குழந்தைகளைப் பற்றி விசாரித்ததில். "ஆகா, எல்லோரும் சௌக்கியமாக இருக்கிறார்கள். மிக்க நன்றி ...." என்றாள் அந்தத் துரைசானி. நம் சீமானுக்கு உற்சாகம் வந்து விட்டது. "உங்களுக்குக் கலியாணமாகிவிட்டதா?......"

ஐயையோ! இதென்ன இந்த அம்மாள் முகமும் இப்படிக் கோணுகிறதே!

சீமானுக்கு ஒன்றும் புரியவில்லை.

— கோலோசோ

உள்ளத்தின் உண்மை

குறிப்பு:— மனிதனின் குறைபாடுகள் பல. நன்கு ஆராய்ந்தால் இக் குறைகள் பலவற்றிற்கு உள்ளமே காரணமாக அமைந்திருக்கின்றது என்பது புலனாகும். உள்ளத்தைப் பற்றிய கேள்விகளுக்கு உள நூல் ஆசிரியர் திரு. தா. ஏ. சண்முகம் அவர்கள் இப் பகுதியில் தக்க விடையளிக்க அன்புடன் இசைந்துள்ளார்கள். அன்பர்கள் கேள்விகளை எழுதி உள்ளத்தின் உண்மையை உணரலாம்.

கேள்விகள் சுருக்கமாக இருத்தல் வேண்டும். கேள்விகளை எழுதி அனுப்புவோர் பெயர்கள் வெளியிடப் பெறா. எனினும் கேள்விகளோடு அவர்களுடைய பெயரையும் முழு முகவரியையும் குறித்து ''ஆசிரியர், 'கலைக்கதிர்' பூளைமேடு, கோயமுத்தூர்'' என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

●

மனம் வைத்தால் செய்ய முடியாதது ஒன்றுமில்லை என்று பொதுவாக வழங்கி வரும் ஒரு சொல்லில் ஏதேனும் உண்மை இருக்கிறதா?

மனம் வைத்தால் எதையும் சாதிக்க முடியும் என்பதில் உண்மை இருந்தாலும், இது யாவருக்கும் பொருந்தாது. ஒருவனது சாதிக்கும் தன்மை அவனது உள்ளத்திடத்தோடன்றி அவன் சாதிக்க வேண்டிய காரியம், அவனுக்குப் பிறப்பியல்பால் அமைந்த நுண்ணறிவு, சூழ்நிலையில் நாளும் கிடைக்கும் உதவி, அவன் திறமை முதலியவைகளையும் அடுத்து இருக்கிறது. மந்த புத்தி உடைய ஒருவன், அணுக் குண்டு போன்ற மற்றொரு குண்டைக் கண்டுபிடிக்க உள்ளத்திடத்தோடு ஆரம்பித்தாலும் அது முடியாத காரியம் என்றே சொல்லலாம். ஆனால் சரித்திரத்தை ஆராய்ந்தால், உலக முன்னணியில் நின்று ஆட்சி புரிந்து வந்த சிலர் முதன் முதலாக நம்பத்தகாத நிலையினின்றே உச்ச நிலையை அடைந்திருக்கிறார்கள். டெமஸ்தனிஸ் (Domesthenes) என்றால் எவரும் அறிவர். பண்டைய கிரேக்கர் நாட்டிலே 'சொல்லின் செல்வராக' விளங்கினார். அவர் முதன் முதலே, தெற்றித் தெற்றிப் பேசும் பெருங் குறையை உடையவராயிருந்தார். ஆனால், அவர்தாம் கிரேக்க நாட்டிலே சிறந்த பேச்சாளராக விளங்க வேண்டும் என்ற ஒரு துணிவான எண்ணத்துடன் ஆரம்பித்தார். நமது மக்கள், ஆம், முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுகிறான் என்று கூறிவிடுவார்கள். அதைப்போன்ற மக்களும், டெமஸ்தனிஸ் வாழ்ந்த காலத்தில் இல்லாமலில்லை. அவர் விடா முயற்சியுடன், கடற்கரைக்குச் சென்று அங்கு நாள்தோறும் கத்தி நாளடைவில் தம் இடத்தேயிருந்த குறையைப் போக்கிக் கொண்டது மட்டுமல்லாமல், உலகத்தே சிறந்த பேச்சாளாராகவும் திகழ்ந்தார்.

அதேபோன்று பொதுமக்கள் ஆதரவோடு பன்னிரண்டு ஆண்டுகளுக்குமேல் ஜனாதிபதியாயிருந்த ரூஸ்வல்ட் (Roosevelt) இளைஞராக இருக்கும் போது, பலமற்று மெல்லியராகவும் கோழையாகவும் இருந்தார். தம் போன்ற இளைஞர்களின் இகழ்ச்சிக்கும் பரிகாசத்திற்கும் ஆளானார். அதன் விளைவாக, அவர் தாம் மிகுந்த பலமுடைய ஒருவராக மாற வேண்டும் என்ற திட மனத்துடன், குதிரை ஏற்றம், காடுகளில் வேட்டையாடுதல் போன்ற உடம்பிற்கு உரம்

தரும் பொழுதுபோக்குகளில் காலத்தைக் கழித்து நாளடைவில் மிகுந்த தைரியமுடையவராகவும், வலிவு உடையவராகவும் விளங்கினார். சென்ற மகாயுத்தத்திற்குக் காரணமான ஹிட்லர் சரிதையை ஆராய்ந்தாலும், தற்போதைய ருஷ்யநாட்டுத் தலைவர் ஸ்டாலின் சரித்திரத்தை ஆராய்ந்தாலும், எப்படி மனம் வைத்தால் எதையும் சாதிக்கலாம் என்று அறியலாம். ஆட்லர் (Adler) என்ற உளநூலறிஞர் 'ஒவ்வொருவனும் பிறந்த உடன், இந்தப் பரந்த உலகத்தைக் காணும்போது, நாம் எப்படி உயிர் வாழ முடியும், என்ற கலக்கத்தினால், தாழ்ந்த உணர்ச்சியை (Inferiority Feeliug) அடைகிறான். ஆனால், அவனவன் வாழும் சூழ்நிலையினின்று கிடைக்கும் ஆதரவுக்குத்தக ஒவ்வொருவனும் தான் வாழ்வதற்கு ஒரு உயர்ந்த நிலையைக் கற்பனை செய்து அதற்குத்தக்கபடி, தன்னுடைய வாழ்க்கையை மேற்கொள்ளுகிறான். இப்படி வாழ்க்கையை ஆரம்பிப்பவர்கள் உள்ளம் திடமானதாயிருந்தால் அவர்கள் வேண்டியதைச் சாதிக்கிறார்கள். இன்றேல் தோல்வியுற்றுப் பின்னடைகிறார்கள்' என்று கூறுகிறார்.

அமெரிக்காவில் செய்தித்தாளின் தோற்றம்

246 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவில் முதல் செய்திப் பத்திரிகை வெளிவந்தது.

ஜான் காம்ப்பெல் என்பவர் ஒரு தபாலதிகாரி (Post Master) பாஸ்டன் நகரத்தில் அவர் வேலைபார்த்து வந்தார். அந்த நகரம் வெளிநாட்டாரின் போக்கு வரத்து அதிகம் உடையது. காம்ப்பெல் அவர்கள் மூலமாகச் செய்திகளை அன்றாடம் தெரிந்துகொண்டு, கவர்னர் விந்த்ராப் முதலிய பெரிய அதிகாரிகளுக்குக் கடிதங்கள் எழுதிச் செய்திகளை அறிவித்துவந்தார். எல்லோருக்கும் செய்தி அரிய ஆசை இருந்தது; ஆனால், எல்லோருக்கும் கடிதம் எழுதிக்கொண்டிருக்கப் போஸ்ட் மாஸ்டருக்கு நேரம் ஏது? அவருக்கு ஒரு யோசனை பிறந்தது. தம் வீட்டின் பின்புறம் ஒரு சிறு அச்சகம் தொடங்கினார். 1704-ம் ஆண்டு எப்ரல் 24-ம் தேதி "பாஸ்டன் செய்திக் கடிதம்" என்ற பெயரோடு செய்தித் தாளை வெளியிட்டார். அந்தப் பத்திரிகைக்கு நிரம்ப ஆதரவு கிடைத்தது.

— கெட்டரிங்

"மிகச் சிறந்த ஓவியம் ஒன்று குருடனிடத்தி லிருந்தால் அது அவனுக்குச் செல்வம் ஆகாது. காணும் கண்ணும் சுவைக்கும் அறிவும் படைத்தவனுக்கே அது செல்வம் ஆகும்"—இப்படி ஓர் ஆங்கிலப் பேராசிரியர் கூறுகிறார்.

எனது பூங்கா

திரு. பொ. திருகூடசுந்தரம் பிள்ளை, M.A., B.L.

இந்தத் தலைப்பைக் கண்டதும் என் நிலைமையை நன்கு அறியும் நண்பர்கள் "இவரிடம் பூங்காவா? எப்பொழுது பெற்றார்? ஏதேனும் ஒரு தொட்டி வாங்கி அதில் ஒரு பூச்செடி வளர்க்க ஆரம்பித்திருக்கிறாரா? அதைத்தான் இங்கே எனது பூங்கா என்று பீத்திக்கொள்ள எண்ணுகிறாரா? அல்லது பொருளுடையோர் வைத்திருக்கும் பூங்காக்களைக் கண்டு உண்டாகும் அழுக்காற்றுக்குப் போக்குக் கொடுப்பதற்காக இப்படி எழுத எண்ணுகிறாரோ?" என்று கூறக்கூடும். இதற்கு என்ன பதில் கூறுவது?

"நான் பட்டினியா யிருந்தாலும், என் உணவு வாங்கமட்டுமே காசு இருப்பினும் நான் பூவைக் கண்டால் உணவை வாங்காமல் பூவையே வாங்குவேன்" என்று மகமது நபி கூறினாராம்.

இவருக்குப் பூவிலுள்ள இத்தனை ஆசையைக் கண்டதும் நான் இவர் என்ன தமிழர்தானோ என்று அடிக்கடி எண்ணுவதுண்டு. தமிழர்களுக்குப் பூவிலுள்ள ஆசை உலகில் வேறு எந்த இனத்தாருக்கும் கிடையாது என்று உறுதியாகக் கூறலாம். தமிழர்கள்தான் கடவுளுக்கு மலரிட்டு வழிபடுபவர்கள். பெரியோர்களுக்கு மாலையிட்டு வணங்குவார்கள். கலியாணம் செய்வதை மாலையிடுதல் என்று கூறுவார்கள். பெண்கள் தலையில் பூக்களைச் சூட்டிக்கொள்வார்கள். பெரியோர் பேசுவதைத் திருவாய் மலர்வதாகச் சொல்லுவார்கள். முகம் மலர்வதாகக் கூறுவர் கூறுவார்கள். பத்திரிக்கைகளுக்குக் கூட மலர்கள் என்றே நாமமிடுவார்கள்.

உடலுக்குரிய உணவிலும் உள்ளத்துக்குரிய உணவே சிறந்தது என்று மகமது நபி கூறுகிறார். அதில் ஐயத்துக்கு இடம் ஏது? "மனிதன் வயிற்றிலிடும் உனவினால் மட்டும் ஜீவிப்பதில்லை." என்று இயேசு கிறிஸ்துவும் கூறியிருக்கிறார் அல்லவா? மலர்கள் அத்தகைய உணவாகும். அவை அழகும் மணமும் பொருந்தியவை. அவற்றைப்போல் அழகும் மணமும் பொருந்திய வேறு பொருள்கள் கிடையா. "அழகுள்ள பொருள்கள் இடைவிடாமல் இன்பம் அளிக்கும் ஊற்றாகும்" என்று கீட்ஸ் என்னும் ஆங்கில மகாகவி கூறுகிறார். அவரை ஷேக்ஸ்பியருக்கு இணையாகக் கூடக் கூறுவார்கள். அவர் எத்தனையோ பாடல்கள் இயற்றியிருப்பினும் இந்தப் பொருளுடைய வரியை அறியாத ஆங்கில மக்களும் ஆங்கிலம்

படித்த மக்களும் கிடையார். இந்த உண்மையை அறிந்துதான் தமிழர்கள் மலர்களிடம் தங்கள் உள்ளத்தை அத்துணைக் கொள்ளை கொடுத்துள்ளர். முருகு என்னும் அழகையே தங்கள் ஆதி தெய்வமாகக் கொண்டார்கள் அல்லவா?

மலர்கள் அழகும் மணமும் பொருந்தியவை என்பது மட்டு மன்று. அவைதான் உலகத்தை நிலைபெறுத்திக்கொண் டிருப்பவை. எந்த ஜீவராசியிடம் மலர்ச்சி என்பதில்லையோ அந்த ஜீவராசி அழிந்தே போகும். அது ஒரு காரணம் தமிழர்கள் தங்களை அறியாமலே மலர்களைக் கண்டு மயங்கி நிற்பதற்கு.

என்னிடம் ஒரு தொட்டி மட்டுமே இருக்கும் என்று என் நண்பர்கள் கேலி செய்வார்கள் என்றேன். அப்படிக் கேலிசெய்தாலும் அதனல் பாதகமில்லை. அழகான பூக்களைத் தரக்கூடிய ஒரு செடியேனும் வைத்திருக்கும் நான் அதுகூட இல்லாதவர்களை விட ஓராயிரம் மடங்கு அதிகப் பேறுடையவனே ஆவேன். மலர்களால் அடையும் இன்பத்தை எழுதிக் காட்ட முடியாது; துய்த்துத்தான் அறிய முடியும். வெளியே போய் வேலை செய்துவிட்டுச் சோர்ந்துபோய் வீட்டுக்கு வருகிறோம். நம்முடைய குழந்தை சிரித்துக்கொண்டு ஓடி வந்து நம்மைக் கட்டிக்கொள்கிறது. அப்போது நம்முடைய சோர்வு எங்கே? போன இடம் யாருக்கும் தெரியாது. குழந்தையின் மலர் முகம் கண்டதும் சோர்ந்து குவிய ஆரம்பித்துக்கொண் டிருந்த நம்முடைய முகமும் சூரியனைக் கண்ட தாமரை போலவும் சந்திரனைக் கண்ட குமுதம் போலவும் மலர ஆரம்பித்து விடுகிறது. நரையும் திரையுமுள்ள கிழட்டு முகம்கூட ஒளி பொருந்தியதாக ஆகிவிடுகிறது.

நாம் வீட்டுக்கு வந்ததும் குழந்தை வரவேண்டாம். நம்மை வரவேற்கத் தொட்டியி லுள்ள செடியில் பூத்து நிற்கும் மலர்போதும். அதைக் கண்டதும் குழந்தையைக் கண்ட முகம் மலர்ந்ததுபோலவே மலர்ந்து விடுகிறது. சோர்வும் மறைந்து விடுகிறது. இதை அனுபவித்துப் பார்க்கும்படி என் நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ருஷிய நாட்டில் காதைரைன் என்ற சக்ரவர்த்தினி அரசாண்டு கொண் டிருந்தாள். ஒருநாள் அதிகாலையில் எழுந்ததும் சாளரத்தின் வழியே வெளியே பார்த்தாள். அந்த மைதானம் வெட்டவெளியாக இருந்தது. ஆனல், அதன் நடுவில் ஏதோ ஒரு சிறு காட்டுச் செடி பூத்துநின்று கொண் டிருந்தது. யாரும் தீண்டாத செடி. அற்புதமான மலர். ஆயினும் அந்தப் புல்வெளிக்கு அதுவே ஒளி தந்துகொண் டிருந்தது. அதைக் கண்ட அரசி அந்த அற்புதக் காட்சியில் சொக்கிப்போய்விட்டாள். உடனே அரண்மனை அதிகாரியைக் கூப்பிட்டு யாரும் அந்தச் செடியைப் பிடுங்கவோ அதிலுள்ள மலர்களைப் பறிக்கவோ செய்யாதிருக்குமாறு ஒரு காவற் சேவகனை அதன் அருகே நிறுத்திவைக்குமாறு பணித்தாள். இதையெல்லாம் அனுபவம் மூலம் அறியலாமேயன்றிப் பிறர் சொல்லி அறிய முடியாது.

ஆகையால் என்னிடம் உள்ளது ஒரு சிறு தொட்டியும் அதிலுள்ள ஒரு அற்பச் செடியுமாகவே இருந்தாலும் அது என் பூங்காதான். அந்த அளவுக்கு நான் அதிஷ்டசாலிதான். அதை யாரும் மறுக்கமுடியாது. ஆயினும் என்னிடம் பூந்தொட்டிப் பூங்காதான் உண்டு என்று எண்ணிவிட வேண்டாம். என்னிடம் ஒரு பூங்காவன்று, அநேக பூங்காக்கள் உள. இந்த ஊரில் மட்டும் அன்று. நான் போகும் ஊர்களில் எல்லாம் உள. இந்த ஊரில் உன்னுடைய பூங்காக்கள் எவை என்று கேட்பீர்களோ? முதலா

வதாக நான் வசிக்கும் தியாகராயநகரில் என் வீட்டின் அருகே உள்ள பனகால் பார்க் என்னும் பூங்கா எனக்குச் சொந்தமல்லவோ?

நான் வெளியே போகும் வழியில் எந்த வீடுகளில் மரங்கள் நிற்கின்றனவோ அவை எல்லாம் எனக்குச் சொந்தமல்லவோ? ஜெமினி முலையில் கிராமபோன் கம்பெனியார் தோட்டத்தில் நிற்கும் பூ மரமும் யாருக்குச் சொந்தம்? நான் அதைப் பார்த்துச் சொக்கி நிற்கும்வரை அது எனக்கே தான் சொந்தம். நான் வேலைபார்க்கும் பல்கலைக் கழகத்தின் தோட்டத்தில் பூ மரம் ஒன்று அனாதையாக நின்றுகொண்டிருந்தது. அதை இன்று நான் என்னுடையதாக ஆக்கிக்கொண்டேன். கடற்கரை வீதியிலுள்ள மராமத்து இலாகாக் காரியாலயத்தின் வாசலில் காணப்பெறும் மலர்ச் செடிகள் காரியாலயத்திற்கு உரியனவா அல்லது எனக்கு உரியனவா?

மலர் மரங்கள் பார்க்குகளில் நிற்கலாம். அப்பொழுது அவை பார்க்குக்கு உரிய நகர சபையார்க்குச் சொந்தம். மலர் மரங்கள் வீட்டுத் தோட்டங்களில் நிற்கலாம். அப்பொழுது அவை அந்த வீட்டார்க்குச் சொந்தம். மரங்கள்தான் அவர்களுக்குச் சொந்தமேயன்றி அவைகளில் இலங்கும் அழகும் அற்புதமும் யார் யார் அவைகளைப் பார்த்து ஆனந்திக்கிறார்களோ அவர்களுக் கெல்லாம் சொந்தம். மரங்களின் உடல் வீட்டார்க்கு உரியது. ஆனால், மரங்களின் உள்ளமோ அவற்றுடன் பேசுவார்க்கு உரியது. யார் அதைப் பார்த்து நிற்கிறார்களோ அவர்களை நோக்கியே அவை அகமகிழ்ந்து நகை செய்கின்றன. அவற்றின் உள்ளமும் பார்ப்போர் உள்ளமும் ஒன்றுபடுகின்றன. அந்தக் காரணத்தால் ஆன்ம வெள்ளம் பாய்ந்து அழியாத ஆனந்தத்தை அளிக்கின்றது. ஆகவே, என்னுடைய பூங்காக்கள் எனக்கு மட்டும் உரியனவல்ல. என்னைப்போல் அவற்றைத் துய்க்க அறிந்தோர் அனைவர்க்கும் உரியவையே யாகும்.

நாம் ஒரு வீட்டிற்குப் போகிறோம். அங்கே மகாத்மா காந்தியின் படத்தைப் பார்க்கிறோம். அது அழகாக இருக்கிறது. உடனே அந்த வீட்டாரிடம் அத்தகைய படம் எங்கே கிடைக்கும் என்று விசாரிக்கிறோம். விசாரித்து அத்தகைய படம் ஒன்றை வாங்கிக்கொண்டு வந்து நம்முடைய வீட்டில் மாட்டுகிறோம். அவ்வளவு தான். அதன் பிறகு அதைத் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை. ஒருவேளை யாரேனும் நம்முடைய வீட்டுக்கு வருபவர் 'இந்தப் படம் அழகாயிருக்கிறதே' என்று கூறினால் 'ஆமாம் இன்ன இடத்தில் இவ்வளவு சிரமப்பட்டு வாங்கி வந்தேன்' என்று கூறி மகிழ்கிறோம். ஆனால், இந்த மகிழ்ச்சி படத்தின் அழகால் ஏற்பட்டதன்று, இத்தகைய படத்துக்குச் சொந்தக்காரன் • ஆகிவிட்டோம் என்ற எண்ணத்தால் ஏற்பட்டதே யாகும். இதுபோலத்தான் பூங்காவை உடையவர்களும் நடந்து கொள்வார்கள். வீட்டின் முன்பக்கம் எத்தனையோ அழகான பூச்செடிகளை வைத்து வளர்க்கிறார்கள். ஆனால் அவைகளைப் பார்த்து மகிழ அவர்களுக்கு எண்ணமுண்டோ இல்லையோ, நேரம் கிடையவே கிடையாது. அதைப் பார்த்து மகிழுபவர்கள் எல்லாம் வீதியில் போகும் நாம்தான். அதனால்தான் செடிகள் அவர்களுடையவை; அவற்றின் அழகு நம்முடையது என்று கூறினேன்.

ஆகவே பூங்காவனங்கள் ஏற்பட்டது உரிமை கொண்டாடுவதற்காக வன்று, அழகு அனுபவத்துக்காகவே யாகும். அழகு என்பது அதை அனுபவிப்பவர்க்கே சொந்தம். அந்த முறையில் நான் எந்தப் பூங்காவனங்களைக் கண்டு என் இதயத்தைப் பறிகொடுக்கிறேனே அந்தப் பூங்காவனங்கள் எல்லாம் என்னுடையனவே.

•

8

வானளாவிய மாளிகை காண்போர் கண்ணைப் பறிக்கும் வண்ணம் அலங்கரிக்கப் பட்டிருந்தது. மாளிகையைச் சுற்றிலும் இருந்த மரங்களிலும் செடிகளிலும் பல வர்ண மின்சார விளக்குகள் அமைக்கப்பட் டிருந்தன. மாளிகையின் வாயிலின் இடத்தே பெரிய குலைகளோடு கூடிய உயர்ந்த வாழை மரங்களும் மாவிலைத் தோரணங்களும் கட்டப்பெற்று, அவ்விடமெங்கும் திருமணப் பொலிவு வீசியது. மாளிகைக்குப் பக்கத்தே இருந்த வெளியிடத்தில் திருமணத்திற்கெனப் பெரியதொரு பந்தல் அமைக்கப்பட்டு விளங்கியது. அப்பந்தலுக்குச் செய்யப்பட்டிருந்த அலங்காரங்கள் எவ்வளவு! அலங்காரத்துக்கென எத்தனை ஆயிரம் ரூபாய் செலவிடப் பட்டதோ!

மாளிகைக்கு முன் கணக்கற்ற மோட்டார் வண்டிகள் நின்று கொண்டிருந்தன. ஒரு செல்வப் பெருமகன் வீட்டில் திருமணம் என்றால் எத்தனைச் செல்வப் பெருமக்கள் அத்திருமணத்திற்கு வந்திருந்து சிறப்பிப்பார்கள் என்று கூற வேண்டுமா? அம்மாளிகைக்கு வெளியேயும் பெருங் கூட்டம். குழிந்த கண்ணும் கிழிந்த ஆடையும், ஒட்டிய வயிறும் ஒடுக்கிய உடலும், விரிந்த தலையும் சுருங்கிய தோலும் கொண்ட நூற்றுக் கணக்கான ஏழை மக்கள் மாளிகைக்கு

வெளியே சோற்றுக்கு ஏங்கி நின்று கொண்டிருந்தனர். மாளிகையின் உள்ளிடத்தே அலங்காரம், ஆணவம், அதிகாரம், செல்வம், செருக்கு! வெளியிடத்தே ஏழ்மை, பசி, பிணி, கண்ணீர்! அப்பப்பா, எவ்வளவு வேற்றுமை!

மணமகன் நரசிம்ம ஐயங்காருக்கு வயது நாற்பத்தொன்பது முற்றியிருந்தும் இங்கும் அங்கும் பரபரப்புடன் அவர் இயங்கிக்கொண்டிருந்தார். பதினைந்து வயதுடைய இளம் பாவையை மணக்கப் போகும் உணர்ச்சி வேகமே அவரை அங்ஙனம் சுறு சுறுப்புடன் அலையச் செய்தது. திருமணத்திற்குரிய எல்லா ஏற்பாடுகளையும் தாமே நேரில் சென்று அவர் பார்வையிட்டார். அவர் கிழ வயதை எட்டியும் காமம் அவரை விட்டபாடில்லை. நரசிம்ம அய்யங்கார் இப்போது பருமகனாகத் திகழ்வது மூன்றாவது முறை. இதற்கு முன் தம் வாழ்க்கைத் துணைவியராய் வந்த இரு பெண்மணிகளையும் தன் காமத்துக்கும் கொடுமைத் தன்மைக்கும் இரையாக ஈந்தும் அவரது காமமும் அரக்கத் தன்மையும் ஒரு சிறிதும் தணியவில்லை.

திருமண ஏற்பாடுகள் யாவும் மிக ஆடம்பரமாக நடந்துகொண்டிருக்க மாளிகையின் ஓர் அறையில் மணமகள் சந்திரா கண்களிலிருந்து நீர் பெருக விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தாள். வலையில் சிக்குண்ட மான் போல் அவள் திகிலடைந்து இருந்தாள். அவளுடைய தோழியர் இருவர் அவள் பக்கத்தில் அமர்ந்து அவளைத் தேற்றிக்கொண்டிருந்தனர்.

முன்னொரு நாள் தகப்பனார் சீனிவாச ஐயங்கார் நரசிம்மனைத்தான் அவள் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று உறுமியதிலிருந்து சந்திரா தன் சிந்தையைக் கவர்ந்த செல்வன் கண்ணனைச் சந்திக்க முயன்றாள்; சந்தித்து அவனையே அடைக்கலமாக அடைவது என்றும் உறுதி செய்து கொண்டாள். ஆனால் அந்தோ, அவள் எண்ணிய எண்ணம் கைகூடவில்லை. கண்ணன் நோய்வாய்ப் பட்டுக் கிடந்தது பாவம் அவளுக்கு எப்படித் தெரியும்! அவனைக் காணாது கட்டழகி சந்திரா மனமுடைந்தாள். இறுதியில் தன் தகப்பனார் கொடுமையினின்றும் தப்ப வழியின்றி அவள் அவ்வறையில் இங்ஙனம் கண்ணீர் விட்டுக் கதறிக் கொண்டிருந்தாள்.

திருமண மேளம் கொட்டியது. ஒவ்வொரு கொட்டும் சந்திராவின் இருதயத்தைக் கொட்டுவது போல் அவளுக்குத் தோன்றியது. பாவம், பணத்திற்காக ஓர் இளம்பாவை பலியா? அநியாயம்! அநியாயம்!

திருமணமாகி ஒரு மாத காலம் வரை நரசிம்மன் சந்திராவினிடம் அன்பாகவே நடந்து கொண்டார். ஆனால் அது உண்மை அன்பு என்று சொல்வதற்கில்லை. உண்மை அன்பாயின் அது நாளடைவில் வளர்ந்திருக்கும். அங்ஙனம் வளராமல் அவ்வன்பு விரைவில் குறைந்து மறைந்து போயிற்று. சந்திரா புதுப்பெண் அல்லவா? புதுப்பெண்ணிடத்தில் அவர் கொண்டிருந்த மோகமே முதலில் அன்பு போல் தோன்றியது. மோகம் நிலைத்திராது. மோகம் முப்பது நாள் என்று சொல்வதுண்டு. நாள் ஆக ஆகச் சந்திராவின் பால் நரசிம்மன் கொண்டிருந்த மோகம் குறையலாயிற்று. மோகம் குறையவே மிருகத் தன்மையாகிய அவருடைய உண்மை இயல்பு விளங்கித் தோன்றியது. வழக்கம் போல் அவர் வேறு புதுப்பெண்களை நாடத் தலைப்பட்டார்; சந்திராவை மிகவும் துன்புறுக்கத் தொடங்கினார். அவர் வீட்டில் இருக்கும் போதெல்லாம் சந்திராவினிடத்தில் குற்றம் காண்பதே தம் வேலையாகக் கொண்டார். சந்திரா தன்னையும் அறியாமல் சிறு குற்றம் செய்தாலும் நரசிம்ம ஐயங்கார் அவள்

மேல் சீறி விழுந்து அவளை நையப் புடைத்து விடுவார். சந்திரா புலியிடை அகப்பட்ட மான் போல் அக்கொடும் பாவியிடம் அகப்பட்டுத் தவித்தாள்.

ஐயங்கார் வெளியிலே சென்றால், அவர் வீட்டுக்குத் திரும்பிவரும் வரை சந்திரா உண்ணவும் கூடாது, உறங்கவும் கூடாது. அவர் வந்து உணவு அருந்திய பிறகுதான் அவள் உண்ண வேண்டும். அவர் படுத்த பிறகுதான் அவளும் படுக்கவேண்டும். இச்சட்டத்தைச் சந்திரா எக்காரணத்தைக் கொண்டும் மீறுதல் கூடாது; மீறினால் அவள் தமக்குப் பெரிய அவமரியாதை செய்ததாக ஐயங்கார் கருதி அவளைத் தம் சீற்றத்திற்கு இரையாக்கி விடுவார்.

அவர் வீட்டுக்குத் திரும்பும் நேரம் நாள்தோறும் ஒரே நேரமாக இருக்காது. காலையில் வெளியில் சென்றால் சில நாட்கள் பிற்பகல் இரண்டு மணிக்கோ மூன்று மணிக்கோ வீடு திரும்புவார். அதுவரை சந்திரா பசியால் வாடி மெலிய வேண்டியதுதான். இரவு நேரத்திலும் அவர் விரும்பிய இடங்களுக்கெல்லாம் சென்று திரிந்துவிட்டு இரவு பன்னிரண்டு மணிக்கோ ஒரு மணிக்கோ வருவார்; சில நாட்களில் வீட்டுக்கு வாராமலும் இருந்து விடுவார். சந்திரா அவருடைய கொடுமைக்கு அஞ்சி அவர் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருப்பாள். இதனால் அவள் எத்தனையோ நாட்கள் பசியால் வாடவும் உறக்கமின்றி மெலியவும் நேர்ந்தது.

சந்திரா பிற ஆடவர் கண்ணில் படுவதை ஐயங்கார் பொறுக்கமாட்டார். பெண்கள்மீது அவருக்கு எப்போதும் சந்தேகம். 'பெண்களை நம்பக் கூடாது' என்று அவர் அடிக்கடி சொல்வார். அவர் பணங்கொடுத்து எத்தனையோ பெண்களைத் தம் வயமாக்கி இருக்கிறார் அல்லவா? அதைப் போலச் சந்திராவும் பிறன் வயமாகி விடுவாளோ என்ற அச்சம் நரசிம்ம ஐயங்காரிடம் நிலையாக இருந்தது. ஆகையால் அவளுடைய மாசற்ற தன்மையை அவரால் உணர்ந்துகொள்ள முடியவில்லை. நாளுக்கு நாள் அவள்பால் அவருக்குச் சந்தேகமே அதிகரித்தது. ஆதலால் அவர் அவளைத் தம் மாளிகையிலேயே சிறைவைத்தார்.

இக்கொடுமைகளைச் சந்திரா பொறுக்கமாட்டாது அனலிடை அகப்பட்ட புழுப்போலத் துடித்தாள். படுபாவியாகிய அவளுடைய தகப்பனார் அவளை ஒருமுறை கூட வந்து பார்க்கவில்லை. அவளுடைய தாய் மட்டும் அடிக்கடி அவளிடம் வருவாள். சந்திரா தாயிடம் தன்னுடைய துன்பத்தைச் சொல்லி முறையிடுவாள். தாயும் தன் மகள் படும் துன்பத்தைப் பொறுக்க முடியாது கண்ணீர் வடிப்பாள். பிறகு அவள், 'என்னம்மா செய்வது? உன்னுடைய தலைவிதி இது. கணவன் எவ்வளவு கொடுமை இழைத்தாலும் மனைவி அவற்றைப் பொறுத்துக்கொண்டு கணவன் விருப்பப்படி நடப்பதுதான் அவளுக்குரிய தருமம். கவலைப்படாதே. ஆண்டவன் இருக்கிறார்' என்று தன் மகளுக்கு ஆறுதல் கூறிச் செல்வாள்.

* * * * * *

சுந்தரஞ் செட்டியார் என்பவர் நரசிம்ம ஐயங்காருக்கு நெருங்கிய நண்பர். அவர் சினிமாப்பட முதலாளி. அடிக்கடி அவருடைய வீட்டுக்கு நரசிம்ம ஐயங்கார் சென்று உரையாடிவிட்டு வருவார். ஒருநாள் பகல் வழக்கம்போல் ஐயங்கார் சுந்தரஞ் செட்டியார் வீட்டுக்குச் சென்றார். ஆனால் செட்டியார் வீட்டில் இல்லை. அவர் ஸ்டுடியோவில் இருப்பதாக ஐயங்கார் அறிந்து, ஸ்டுடியோவிற்குப் போனார். அன்று ஸ்டுடியோவில் மிகச் சிறந்த நடனம் நடந்துகொண்டிருந்தது. நடனம் செய்துகொண்டிருந்தவள் நடனக் கலையில் மிகப் புகழ்வாய்ந்த சுலோசனை என்பவள். அவளுடைய

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை 600 008



நடனத்தில் சுந்தரஞ் செட்டியார் மிகவும் ஆழ்ந்திருந்ததால் நரசிம்ம ஐயங்கார் வந்தது அவருக்குத் தெரியவில்லை. ஐயங்கார் செட்டியார் பக்கத்தில் சென்று, 'என்ன சுந்தரம், நடனத்தில் ஆழ்ந்துவிட்டாய் போலும்!' என்று சொல்லிக்கொண்டே அவர் முதுகைத் தட்டினார். சுந்தரம் செட்டியார் திரும்பிப் பார்த்து, 'ஓகோ தாங்களா? வாருங்கள் வாருங்கள்!' என்று கூறிப் பக்கத்தி லிருந்த நாற்காலியை இழுத்து அவரை அதில் அமரும்படியாகச் சொன்னார். ஐயங்காரும் அந் நாற்காலியில் அமர்ந்து நடனத்தைப் பார்க்கத் தொடங்கினார். சிறிது நேரத்தில் ஐயங்காரும் தம் கருத்தை இழந்தார். சுந்தரஞ் செட்டியார் சுலோசனையின் நடனத்தில் தம் உள்ளத்தை இழந்தார். ஆனால், நரசிம்ம ஐயங்காரோ சுலோசனையின் உடலழகில் தம் சிந்தையைப் பறிகொடுத்தார். அந் நடனத்தைப் படமெடுப்பதற்குச் சுமார் மூன்றுமணி நேரம் ஆயிற்று. இம் மூன்றுமணி நேரம் ஐயங்காருக்கு மூன்று விநாடிகளாகத் தோன்றியது.

படமெடுப்பு முடிந்தவுடன் சுந்தரஞ் செட்டியார் ஐயங்காரைத் தம் அறைக்குள் அழைத்துச் சென்றார். ஐயங்கார் அறைக்குள் சென்று அமர்ந்ததும் அவர் செட்டியாரை நோக்கி 'சுந்தரம், நடனம் ஆடியவள் யார்?' என்று மிக்க ஆவலாகக் கேட்டார்.

'அவள் யார் என்று இதுவரையில் தெரிந்துகொள்ளாமலா இருந்தீர்? அவள்தான் தற்காலத்தில் நடன அரசியாக விளங்கும் சுலோசனை.'

'அவள்தான் சுலோசனையா? சுலோசனையைப் பற்றி நான் நிரம்பக் கேட்டிருக்கிறேன். ஆனால் அவளைப் பார்த்தது இதுதான் முதல்முறை. ஆ, ஆ! என்ன உடற்கட்டு! அவள் உடலழகைப்போல நான் இதுவரை கண்டதில்லை, சுந்தரம்.'

'என்ன ஐயங்கார் அவர்களே, சுலோசனையின் நடனச் சிறப்பைப் பற்றித் தாங்கள் விரிவாகப் பேசுவீர்கள் என்று நான் நினைத்தேன்; அதை விட்டுவிட்டு அவள் உடலழகாக வருணிக்கத் தொடங்கி விட்டீர்களே! வயதாகியும் இந்தப் பெண்ணாசை தங்களை விட வில்லைபோலும்!' என்று சுந்தரஞ் செட்டியார் சிரித்துக்கொண்டே வேடிக்கையாகச் சொன்னார்.

'என்னமோ சுந்தரம், சுலோசனையைப் பார்த்ததிலிருந்து என் மனம் அவளையே நாடுகிறது.'

'இதற்கா கவலைப்படுகிறீர்? அவள் வேண்டுமென்றால் சொல்லுங்கள். வாழ்க்கையை நன்றாக அனுபவிக்க வேண்டியதுதானே!' என்றார் செட்டியார்.

'அவ்வளவு எளிதில் சுலோசனை வருவாளா?' என்று மிக்க அவாவோடு வினவினார் ஐயங்கார்,

'ஏன் வரமாட்டாள்? ஒரு நாளைக்கு ஐந்நூறு ரூபாய் வீசி எறிந்தால் தானே வருகிறாள்'.

'அப்படியா, அதற்கென்ன!'

அன்றிரவு நரசிம்ம ஐயங்கார் ஓட்டலில் ஓர் அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு அங்கே சுலோசனையோடு பன்னிரண்டு மணிவரை தங்கி யிருந்தார்! அதுவரை அவளோடு அவர் கொஞ்சிக் குலாவி இன்ப வெள்ளத்தில் ஆழ்ந்தார் என்று கூறவேண்டியதில்லை. அந் நேரம் முழுவதும் அவருக்குச் சுவர்க்க இன்பந்தான்.

சுலோசனை போன்ற இளம் பெண்கள், வயதாகிய நரசிம்ம ஐயங்கார் போன்ற கயவர்களோடு உறவு கொள்ள அவர்களுக்கு எப்படி மனம் வருகிறதோ! பாழும் பணத்தாசை அல்லவோ அவ்விளம் பெண்களை இத்தகைய இழிதொழிலில் இறங்கச் செய்

கிறது? இதை நினைத்தாலும் நெஞ்சம் நடுங்குகிறது. அப்பப்பா! பணத் தாசையைவிடக் கொடியது இவ் வுலகில் வேறொன்றும் இருக்காது போலும்!

இரவு பன்னிரண்டு மணிக்குப் பிறகு நரசிம்ம ஐய்யங்கார் தம் மோட்டார் வண்டியில் சுலோசனையை ஏற்றிச் சென்று அவளை அவள் வீட்டில் விட்டுப் பின் தம் மாளிகைக்கு வந்தார். அவர் வந்தபோது சந்திரா அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். பன்னிரண்டு மணிவரை அவள் தன் கணவன் வரவை எதிர்பார்த்து விழித்துக் கொண்டிருந்தாள். அதற்கு முன் பல இரவுகளைத் தூக்கமின்றிக் கழித்த சந்திரா அன்றிரவு தன் கணவன் வருவதற்குச் சற்றுமுன் தன்னையும் அறியாமல் தூங்கிவிட்டாள்.

சந்திரா தூங்குவதைக் கண்ட ஐயங்காருக்குச் சினம் பொங்கி எழுந்தது, "சந்திரா, சந்திரா" என்று இருமுறை அதட்டிக் கூப்பிட்டார். சந்திரா எழுந்திருக்கவில்லை. அவருடைய சிற்றம் இன்னும் அதிகரித்தது. 'சந்திரா!' என்று மற்றொருமுறை தம் தொண்டை கிழியக் கத்தினார். அவர் கத்திய ஓசையால் அம்மாளிகையே அதிர்ச்சியுற்றது. சந்திரா கண் விழித்துப் பார்த்தாள்; தன் எதிரே சிற்றங்கொண்ட புலிபோல் தன் கணவன் நிற்பதைக் கண்டாள்; கண்டதும் திடுக்கிட்டு எழுந்தாள்; எழுந்து நடு நடுங்கி நின்றாள்.

'ஏ, பேய! உனக்கு எவ்வளவு திமிர்? நான் எழுப்பியும் எழுந்திருக்காமல் தூங்குகிறாயே! இத்தூக்கம் எங்கிருந்தடி வந்தது? வரவர உனக்கு கர்வம் அதிகமாகிவிட்டது. இதோ பார் ஒரு நொடியில் உன் எலும்பை நொறுக்கிவிடுகிறேன்' என்று கூவிக் கொண்டே அப்படுபாவி ஐயங்கார் மற்றொரு அறைக்குச் சென்று சாட்டையை எடுத்து வந்ததும் தம் முழு பலத்தோடு ஓங்கிச் சந்திராவை அடித்தார். சந்திராவின் மேனி மிக மெல்லிய மேனி அல்லவா? ஒரே அடியில் இரத்தம் பீறிட்டது. அதைக் கண்டும் சற்றும் இரங்காமல் வன்னெஞ்சப் பாதகனாகிய அந்த ஐயங்கார் மேலும் மேலும் திக்கற்ற அந் நங்கையை அடித்தார். சந்திரா துடி துடித்தாள். அவளால் வலியைத் தாங்க முடியவில்லை; அறையை விட்டு வெளியே ஓடினாள். 'ஓடுகிறாயா?' என்று கத்திக்கொண்டே அவளைப் பின்தொடர்ந்து ஓடினார் ஐயங்கார். அப்படுபாவி பின் தொடர்வதைக் கண்ட அவ்வணங்கு இன்னும் விரைந்து மாளிகைக்கு வெளியே சென்று சாலை ஓரமாக ஓடினாள். ஐயங்காரும் விடாது பின் தொடர்ந்து ஓடி அவள் கையைப் பிடித்தார். அவர் பிடித்ததும் வலிந்து தன் கையை விடுவித்துக்கொண்டு சந்திரா தன் முழு பலத்தோடு அவரைத் தள்ளினாள். தள்ளியதும் 'ஓ' என்ற கூக்குரல் கிளம்பியது. தன் கணவன் மீது மோட்டார் வண்டி ஏறி அவர் மாய்ந்து கிடப்பதைக் கண்டாள் சந்திரா. கண்டதும் திடுக்கிட்டாள். அவள் உடல், நடுங்கியது; தலை சுற்றியது. சிறிது நேரம் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. தான் தள்ளியதால் தன் கணவன் மோட்டார் வண்டியிடை அகப்பட்டு இறந்தார் என்பதைப் பிறகு உணர்ந்தாள். 'ஐயோ, கணவனைக் கொன்ற கொடியாளாகி விட்டேனே' என்று நினைந்து நினைந்து நெஞ்சம் அழிந்தாள்; தன் விதியை எண்ணி உள்ளம் பதைத்தாள்

ஒரு நொடியில் அவ்விரவு நேரத்திலும் பலர் வந்து அவளைச் சூழ்ந்து கொண்டனர். 'இவள்தான் அவரை மோட்டாரிடையே தள்ளிக் கொன்று விட்டாள்' என்று மோட்டார் ஓட்டி சந்திராவைச் சுட்டிக் காட்டிக் கூறினான். விரைவில் போலீஸ்படை வந்தது. சந்திரா கைது செய்யப்பட்டாள்.

(தொடரும்)

சிட்னி மாநாடு

“அழகப்பா”

தென் கிழக்கு ஆசியாவில் பிரிட்டிஷ், பிரெஞ்சு, அமெரிக்க அரசுகள் காட்டிவரும் அக்கரை மூன்றாவது உலகப்போரை முன்னிட்டு முன்னெச்சரிக்கையான முஸ்தீபோ என்று ஐயப்படவேண்டியுள்ளது. இப்பகுதியில் புதிதாய் விடுதலை பெற்றுள்ள நாடுகளுக்கு ஆதரவளிக்க முடிவு செய்திருப்பதாய் அம்மூன்று நாடுகளின் அயல் நாட்டு மந்திரிகள் அண்மையில் அறிவித்துள்ளனர். இந்தோ சீனா, இந்தோனீஷ்யா, பர்மா, சயாம், மலேயா முதலிய தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்குப் பொருளாதார, இராணுவ உதவியளிக்க அமெரிக்க அரசாங்க இலாகா ஏற்பாடு செய்துவருகிறதெனச் செய்தித்தாள் செப்புகிறது.

சென்ற உலகப் போருக்குப்பின்னர் ஆசியாக் கண்டம் விழிப்புற்றுள்ளது. இந்தியாவில் கூட்டப்பட்ட ஆசிய நாடுகளின் மாநாட்டிற்குப் பிறகு ஆசியா வெங்கும் ஒரு எழுச்சி காணப்படுகிறது. ஆசியா உலக அரங்கில் தனக்கு உரிய இடத்தைப் பெறச் செய்யும் முயற்சியில் உலகத்தின் கவனத்தைத் தன்பால் ஈர்க்கத் தொடங்கியிருக்கிறது. சில ஆசிய நாடுகள் அண்மையில் அன்னிய ஆதிக்கத்தினின்றும் விடுதலை யடைந்து தன்னாட்சி நிறுவியுள்ளன. இன்னும் பல நாடுகள் அடிமைத் தளையில் சிக்குண்டு பிற நாடுகளின் கைப்பாவைகளா யிருக்கின்றன. தெ. கி. ஆசிய நாடுகளெல்லாம் பொருளாதாரத் துறையில் பிற்போக்கானவை. ஆசியாவின் தென் பகுதியிலும் தெ. கி. பகுதியிலும் வாழ்கின்ற நூறு கோடி மக்களும் வறுமையில் வாடி வாழ்க்கை வசதியின்றி இருக்கின்றனர். போருக்குப்பின் பொருளாதாரச் சிக்கல் காரணமாய்க் குழப்பம் அதிகரித்துச் சில நாடுகளில் நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது.

தெ. கி. ஆசியாவின் அரசியல் நிலைமை அப்பிரதேசத்தை உலகத்தில் ஒரு கேந்திர ஸ்தானமாக்கிவிட்டது என்றே சொல்லலாம். மலாய் நாட்டில் மூன்றாண்டுகளாய் உள்நாட்டுப் போர் நடக்கிறது. இந்நாட்டைச் சுற்றிலும் வடக்கில் சயாமும் கிழக்கில் பர்மாவும் சீனாவும், தெற்கில் இந்தோ சீனாவும் இருக்கின்றன. புதிதாய்ச் சுதந்திரம் பெற்ற பர்மாவில் உள் நாட்டுக் கலகம் காரணமாய் அமைதியில்லை. இந்தோ சீனாவில் இரு அரசாங்கங்கள் போட்டி யிடுகின்றன. ஒரு ஆட்சிக்குச் சூத்திரதாரி ருஷ்யா. மற்றொன்று பிரான்சின் பொம்மை. பிலிப்பைன் தீவுகளில் அரசியல் கொந்தளிப்பு அடங்கவில்லை. இந்தோனீஷ்யக் குடியரசிற்கு இன்னும் தொல்லை தீர்ந்தபாடில்லை. ஆதலால் தெ. கி. ஆசியா உலக

நிகழ்ச்சிகளில் ஒரு முக்கியப் பகுதியாகி வருவதில் வியப்பில்லை.

இக் குழப்பங்களுக்கும் குமுறல்களுக்கும் அடிப்படைக் காரணம் வறுமையே. இவ்வறுமை அகற்றப்பட்டு இப் பிரதேச மக்கள் சுதந்திர ஜனநாயகத்தின் பயனை அனுபவிக்க வசதியளிக்கப்படாவிடில் உலக அமைதி கெடும். இம் மக்களின் வாழ்க்கைத் தரம் உயராவிட்டால் நல்ல நிலையிலுள்ள அயல் நாடுகளும் பாதிக்கப்படும். ஏனெனில் உலக மக்கள் யாவரும் ஒரு சமுதாயம். அதன் ஒரு பகுதிக்குத் தீங்கு நேரிடில் மற்றப் பகுதிகளிலும் அத்தீங்கு பரவாமலிராது. பிற்போக்கான நாடுகளுக்கு உதவி, அவைகளை முன்னேறச் செய்தால்தான் உலக சமாதானம் நிலைக்கும் என்ற நல்லறிவு அறிஞர்களிடம் காணப்படுவது ஒரு நல்ல அறிகுறி. தென், தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு உடனடியாய்ப் பொருளாதார உதவியளிக்க மற்றொரு முக்கிய காரண முண்டு. இந்நாடுகளில் காட்டுத் தீப்போல் பரவும் கம்யூனிஸ்ட் ஆதிக்கத்தைத் தடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, ஆஸ்திரேலியாவும் நியூசிலந்தும் தெ. கி. ஆசியாவிற்குக் கட்டாய உதவி செய்ய முன்வந்துள்ளன.

இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் கொழும்பில் நடந்த காமன்வெல்த் அயல் நாட்டு மந்திரிகள் மாநாட்டில் இப்பிரச்னையைக் கவனிக்க ஒரு காமன்வெல்த் ஆலோசனை சபை நியமிக்கப்பட்டது. அதன் கூட்டமே சிட்னியில் மே மாதம் 15 ஆம் தேதியிலிருந்து ஐந்து நாட்கள் கூடி, கொழும்பு மாநாட்டுச் சிபார்சுகளை அமல் நடத்த ஆலோசித்தது. சிட்னியில் நடந்த காமன் வெல்த் மாநாட்டில் பிரிட்டன், இந்தியா, பாகிஸ்தான், கானடா, இலங்கை, ஆஸ்திரேலியா, நியூசிலந்து முதலிய ஏழு நாடுகள் கலந்து கொண்டன. இந்நாடுகள் பரஸ்பரம் உதவி செய்துகொள்ளும் நோக்கத்துடன் கூடின. ஆஸ்திரேலியா வெளிநாட்டு மந்திரி பெர்சிஸ் பெண்டர் ஒரு திட்டத்தை மாநாட்டின்முன் சமர்ப்பித்தார். நீண்டகாலத் திட்டம் வேண்டுமா, உடனடி உதவித் திட்டம் தேவையா என்பதைப் பற்றிக் கருத்து வேற்றுமை இருந்தது. பின்னர்க் குறுகிய கால அம்சங்கள், நீண்ட கால அம்சங்கள் இரண்டும் உள்ள ஒரு சமரசத் திட்டம் உருவாகியது. நீண்டகாலத் திட்டத்தைச் சுருங்கிய காலத் திட்டத்துடன் பொருத்தி, சமரசம் காண்பதில் இந்தியக் குழுவினரின் தலைவர் சர் .ஏ. இராமசாமி முதலியார் பேருதவி புரிந்து மற்ற நாடுகளின் பாராட்டுதலையும் பெற்றார். அன்னார் மாநாடு கூடிப் பேசிய ஒவ்வொரு கணமும் தம்முடைய பரந்த அரசியல் அறிவாலும், தெளிந்த சிந்தனையாலும் உண்மையான ஆர்வத்தாலும் மாநாட்டிற்கு நம்பிக்கை ஊட்டி வெற்றி பெறச் செய்தார் என்று நியூசிலந்து தூது கோஷ்டித் தலைவர் தெரிவித்துள்ளார்.

சுய உதவித் திட்டத்தில் கோதுமை முதலிய ஏற்றுமதிப் பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்தலாம். உணவு தானியப் பிரச்சினையில் இந்தியா முதலிய நாடுகளுக்கு ஆஸ்திரேலியா உதவலாம். சயாம், பர்மா முதலிய நாடுகளின் வெளிநாட்டு வாணிபத்தில் ஆதிக்கம்செலுத்தும் ஐரோப்பிய வணிகர்கள் அந்நாடுகளில் விளையும் அரிசியைப் பிறநாடுகளுக்கு நியாயமான விலையில் கிடைக்க ஏற்பாடு செய்யலாம். மீன் தொழிலில்

கானடா பெற்றுள்ள பரந்த அனுபவத்தை ஏனைய நாடுகளுக்குப் பயன்படச் செய்யலாம். தொழில் வளர்ச்சியில் பின்னடைந்துள்ள நாடுகளுக்குத் தொழில் துறையில் முற்போக்கடைந்துள்ள நாடுகள் மூலதனம் அளிப்பதோடு தொழில் நுட்பங்களில் தேர்ந்த நிபுணர்களை அனுப்பியும் உதவலாம். மேலும் அரசியல் நிபந்தனையின்றிக் கருவி சாதனங்களைக் கொடுத்துத் தொழில் நுணுக்கப் பயிற்சி (Techinical Training) அளிக்கலாம். பரஸ்பர உதவியுடன் அமெரிக்க ஐக்கிய நாடும் சர்வதேச ஸ்தாபனங்களும் உதவி செய்ய முன்வந்தாலன்றி இந்நாடுகளின் பொருளாதாரப் பிரச்சினை நீடிக்கும். மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு மார்ஷல் திட்டம் வகுக்கப்பட்டதுபோல் தெ. கி. ஆசியாவிற்கு உடனடியாக ஒரு திட்டம் தேவை என்பதை உணர்ந்தே சிட்னி மாநாடு கூடிற்று. காமன் வெல்த்தில் ஆங்கில நாடுகளின் நோக்கம் ருஷிய ஆதிக்கம் பரவாமல் தடுப்பதே. ஆனால், அரசியல் நோக்கமோ, இராணுவ நோக்கமோ இந்தியாவிற்கில்லை; எந்தக் குறிப்பிட்ட சக்தியையும் தடுத்து நிறுத்தும் குறிக்கோளுடன் இந்தியா சிட்னி மாநாட்டில் ஈடுபடவில்லையென இந்தியத் தூது கோஷ்டித் தலைவர் திரு. முதலியார் விளக்கியுள்ளார்.

தென் கிழக்கு ஆசியப் பிரதேசத்தின் முன்னேற்றத்தில் அக்கரையுள்ள மற்றத் தேசங்களின் ஒத்துழைப்பை நாடி அப்பகுதியின் வளர்ச்சிக்கான வழிதுறைகளை மாநாடு பரிசீலனை செய்து அடிகோலியுள்ளது. ஒவ்வோரு நாடும் அதனதனுடைய தேவைகள், அவைகளுக்கான செலவுகளின் மதிப்பு, எந்த அளவிற்குப் பொறுப்பு ஏற்க முடியும் என்று தெரிவித்தால் அவைகளைப் பரிசீலனை செய்து காமன்வெல்த் நாடுகள் உதவும். ஒவ்வொரு நாடும் தத்தம் பொருளாதார நிலைமையைப் பற்றி விரிவான அறிக்கை செப்டெம்பர் முதல் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு புள்ளி விவரங்கள் சேகரித்த பின்னர் வருகிற செப்டெம்பரில் லண்டனில் கூடவிருக்கும் மாநாடு இறுதியான வளர்ச்சித் திட்டங்களை வகுக்கும்.

தெ. கி. ஆசிய நாடுகளுக்கு உதவியளிக்கச் சுமார் முப்பது கோடி ரூபாய்ச் செலவில் திட்டம் வகுத்து ஒரு காமன்வெல்த் நிதி திரட்ட ஏற்பாடாகியிருக்கிறது. மொத்தம் 230 லட்சம் பவுன் உதவியில் ஆஸ்திரேலியாவும் பிரிட்டனும் எழுபது சதவிகிதம் ஏற்றுக்கொள்ளும் என ஒரு செய்தித்தாள் அறிவிக்கிறது. இந்தியாவும் பெருந்தொகை கொடுத்துதவ வேண்டிவரும். கடன் கொடுத்து உதவுவதற்கென 150 லட்சம் பவுனும் தொழில் நுணுக்க உதவிக்கென 80 லட்சம் பவுனும் ஒதுக்குவதென மாநாடு தீர்மானித்திருக்கிறது. தெ. கி. ஆசியாவின் தொழில் வளர்ச்சிக்கு, உழவுத் தொழில் முன்னேற்றத்திற்கு, சமூக வாழ்வின் உயர்விற்குக் கால வரையறை குறிப்பிடாவிடினும் சுமார் ஐந்தாண்டில் அப்பகுதியில் வாழ்க்கைத்தரம் உயரலாம் என்று நம்பப்படுகிறது. இந் நாடுகளின் உடனடியான பொருளாதாரத் தேவைகளை அடிக்கடி பரிசீலனை செய்யவேண்டும் என்று சிட்னி மாநாடு வற்புறுத்துகிறது. ஆறு ஆண்டுகளுக்குப் படிப்படியாக மேன்மேலும் உதவியளிக்கும் திட்டத்தை அமல்நடத்த கொழும்பில் ஒரு மத்திய காரியாலயம் அமைக்கப்போகிறார்கள்.

தென்கிழக்கு ஆசியாவில் ஒரு புதிய சகாப்தம் தொடங்கியிருக்கிறது. பசிபிக் நாடுகளுக்கும் அட்லாண்டிக் நாடுகளுக்கும் இடையில் சமநிலை ஏற்படுத்த ஆஸ்திரேலியா முயல்கிறது. இந்தியா கம்யூனிஸ்ட் நாடுகளில்லாத கூட்டத்தில் சிறிது சிறிதாக இழுக்கப்படுகிறது. பிலிப்பைன் தீவில் பாகுவே என்னுமிடத்தில் சிட்னி மாநாட்டுக்குப் பின் கம்யூனிஸ்ட் நாடுகளல்லாத தெ. கி. ஆசிய மாநாட்டில் இந்தியா கலந்துகொண்டிருப்பது இவ்வுண்மையை வலியுறுத்துகிறது. உலகநிலையாலும் நிகழ்ச்சிகளாலும் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை உருவாகிறது. தெ. கி. ஆசியாவிற்கு இந்தியா வழிகாட்டியாயிருந்து துணை புரியும் நன்னாளை அண்மையில் எதிர்பார்ப்போமாக.

அரசும் கலையும்

“ஒரு நாட்டின் நல்ல ஆட்சியை நோயற்ற நல்ல உடல்நிலைக்கு ஒப்பிட்டுக் கூறலாம். “உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்” என்று கம்பரும் அரசனது ஆட்சியை உடல்நிலைக்கு ஒப்பிட்டுள்ளார். அந்த உடம்பில் வாழும் உயிரே குடிமக்கள் என்பது அவர் கருத்து. இத்தகைய உடம்பில் உயிர்மட்டும் இருந்தால் போதாது. உள்ளமும் வேண்டும் அன்றோ? அது எது? அதுதான் நாட்டில் செழித்து வளரும் கலை. நோயற்ற உடலில் மனமகிழ்ச்சிக்கு இடம் இருப்பதுபோலவே, நல்ல ஆட்சிமுறை நிலவும் நாட்டில் கலைகள் சிறப்புப் பெற்று விளங்குவது இயல்பு. உடல்நிலை சீர்கெட்டபோது, மனம் இருண்டு இன்னலுறுவது போலவே, ஆட்சிமுறை தாழ்வுற்றபோது கலைவளம் குன்றிக் கெடுவதும் இயல்பே....

நாட்டின் வாழ்க்கையில் வேந்தர்க்கு ஒரு பங்கு உண்டு என்பது போலவே புலவர்க்கும் ஒரு பங்கு உண்டு. நாட்டு மக்கள் கவலையின்றி உண்டு உடுத்து வாழ்வதற்கு வேந்தர் துணை செய்தல் போலவே, அம்மக்கள் கலைவளம் பெற்று, உணர்ந்து, உயர்ந்து வாழ்வதற்குக் காரணமாகத் தொண்டு செய்பவர் புலவரே அல்லரோ? நாட்டின் புறவுலகில்— பொருளுலகில்— வேந்தர் ஆட்சி செய்தல் போலவே, அகவுலகில்— கலையுலகில்— புலவர் செங்கோல் செலுத்துகின்றனர். உலகத்தைச் செங்கோல் திருத்துவதுபோல உள்ளத்தை இலக்கியம் திருத்தி ஆள்கின்றது. ஆகையால், ஆட்சித் தலைமை இருவர்க்கும் உண்டு என்பது தெளிவு. ஆகவே, தமிழ் நாட்டை ஒரு வகையில் மூவேந்தர் ஆண்டுவந்தனர் என்று கூறுவது போலவே, பாவேந்தரும் ஆண்டு வந்தனர் எனக் கூறுவது பொருந்தும். பாட்டுக் கலையே அவர்களின் செங்கோல் ஆதலின், அவர்களைப் பாவின் வேந்தர் என்று கூறுவதும் பொருந்தும்”

— டாக்டர் - மு. வ.



ஹேடன் ப்லேனடேரியம்

(பக்கம்—2)

வினாக்களும் விடைகளும்

வெல்லத்திலிருந்து வெள்ளைச் சர்க்கரை செய்ய முடியுமா?

மேள தாளத்தோடு செய்யலாம். சர்க்கரைத் தொழிற் சாலைகளிலேயே இவ்வாறு அடிக்கடி செய்கிறார்கள்.

சாதாரணமாகக் கரும்பிலிருந்து சர்க்கரை செய்கிறார்கள். சிற்சில சமயங்களில் வசதியை உத்தேசித்து வெல்லத்திலிருந்து வெல்லச் சர்க்கரை ('அஸ்கா') செய்வது உண்டு. கோயமுத்தூரிலும் அடிக்கடி இவ்வாறு செய்கிறார்கள்.

கரும்புச் சாற்றிக்குப் பதிலாகப் பனை அல்லது கரும்பு வெல்லம் கரைசலை உபயோகிப்பார்கள். செய்யும் முறையெல்லாம் ஒன்று தான்—சிறிது சுண்ணாம்பு கலந்து சூடு செய்து எலும்புக்கரி மூலம் வடிகட்டினால் பழுப்புப் பொருள்கள் நீங்கிவிடும். காற்றின் அழுத்தம் குறைக்கப்பட்ட கொப்பரைகளில் பதமாகக் காய்ச்சுவார்கள். இதைக் குளிரச் செய்வதால் பிரிந்து வரும் சர்க்கரையை நீர்ப்பொருளிலிருந்து செண்ட்ரிப்யூகல் யந்திரத்தால் (Centerifuge) பிரித்தெடுப்பார்கள்.

அவசியமானபோது தவிர மற்றச் சமயங்களில் பனை வெல்லம் அல்லது வெல்லச் சர்க்கரை உபயோகிப்பது நல்லது. இதில் உடலுக்குத் தேவையான சத்துப் பொருள்கள் அடங்கியுள்ளன.

அமுது சமைக்கப் பச்சை அரிசி, புழுங்கல் அரிசி இவற்றில் எது சிறந்தது?

புழுங்கலரிசியே மேலானது; அதிலும் கைக்குத்தலரிசியாகக் கிடைத்தால் இன்னும் சிறந்தது.

அரிசியின் மேற்புறம் மட்டும் அமைந்துள்ள சத்துப் பொருள்கள் கைக்குத்தலரிசியினின்றும் எளிதில் உதிர்ந்து வந்துவிடுகின்றன. அரிசியும் குறுநொய்யாக உடைந்து தொட்ட மாத்திரம் மாவு கையோடு வந்துவிடுகிறது. நெல்லைப் புழுக்குவதால் அரிசி கெட்டிப்படுவதோடு உமியை அடுத்துள்ள சத்துக்கள் அரிசியோடு ஒட்டிக்கொண்டிருப்பதால் குத்தும்போது எளிதில் இவை நீங்குவதில்லை.

தவிர, சமைக்கும்போது கஞ்சி வடிக்காமலிருப்பது நலம்.

பிராணிகளில் அநேகம் மாமிச பட்சணிகளாயிருந்த போதிலும் ஏன் அவற்றின் வயிறு, குடல் போன்ற உள்ளுறுப்புக்களே ஜீரண நீர்களால் கரைக்கப்படுவதில்லை?

வயிறு குடல் முதலிய உள்ளுறுப்புக்கள் உயிருள்ள அணுக்களாலானவை. இவ்வுறுப்புகளுக்கு இரத்த ஓட்டம் அவசியமானது. இவை ஜீரண நீர்களைத் தயாரிப்பதோடு, இதே ஜீரண நீர்கள் தம்மையும் அழித்துவிடாதபடி தற்காப்புக்காகச் சில நீர்களையும் தயாரித்துக்கொள்கின்றன.

இவ்வுறுப்புகளுக்குப் போகும் இரத்த ஓட்டத்தைச் சில மணி நேரம் தடுத்துவிட்டால் தற்காப்பு நீர்களின் உற்பத்தி நின்றுபோய், தாம் வெளியிட்ட ஜீரண நீர்களாலேயே இவ்வுறுப்புகள் அழிய நேரிடும்.

"நானே தலைவன்; எனக்கு எல்லா ஆற்றலும் உண்டு" என்று தனக்குத் தானே முடிசூட்டிக்கொள்கிறானே, மனிதன், அவன் வெட்கித் தலைகுனிய வேண்டியவன்தான் என்பதை இயற்கையில் உள்ள அற்பமான உயிர்கள் எடுத்துரைக்கின்றன.

மனிதன் எம்மாத்திரம்!

திரு. மு. அருணாசலம், M. A.

இந்த அணுக் குண்டு யுகத்தில் மனிதனே மிகவும் பெரியவனாகி விட்டான். அவன் சாதிக்க முடியாதது இல்லை. நினைத்துச் செய்ய முடியாதது இல்லை. மற்றப் பண்டைப்புக்கள் எல்லாவற்றையும் விட அவனிடம் புத்தி என ஒன்றைக் கடவுள் அதிகமாக வைத்திருக்கிறார். புத்தியைக் கொண்டு அநேக காரியங்களைச் செய்கிற மனிதன், தன் ஆற்றலுக்கு அடங்காதது எதுவுமே இல்லை என்றே எண்ணுகிறான். இந்த எண்ணம் பொருந்துமா?

பொருத்தமற்றது! என்றே பழங்காலம் முதல் பெரியோர்கள் நமக்குச் சொல்லி வந்திருக்கிறார்கள். "வான் குருவிக் கூடு அரக்கு வாலுவண்டு தொல் கறையான்—தேன் சிலம்பி யாவர்க்கும் செய்பரிது" என்று அவர்கள் சொல்வார்கள். இது மனிதனின் கைத்திறமையைப் பொறுத்தவரையில் இன்றும் உண்மைதான். குருவிக் கூடும், அரக்கும், பட்டும், கறையான் புற்றும், தேனடையும், சிலந்தி வலையும் மனிதனால் ஆகும் அமைப்புக்கள் அல்ல.

புத்தியும் கைத்திறனும் கொண்டு படைக்கும் ஆற்றலில்தான் இப்படி என்றால் உணர்வு வகையிலும் மனிதன் எவ்வளவு கீழாயிருக்கிறான்! ஐம்புலனறிவு சம்பந்தப்பட்ட வரையில் அற்பமான பிராணிகளும் பூச்சிகளும் அவனைவிட எவ்வளவோ அதிக ஆற்றல் வாய்ந்திருக்கின்றன. சில உதாரணங்களைப் பார்க்கலாம்.

செவிப் புலனை எடுத்துக்கொள்வோம். எவ்வளவுதான் கூர்மையாகக் கேட்கக்கூடியவராயிருந்தாலும், நாலடி தூரத்தில்தான் கடிகாரம் அடிக்கிற 'டிக் டிக்' சத்தத்தைக் கேட்க முடியும்; அதற்கு மேல் முடிவதில்லை. ஆனால், நாய்கள் நாற்பது அடி வரையில் சாதாரணமாய் இந்தக் கடிகார ஒலியைக் கேட்கின்றனவென்று ஆராய்ச்சியாளர் கண்டிருக்கிறார்கள். 'சப்தப் பிரபஞ்சம்' என்று சொன்னால், நாய்களின் பிரபஞ்சம் மனிதப் பிரபஞ்சத்தைவிடப் பத்து மடங்கு வலிவுடையது.

தரையிலேயே புழு பூச்சிகளைப் பிடித்துத் தின்னும் குருவிகள் சிலவற்றைப் பார்த்திருக்கின்றோம். இவை தத்தித் தத்தி ஓடிக்கொண்டே வந்து சற்று நேரம் தரையிலோ மரக்கிளையிலோ தலையைச் சாய்த்துக்கொண்டு அசைவற்று நிற்பதை நாம் அடிக்கடி பார்க்கிறோம். இக் குருவிகள்

தரையிலுள்ள நாக்குப் பூச்சியை இப்படித் தேடுகின்றன. பூச்சி தன் வளையில் அசைகிற சத்தத்தைக் குருவி, காது கொடுத்துக் கேட்கிறதென்று பறவை நூல் வல்லவர்கள் கூறுகிறார்கள்.

அடுத்தாற்போல், ஸ்பரிசம் என்ற புலனைப் பார்ப்போம். சூடு, குளிர்ச்சி என்பதெல்லாம் அதிகமாய்ப் போனால்தான் நமக்குத் தெரிகிறதே ஒழிய, இவற்றில் ஏற்படும் சிறு வேற்றுமைகளை நாம் அறிய முடிவதில்லை. சூரிய வெப்பம் கால் டிகிரி, அரை டிகிரி அதிகமானால் நாம் அவ்வதிகத்தை அறிவதில்லை. மிகவும் அதிகமாய்ப் போனால்தான் அதை நாம் உணர்கிறோம். சில பிராணிகளிடம் இந்த வெப்ப உணர்ச்சி மிகவும் கூர்மையாயிருக்கிறது. அமெரிக்காவில் சில விஞ்ஞான ஆராய்ச்சியாளர் பாம்புகளிடத்தில் இது பற்றிய சோதனை நடத்தியிருக்கிறார்கள். அங்குள்ள பாம்புகளில் கொடியவை இரண்டு சாதி. ஒன்று "ராட்டில் ஸ்னேக்" என்ற பாம்பு (ராட்டில்—குலுக்குகிற சத்தம், ஸ்னேக்—பாம்பு). இப்பாம்பு ஓடும்போது சத்தம் கேட்பதால் இப்பெயர் வைத்தார்கள். மற்றொன்று கட்டுவீரியன் சாதி. இதில் குழிவீரியன் என்பது ஒன்று. இதன் முக அமைப்பில் சிறு குழிகள் இருக்குமாம். இக்குழியின் உதவியால் இந்தப் பாம்பு வெப்ப நிலையில் ஏற்படும் மிகச் சிறு மாறுதலையும் கண்டுகொள்கிறதாம்.

பொதுவாக நச்சுப் பாம்புகள் கடிப்பதற்கு, இரண்டு பொருள்கள் இருக்க நேர்ந்தால், இரண்டில் எது அதிக வெப்பமாயிருக்கிறதோ, அதைக் கடிப்பதுதான் பாம்பின் இயற்கை. மேற்கூறிய ஆராய்ச்சியாளர் சில பாம்புகளையும், எரிகிற மின்சார விளக்குகளையும் வைத்துப் பாம்பைக் கடிக்கவிட்டுப் பார்த்தார்கள். பாம்புகள் இரண்டு மின்சார பல்புகளில் அதிக வெப்பமுடையதையே போய்க் கடிக்கப்பார்த்தன. இரண்டையும் தொங்கவிட்டு ஒன்றைவிட மற்றொன்றின் வெப்பம் அதிகமாயிருக்கும்படி செய்தார்கள். வெப்பத்தில் இரண்டுக்குமுள்ள வித்தியாசம் ஒரு டிகிரியில் ஐந்திலொரு பங்குக்கும் குறைவாக இருக்கும்படி செய்தபோதுங்கூடப் பாம்பானது கொஞ்சம் அதிக வெப்பமுடைய பல்பையே பார்த்துக் கடிக்க முயன்றது.

மீண்டும் அவர்கள் செத்துப் போன சுண்டெலியை வைத்துப் பார்த்தார்கள். பாம்புகளின் கண்ணைக் கட்டிவைத்து, மூக்கையும் அடைத்துவிட்டபோதிலுங்கூட அப்பாம்புகள் சுண்டெலிகளிடமிருந்து வெளிப்பட்ட வெப்பக் கிரணத்தைத் தங்கள் உடம்பின் உணர்ச்சியால் உணர்ந்தன; அதிக தூரத்திலிருந்தே அவ்வேறுபாட்டை உணர்ந்தன. மனிதனால் அவ்வேறுபாடு அறியமுடியாதது. குறித்த பொருளின்மேல் வைத்தால்தான் தெர்மாமீட்டர்கூட வெப்பத்தைக் காட்டும்; தூரத்திலிருந்து காட்ட இதுவும் சக்தியற்றது.

கட்புலனைக் குறித்தவரையில், பறவைகள் எவ்வளவோ மேலான நிலையில் இருக்கின்றன. பருந்து, கருடன் முதலியவை மிகவும் அதிகமான தூரத்திலிருந்தே தங்கள் இரையை அடையாளங் கண்டுகொண்டு சற்றும் குறி தவறாமல் வந்து கொத்திவிடுகின்றன.

நாவின் சுவை என்பது மனிதனிடம் குறைவுதான். காப்பிக்கு எல்லோரும் சர்க்கரை போடுகிறார்கள். அளவு அதிகமாகப் போனால் தான் நமக்குக் கூடுதலோ, குறைவோ வித்தியாசம் தெரிகிறது. நுட்பமாய்ச் சுவையறியும் ஆற்ற

லுடையவர்கள்கூட, 200 பங்கு நீரில் ஒரு பங்கு சர்க்கரையைக் கலந்தால் ஒருவேளை அபூர்வமாய் இனிப்பைச் சொல்ல முடிகிறது. ஆனால், சர்க்கரை இதைவிடக் குறைவாய்ப்போனால் அவர்களால் சொல்ல முடியாது. சாதாரண ஈக்களில் அநேக வகைகள் நாவைப் பொறுத்தவரையில் இன்னும் கூர்மையான திறமையுடையவை. 40 ஆயிரம் பங்கு நீரில் ஒரு பங்கு சர்க்கரையைக் கலந்தால் இவை கண்டுகொள்ளும். வண்ணாத்திப் பூச்சிகளோ 300 ஆயிரம் பங்கு நீரில் ஒரு பங்கு சர்க்கரை கலந்திருந்தால் கண்டு கொள்ளுமாம். மனிதனுடைய ஆற்றலுக்கும் இந்தப் பிராணிகளுடைய ஆற்றலுக்கும் எவ்வளவு தூரம்!

இனி, மூக்கின் ஆற்றலாகிய மணம் அறிதலைப் பார்த்தால், அதிலும் பிராணிகள் மேம்பட்டு இருக்கின்றன. மிகப் பெரிய மிருகமாகிய யானைக்குப் பார்வை கூர்மையானதல்ல; 25 கஜத்துக்கு அப்பால் உள்ளதைப் பார்க்க யானை அறியாது. ஆனால், காடுகளில் யானை வேட்டை ஆடினவர்கள் யானைகளின் மோப்பச் சக்தியை அதிகம் பாராட்டியிருக்கிறார்கள். காற்று அனுகூலமாக இருக்குமேயானால், நெடுந் தொலைவிலிருந்தே மனிதன் இருப்பதை யானை மோப்பத்தால் அறிந்து கொள்ளுமாம். சில வண்ணாத்திப் பூச்சிகளுக்கும் அந்துப் பூச்சிகளுக்கும் கூர்மையான மோப்பத் திறன் உண்டு. ஒரு பெண் பூச்சியை நாம் மோந்து பார்த்தால் அதனிடம் நமக்கு எந்த மணமும் புலப்படாது. ஆனால் ஒரு திரை மறைவில் ஒரு பெண் பூச்சியை வைத்து ஜன்னலைத் திறந்து வைத்திருந்தால் சாதாரணமாக ஒரு மைலுக்கு அப்பாலிருந்தே அதன் மணத்தை அறிந்து ஆண் பூச்சிகள் அதைத் தேடி வருகின்றனவாம்.

நாயினுடைய மோப்ப சக்தி பிரசித்தி பெற்றது. துப்பறிவது முதலான அநேக வேலைகளுக்கு நாயின் மோப்ப சக்தியை உபயோகப் படுத்துகிறார்கள் என்பது வெறும் கட்டுக் கதையல்ல.

அனுபவத்தில் நாம் ஒன்று பார்த்திருக்கிறோம். நாயைக் கண்டு யார் பயப்படுகிறார்களோ அவர்களை நாய் வெருட்ட ஆரம்பிக்கிறது. பயப்படாதவர்களை ஒன்றும் செய்வதில்லை. இதற்குக் காரணம் நமக்கு விளங்கவில்லை. பயப்படுகிறவர்கள் தங்கள் பயத்தை எவ்வளவு சாமர்த்தியமாக மறைத்துக்கொண்டாலும் நாய் விடுவதில்லை, கண்டு கொள்ளுகிறது. இதற்கு ஒருவகையான காரணம் சொல்லுகிறார்கள். பயப்படுகிறவர்களிடம் 'அச்ச வாசனை' ஒன்று வெளிப்படுகிறது. இது நம் மூக்குக்குப் புலப்படுவதில்லை. ஆனால், மோப்ப சக்தி அதிகமுடைய நாய் இந்த வாசனையைக் கண்டு பொறுக்க முடியாமல் வெறுப்படைந்து குரைக்கிறது. அவரைக் கடிக்கப் பார்க்கிறது.

இந்த ஐம்புலன்களையும் கடந்த பலவித உணர்ச்சிகள் சில பிராணிகளிடம் காணப்படுகின்றன. சிப்பியை உதாரணமாகச் சொல்லலாம். இது நம் கண்ணைப் போன்ற புறக்கண் பெறாத ஒரு பிராணி. இது நீரில் வெயில் படுகிற நேரத்தில் மிதந்துகொண்டு தன் இருபுறத்து ஓடுகளையும் திறந்து வைத்துக்கொண்டு நீரிலிருந்து தனக்கு வேண்டிய உணவைக் கிரகித்துவருகிறது. தன்மீது நிழல்பட்ட மாத்திரத்தில் இரண்டு ஓடுகளையும் காற்றோ ஈரமோ நுழையாதபடி மூடிக்கொள்கிறது. நிழல் நீங்கி

னால்தான் மறுபடியும் அது திறக்கிறது.

வெளவால்கள் இரவில் இரை தேடிப் பறக்கும்போது மிக்க வேகத்தோடு பறக்கின்றன. வழியில் எதிர்ப்படும் பொருளின்மேல் மோதிக்கொள்ளாமல் பறப்பது ஆச்சரியமாயிருக்கும். கண்ணை மாத்திரம் நம்பினால் இவை மோதிக்கொள்ளாமல் அந்த வேகத்தில் தப்பமுடியாது. வேறு ஏதோ உணர்வு இவற்றிடம் இருக்கிறது.* காற்றில் போகும்பொழுது அவை இறக்கையை அடிப்பதால், காற்றின் அழுக்கத்தில் வித்தியாசம் ஏற்படுகிறது. இந்தக் காற்று எதிர்ப்படும் ஒரு பொருளின்மீது தாக்கவும், அழுக்கத்தில் இன்னும் அதிக வித்தியாசம் ஏற்படுகிறது. இந்த அழுக்க வேறுபாட்டை அறிகிற ஒரு கருவி வெளவாலிடம் இருக்கிறது. அதன் காது இந்த ஆற்றலுடையதோ அல்லது அதன் இறக்கைகளில் உள்ள மென்மையான ஜவ்வுகளுக்கு இவ்வாற்றல் இருக்கிறதோ தெரியவில்லை. எப்படியோ காற்றின் அழுக்கத்தாலும் ஒலி அலையினாலும் வெளவால் இருட்டில் ஒரு பொருளைப் பார்க்காமலே இவ்விதம் 'சேட்டுத்' தெரிந்துகொள்ளுகிறது.

நேர உணர்ச்சி என்பது எத்தனை கடிகாரங்கள்தான் வைத்திருந்த போதிலும், மனிதனிடம் மிகவும் குறைவுதான். கால்மணி, அரை மணி நேரத்தை வித்தியாசப்படுத்திச் சொல்லக்கூடியவர்கள் அருமை. ஆனால், தேனீக்கள் நேரம் பற்றி மிகவும் கூர்மையான உணர்வு பெற்றிருக்கின்றன. தேன் கிடைக்காத காலத்தில் தேனீ வளர்ப்பவர்கள் சிலர் குறிப்பிட்ட ஒரே நேரத்தில் தினந்தோறும் தேனீக்கு உணவு வைத்துப்பார்த்திருக்கிறார்கள். ஐந்து நிமிஷ வித்தியாசங்கூட இல்லாமல் அவை சரியான நேரத்தில் வந்து உணவருந்தின. இப்படிப்பட்ட சோதனைகளில் தேனீ, எறும்பு முதலிய பிராணிகளுக்குச் சிறிது நேரம் மயக்க மருந்து கொடுத்து மயங்கச் செய்தாலும், பின்னர் அவை திருத்தமான நேர உணர்ச்சியோடே தம் வேலையைச் செய்துவருகின்றனவாம்.

நீரினுள் ஓடுகிற மீனுக்குச் செதில்களிலெல்லாம் நுட்பமான கருவி இருந்து நீரின் அழுக்கத்தைத் தெரிவிக்கிறது. எந்த நேரத்திலும் மீன்கள் ஒன்றோ டொன்று மோதிக்கொள்வதில்லை. தேனீக்கள் பல்லாயிரம் எந்த இடத்தில் மாற்றி வைத்தாலும் எப்படியோ தங்கள் தனித்த மண அறிவின் மூலம் தங்கள் கூட்டை வந்து அடைகின்றன. நம்முடைய ஆராய்ச்சிக்கு அகப்படாமல் சூரிய ஒளியில் உள்ள ஊதா மேற்கதிர் தேனீக்கு உதவி புரிவதாகத் தெரிகிறது. அப்படியே ஒளியை அறிவதில் நத்தைக்கு ஓர் அபார சக்தியிருக்கிறது. கண் போய்விட்டாலுங்கூட அதன் உடம்பானது தன்மேல் ஒளி படுவதையும், இருள் படுவதையும் வேறுபடுத்தி உணரவல்லதாம்.

இப்படியாகப் பிரகிருதியில் அற்பப் பிராணிகளின் ஆற்றல் எவ்வளவோ பெரிதாயிருக்கிறது. மனிதன் ஐந்து புலன்களையும் நன்றாகத் தீட்டி வைத்திருக்கிறான். இவற்றுக்கு மேலாகப் பகுத்தறிவு ஒன்றும் அவனிடம் இருக்கிறது என்று நாம் எண்ணுகிறோம். ஆனால், இயற்கையில் உள்ள இந்த விதமான சில தன்மைகளைப் பார்க்கும்போது பிரகிருதியில் மனிதன் எம்மாத்திரம் என்பதை எண்ணித் தலை குனியவேண்டியிருக்கிறது.

* கலைக்கதிரின் சென்ற இதழில் வெளிவந்துள்ள வெளவாலும் ரடாரும் என்ற கட்டுரை பார்க்க.

என்னதான் செயற்கைச் சூழலிலே — 'நாகரிக' வெறியிலே உருவான பெண்ணாக இருந்தாலும், உமாவின் பெண்மையில் தாய்மையும் ஒளிந்து தான் இருந்தது. அந்தத் தாய்மைக் கொலுவிலே 'அல்லி,' பழைய செயற்கை அழிந்ததற்காக இதுவரை நடத்திவந்த ஒப்பாரியை முடிக்கிறாள்.

"ஆண்டாள்"

போ. குருசாமி

காட்டுத் தீப் போலப் பரவி விட்டது என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். அது வேகமாகப் பரவுமோ என்னவோ, எனக்கு அவ்வளவு நன்றாகத் தெரியாது. ஆனால், உமா — சஞ்சீவி பற்றிய செய்தி கல்லூரி மாணவர்களிடையே பரவிவிட்ட வேகம் வேறு ஒன்றுக்கும் இராது என்று மட்டும் திட்டமாகச் சொல்லலாம்.

உமா பாடுகிறாள் என்றால் போதும், கல்லூரிக் கட்டிடத்தின் மூலை முடுக்குகளில் உள்ள எல்லோரும் ஒரே இடத்தில் வந்து குவிந்து விடுவார்கள். அவளுடைய உடல் அழகு கவர்ச்சி மிக்கதா, குரல் இனிமை கவர்ச்சி மிக்கதா என்று ஒரு கேள்வியைக் கிளப்பிவிட்டால், பையன்கள் பாடு பெருந் திட்டாட்டம்தான். 'ஆடவர் பெண்மையை அவாவும் தோளினான்' என்று ஆண் அழகுக்குப் புலவர்கள் சிறப்புச் செய்திருக்கிறார்கள். அது உண்மையாகக்கூட இருக்கலாம்போல்தான் தெரிகிறது. இல்லையென்றால், அந்தக் கல்லூரியில் படித்த பெண்களிடையே அவளோடு பேசுவதற்கோ பழகுவதற்கோ அவ்வளவு போட்டி எப்படி இருக்கமுடியும்! அவளைப் பற்றிச் சில பெண்களைப் பேசச் சொல்லிக் கேட்கவேண்டுமே! தங்களை ஏதோ காதல் கட்டத்தில் நடிக்கும் ஆண்களாகவே எண்ணிப் பேசுவதைப்போல் இருக்கும்.

பாரதிதாசன் பாட்டுக்களில் பயித்தியம் பிடித்த ஒரு மாணவருக்கு ஒரு பெரிய சந்தேகம், பாரதிதாசன் உமாவை எப்போது பார்த்தார் என்று. அவளைப் பார்க்காமல்

மின்னலிடை; கன்னல்மொழி;
இன்னும் சொன்னால், விரிவுலகில்
நீ ஒருத்தி; அழகின் உச்சி

என்று எப்படி அவரால் பாடியிருக்கமுடியும்! இப்படி மற்றக் கவிஞர்களிடம் 'பிச்சை' எடுப்பதா என்று எண்ணிய சில மாணவச் சுடர்கள் தாங்களே 'கவி'களாக அவதாரம் எடுக்கவும் தயங்கவில்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், உமா அந்தக் கல்லூரிக்கே உயிரூட்டி வந்தாள். அங்கே இருந்தவர்களையெல்லாம் கிறங்க வைத்துக்கொண்டிருந்தாள்.

புதுமையான நாகரிகச் சூழலிலே முக்குளித்துத் திளைப்பதிலே ஒரு பெருமிதம் கொண்டவள் உமா. நல்ல உடற்கட்டும் நெஞ்சுத் துணிச்

சலும் கொண்டவன் வெள்ளப் பெருக்கின் சுழிகளிலே மூழ்கித் திளைப்பதில் பெருமையடைவது போல அவள் நிலைமை இருந்தது. அதிலே ஆபத்து நிறைந்திருக்கலாம். ஆனால், நிறைந்த ஆபத்தைக் கடப்பதில்தானே பெருமை இருக்க முடியும்! நவ நாகரிகத்தின் சரியான பிரதிநிதியாகத் தன்னை ஆக்கிக் கொண்ட உமா, பாரதியாரும் பாரதிதாசனும் கனவிலே கண்ட புதுமைப் பெண்ணின் நேர் உருவம் என்று சொல்லத்தக்க வகையில் விளங்கினாள்.

"ஏன், உமா, பாரதியார் உன்னைப் பார்த்துத்தான் பாடினாராமே.........

கட்டும் விழிச்சுடர்தான்—கண் உமா
சூரிய சந்திரரோ..........."

என்ற அடி தமக்காகவே பாடி வைத்ததாகச் சில பைத்தியங்கள்........."

உமாவுக்கு இந்த மாதிரியான 'நம்பத்தகுந்த வட்டாரத்திலிருந்து' வருகிற செய்திகள் எத்தனையோ உண்டு. இவற்றையெல்லாம் கேட்டால் அவளுக்கு ஆவேசமே வந்துவிடும். "இந்த ஆடவர்களே நம்பத்தகாதவர்கள். அவர்களால் பெண் இனம் பட்ட பாடு போதும். ஆகா ஓகோ என்று வானத்தை வில்லாக வளைத்துப் பேசுவார்கள். எல்லாம் பசை உள்ளவரையில் தான். அப்புறம் அடுப்பூதும் வேலைக்கு அனுப்பிவிடுவார்கள். கண்ணே மூக்கே என்று அளந்த வாய், கழுதையே குட்டிச் சுவரே என்று அர்ச்சிக்கும்........." என்ற அல்லி மகாராணியின் தர்பார்ப் பாணியில் பேச ஆரம்பித்துவிடுவாள். ஆண்கள் தன்னைப் புகழ்கிறார்கள் என்பதை அறிவதிலே அவளுக்கு எவ்வளவோ இன்பம் இருக்கத்தான் செய்தது. அந்த இன்பம் இல்லையென்றால் அவள் பெண்ணாக இருக்கமுடியாதே! ஆனால், அவள் எடுத்துக்கொண்ட 'நாகரிக அவதாரம்' தன் மன உணர்ச்சியை அவ்வளவு எளிதிலே காட்டிக்கொள்ள விடுமா? "இந்த ஆண்களை ஆட்டிப் படைப்பதே நம் வேலையாக இருக்கவேண்டும். இந்த நாட்டின் ஒவ்வொரு பெண்ணும் எந்த அருச்சுனனுக்கும் பணியாத அல்லியாக மாறவேண்டும்." "நம்மைக் குரங்காக ஆட்டிவைத்த காலம் மறைந்துவிட்டது. நம் மனம்போல் ஆடுகிற சூத்திரப் பாவைகளாக ஆண்களை ஆக்குவதே நாகரிகமான சமூகத்தைப் படைக்கச் சிறந்த வழி." "சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே என்பது ஆண் இனத்துக்கே ஏற்பட்டுள்ள தோல்வியின் முதல் அடையாளம்; பெண்ணினத்தின் எதிர்கால வெற்றிக்கு வழிகாட்டி." —இந்த மாதிரியான சட்டங்களை உருவாக்கிக் கலையகம் என்ற மாணவியர் விடுதியில் நம் அல்லி அரசாணை செலுத்திவந்தாள். அவசரச் சட்டங்களும் அவ்வப்போது பிறப்பதுண்டு. கல்லூரிச் சங்கங்களில் நடைபெறும் விவாதங்களில் 'ஆண் இனத்தை' அடக்குவதற்காக அவை பிறப்பிக்கப்படும். அந்தச் சட்டங்களை கூட்டத்திலுள்ள பெருவாரியான 'ஆணினம்' தன் கைதட்டலால் ஆமோதித்து நிறைவேற்றும். எல்லாம் அந்தப் பன்னிரண்டு முழப் புடைவையின் மகாத்மியம் தான்! வெறும் புடைவையா! அழகு! குயிலின் குரல்..... ...அப்புறம்......! அடேயப்பா...........

இப்படியெல்லாம் வெற்றிக் கொடிபிடித்தே பழகிவிட்டவளுக்குத் திருமணம் என்று சொன்னால், யார்தான் ஆச்சரியப்படமாட்டார்கள்! அதுவும் சஞ்சீவி மணமகன் என்றால்...........!

இந்தச் சஞ்சீவியின் மகிமை என்னவாயிருக்கவேண்டும்! உமா—

சஞ்சீவி திருமணம் கல்லூரி இளை ஞர்களிடையே ஒரு பரபரப்பான செய்தி.

* * *

பரமசிவன் பிள்ளை தம் மகளைப் படிக்கவைக்க நினைத்ததில் பெரிய பெரிய ஆகாயக்கோட்டைகளுக்கு இடம் இருந்தது என்று சொல்ல முடியாது. அவரிடம் பூர்வீகச் சொத்து என்றசோம்பல்மருந்தோ, செல்வாக்கு என்ற சமூகத்தின் கருந்திரையோ இல்லை. உழைத்தால் பிழைக்கலாம் என்ற இயற்கை விதியினை வேறு வழி இல்லாமல் கடைப்பிடிக்கிறவர். சாதாரணமான வருவாயுள்ள வக்கீல் நரசிம்மாசாரியாரிடம் குமாஸ்தாவாக அமர்ந்து வயிறு கழுவி வந்தார். உமா ஒரு பி. ஏ. ஆகி விட்டால் தொல்லை இராது என்று நினைத்தார்; படிக்கவைத்தார்.

ரூபாய் அணா பைசாவிலே அவர் வளமாக வாழவில்லை யென்றாலும் செத்த எழுத்துருவில் சாகாமல் வாழ்ந்துவருகிற அறிவுப் பரம்பரையில் நிரம்பவும் ஊற்றம் கொண்டவர் அவர். தம்மைப் போலவே தாம் காணும் சமூகத்தில் எத்தனையோ பேர் வேறு பல சமூக ஆற்றல்களுக்கு அடிமைகளாய்ப் புழுங்குகிற புழுக்கத்தை உணர்ந்திருக்கிறார். திறமையும் தகுதியும் சமூகத்தில் பெறுகிற இடம் என்ன என்று எண்ணி எண்ணிக் குமுறிய அவர் ஆத்மாவின் விளைவுதான் உமா! சமூக மேடு பள்ளங்களிலே புரண்டு வீழ்ந்து குமுறிக் கொந்தளித்துப் பாய்ந்த அவருடைய ஆத்திர வெள்ளத்தின் விளைச்சல் தான் உமாவின் அல்லி அரசாணை.

உமாவுக்குத் தம்பி தங்கைகளைக் கொடுத்துப் ‘பெரிய குடும்பஸ்தர்’ என்ற குசேலப் பட்டத்தைக் கொடுக்காமல் இருப்பதற்காகத் தான் பரமசிவன் பிள்ளையின் மனைவி ‘கைலாச பதவி’ அடைந்து விட்டாள்போல் இருக்கிறது! உடலின் நைப்பாசை பரமசிவன் பிள்ளையைப் படாதபாடு படுத்தி வைத்ததுண்டு. அதெல்லாம் வாலிபத்தின் முறுக்கு முடுக்காக இருந்த காலத்தில். அந்த வேளைகளில்கூடத் தன் ஆன்ம விளைச்சலான உமாவின் நினைவால் தம்இச்சையை நசுக்கிவிட்டிருக்கிறார்.

‘ஒரு குறைவும் இல்லாமல் இந்த ஒரு பெண் வளர்ந்தால் போதும்’ என்று அடிக்கடி சொல்லிக்கொள்வார். “அம்மா உமா! நீ எவனையும் நம்பி அவனுக்கு அடிமையாக வாழக் கூடாது. தன்னம்பிக்கையோடு இந்தப் பாழ்பட்ட சமூகத்தில் நீ வாழத் தெரிந்துகொண்டால் அது போதும்..............” என்றெல்லாம் அவர் சொல்லிவைத்த பாடங்களே உமாவின் உறுதிப் பாட்டை உருவாக்கி வளர்த்துவிட்டன. அந்தத் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ள ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதற்காகத் தான் அவள் ஆண்கள் படிக்கும் கல்லூரியில் படிக்கவேண்டும் என்று அனுப்பினார். “எனக்கு இந்த முட்டாக்குப் பள்ளிக்கூடம் தேவையில்லை. எதிர்நீச்சு இல்லாமல் அடிபணியவே பழக்கி வைக்கும் இந்தச் சிறைக்கூடத்தில் படிக்கவாவது!” என்று அவளே சொன்னபோது பிள்ளையவர்களின் உச்சி மட்டுமென்ன, உள்ளமே குளிர்ந்து தானே போயிருக்கும்!

அப்போது குளிர்ந்த மனம் அவளுடைய ஒரு கடிதத்தைப் பார்த்தபோது கொதிப்படைந்தது

சென்னை.........

அன்புள்ள அப்பா,

வணக்கம். தாங்கள் எழுதியுள்ள கடிதம் ஜப்பானியன் தலையில் விழுந்த அணுக்குண்டைப்போல் திடீரென்று வந்து என் வாழ்வைக் குலைக்கப் பார்க்கிறது. என்னை மன்னிக்க வேண்டும்.

தங்களிடம் பயிற்சி பெற்ற நான் இந்த அடிமைத் தனையில் சிக்க மறுக்கிறேன்.

சொத்து இருந்தால் அது அவனோடு இருக்கட்டும்....................

தங்கள் உமா.

இப்படிப்பட்ட உறுதியை அவள் உள்ளத்தில் வளர்த்துவிட்ட பிறகு வீணிலே கொதித்துப் பலன் என்ன!

அவர் கொதித்தார். பயனில்லாமல் கொதித்தார். அவள் மறுத்துவிட்டாள்.

* * *

'கடலோர மனை' என்பது மயிலாப்பூரில் அழகான மாளிகை. அங்கே இளமைத் திருக்கோலம் களிநடம் புரிகிறதோ என்று சொல்லும்வண்ணம் சஞ்சீவி வசித்து வந்தான். சொத்தோடு சேர்ந்து பொதுவாக வருகிற சொத்தை உள்ளம் அவனிடம் இல்லாம லிருந்தது பெரிய வியப்புத்தான். மாசுமறுவற்ற அவன் வாழ்க்கையே ஒரு கலை வாழ்வு தான். கல்லூரி நேரம் தவிர மற்ற நேரத்தில் அவனைக் கலைச்சூழலிலே தான் காணமுடியும். அவனுக்கு வேறு நண்பர்களும் இல்லை. மற்றவர்களோடு பழகுகிற இயல்பு அவனுக்கு அடியோடு இல்லாமல் போயிற்று. அவன் சொத்துக்காரன் என்பதால் வலிய அவனோடு ஒட்டிக்கொள்ளப் பார்த்தவர்களுக்கும் அவன் இடம் தரவில்லை. தன் கலை வாழ்வை அவர்கள் பழக்கம் கலைத்துவிடக் கூடாதே என்பதற்காக யாரையும் அவன் நெருங்கவிட வில்லை.

"சஞ்சீவி ஒரு அப்பாவி". 'அவனு சுத்த சூனியம்! சொத்து இருந்து என்ன பண்ண!" "சுத்தச் சூனியம் மட்டுமா? வடிகட்டின கஞ்சன்! நாலுபேரோடு பழகினுல் எங்கே செலவு வந்துவிடுகிறதோ என்று பயப்படுகிருன்!" — இப்படியாக எத்தனையோ வகையாக அல்லிக் கேணிக் கல்லூரி மாணவர்கள் பேசிக்கொண்டார்கள். — "எல்லாரும் போனுப்போலே நானும் போனேன் மாங்காத் தோப்பு என்றதுபோல இந்தச் சஞ்சீவிப் பயலும் விவாதக் கூட்டத்துக்கு வருகிருனே, என்ன'டா இது!" என்று பெருவியப்போடு அவனைப் பார்க்கிற பார்வைகளும் உண்டு.

"இந்த அப்பாவி எப்படி'டா பிடித்தான் அந்த அல்லியை!"

வெறும் கட்டுக் கதை என்று ஒதுக்கிவிட யாராலும் முடியாத வகையில் அல்லவா செய்தி வந்திருக்கிறது!

* * *

பரமசிவன் பிள்ளையின் வற்புறுத்தலின் பேரில் உமா ஊருக்குப் புறப்பட்டு வந்தாள். அவருடைய உடல் நிலை மோசமா, உள்ள நிலை மோசமா என்று உமாவால் நிச்சயிக்க முடியவில்லை. வீட்டுச் சமையல் இல்லாமல் எங்கேயோ காசு கொடுத்துச் சாப்பிட்டதன் பயனுக க்ஷயரோகத்தையும் விலை கொடுத்து வாங்கிக்கொண்டார். நெடுநாளாக உள்ளூர இருந்து வந்ததைத் தந்தையும் அறியவில்லை; மகளும் அறியவில்லை. திடீரென்று அது தன் ஆதிக்கத்தை வெளிப்படையாகச் செலுத்த ஆரம்பிக்கவே, பரமசிவன் பிள்ளையின் உடம்பால் அதற்கு ஈடுகொடுக்க முடியவில்லை. இந்த நிலையில் மகளின் படிப்பு முடியவில்லையே என்ற கவலையும் புகுந்து கொள்ளவே க்ஷயரோகத்தின் பாடு கொண்டாட்ட மாகிவிட்டது.

ஆண்டுத் தொடக்கத்தில் சென்னைக்குப் போன உமாவுக்குத் தந்தையின் உடல்நிலை பற்றி ஒன்றும் தெரியாது. 'கல்விக்கு விசாரம் கலை' என்ற பாடம் படித்த பரமசிவன் பிள்ளையும் மகளுக்குக் கவலை வேண்டாம் என்று ஒன்றும் எழுத வில்லை.

சஞ்சீவி, உமாவின் பொருட்டு அவரைக் காண வந்தபோது அவர் இருந்த நிலை அவனுக்குப் பெரிதும் சாதகமா யிருந்தது. தளர்ந்த உடலில் தளராத உள்ள உறுதி இல்லை. தம்முடைய அறிவுச் செல்வத்தையெல்லாம் வெறும் ஏட்டுச் சுரைக்காயாக்கி விட்டார். தம் மகளின் நல்வாழ்வுக் கேற்ற சமய சஞ்சீவியாகவே அவனைக் கருதினார்.

நல்ல குடும்பம். செல்வச் செழிப்பு. ஏழை யென்றும் பாராமல் உமாவின் கலைச் சிறப்பையே பெரிதாகக் கருதி வரும் உள்ளம். போதாக் குறைக்கு, 'நேர்மை'யான வழியில் பெற்றெடுத்த தந்தையாரையே நாடியிருக்கிறான்! வேறென்ன வேண்டும்! 'சரி' என்ற விடை கிடைத்த எக்களிப்பிலே ஆகாயத்தில் மிதந்துவந்தோமா, ரயிலில் வந்தோமா என்று தெரியாமல் சென்னைக்கு வந்துவிட்டான் சஞ்சீவி.

அவளை நேராக நெருங்கும் துணிச்சல் அவனுடைய பரம்பரையிலேயே இருந்திருக்குமா என்பது சந்தேகம். எப்படியோ வந்த துணிச்சலைக் கொண்டு பரமசிவன் பிள்ளையை நெருங்கினான். குருட்டுப் பூனை விட்டத்தில் பாய்ந்து விட்டது! இலவு காத்த கிளிகள் ஏமாந்துபோயின.

பரமசிவன் பிள்ளையின் உடம்பும் உள்ளமும் தம்முள் கரந்து வைத்திருந்த தாய்மையை இதுவரை வெளிப்படுத்த நேரவில்லை. துருப்புச்சீட்டை எப்போதுமா காட்டுகிறார்கள்! உமா தோற்றுப் போனாள்.

உமா தன் தோழி ஒருத்திக்கு ஒரு கடிதம் எழுதினாள்: "*தாயற்றவள் நான். தந்தையின் உள்ளம் என்னை என்னவோ செய்கிறது! என்ன செய்கிறேம் என்ற விளக்கமில்லாமலே அவரிடமுள்ள தாய்மை உணர்ச்சியாகிய மந்திரக் கோலுக்குப் பணிகிறேன். ஒரு வேளை என் திருமணம் என்பது என் உள்ளத்தைப் பொறுத்தவரையில் தற்கொலையாகக் கூட இருக்கலாம்...... இந்த முகத்தோடு கல்லூரியில் படிக்கும் துணிச்சல் எனக்கு இல்லை........... அல்லியை வஞ்சகத்தால்தான் அருச்சுனன் வென்றிருக்கவேண்டும்.........*" என்று எழுதிய உமாவின் கடிதமே அப்பாவி சஞ்சீவியின் அதிர்ஷ்டத்தைக் கண்டு எல்லோரையும் வியப்புக் கடலில் மூழ்கடித்தது. செய்தி—காட்டுத்தீப் போல'' அல்ல— தன்னையே வெல்லும் வேகத்தில் பரவிவிட்டது.

* * * *

சஞ்சீவியின் பணம் உமாவைத் திருமணம் செய்துகொண்டது. அவள் முக மலர்ச்சியும் அக மலர்ச்சியும் எங்கோ மறைந்துவிட்டன. துள்ளித் திரிகின்ற மான்! பாடிப் பறக்கின்ற குயில்! ஆடிக் களிக்கின்ற மயில்! வானம்பாடி!— இவை இந்த உமாவைப் பற்றி எழுந்த பேச்சுக்கள்தானே!

என்ன மாறுதல்! ஆட்டம் எங்கே? கல கலத்த சிரிப்பெங்கே! பேச்சு...........? அழகு இருந்தது; மலர்ச்சி இல்லை. வளம் இருந்தது; வாழ்க்கை இல்லை. நடைப்பிணம் என்கிறார்களே, அது இப்படித்தான் இருக்குமோ!

சஞ்சீவி எல்லையற்ற துயருக்கு ஆளானான். என்னதான் தன்னலம் கொண்டவனாயினும் அவனும் கலை உள்ளம் படைத்தவன் அல்லவா? கலை வாழ்வுக்கு அவள் தக்க துணையாவாள் என்றல்லவா எதிர்பார்த்தான்! அவள் தன் கலையையே கொன்றுவிட்டாளே! ஒரு பாட்டு! மருந்துக்கு ஒரு பாட்டு! — ஊஹூம், அதுதானே கிடையாது.

எந்தச் சஞ்சீவி தன் மகளுக்குச் சமய சஞ்சீவி யாவான் என்று கருதினாரோ, அந்தச் சஞ்சீவியே அவள் வாழ்வுக்கு நஞ்சாகி விடு

வானே என்று எண்ண வேண்டிய நிலை வரும்வரையில் பரமசிவன் பிள்ளை வாழவில்லை. க்ஷயரோகத்தின் இறுகிய அணைப்பிலே ஒன்றி ஒடுங்கி இரண்டறக் கலந்துவிட்டார்.

சஞ்சீவி— உமா வாழ்க்கை இயந்திரம்போல் சென்றது. அவனுக்கோ நண்பர்களும் இல்லை. அவளோ இப்போது யாரையும் நாடுவதில்லை. வழி துறை துலங்காத காரிருளில் அந்த இரண்டு உயிர்களும் பயணம் செய்தன. அவள் மகிழவில்லையே என்ற ஏக்கம் சஞ்சீவிக்கு. தனக்கு இந்தக் கேடு செய்தானே என்ற ஏக்கமும், அந்த ஏக்கத்தினூடு அவனுடைய கலையுள்ளத்தைக் கண்டதால் பிறந்த அனுதாபமும் கொண்டு இரண்டு துருவங்களிடையே ஊசலாடினள் அவள். எப்படியோ நடந்தது அவர்கள் வாழ்க்கை!

மனம் விட்டுப் பேசும் வழக்கம் இருந்தாலும் இருவருக்கிடையே இருந்த திரை கிழிபட்டிருக்கக் கூடும். அப்படி மனங்கலந்து பேசும் வாய்ப்பு அவர்கள் வாழ்விலே முன்னே இருந்ததில்லை. இப்போதோ —— அது எப்படி வரும்?

மண வாழ்வு மணமற்ற வாழ்க்கையாகச் சுழன்றது. காற்றடித்தது; மழை பெய்தது———

* * *

கடலோரமனையின் உள்ளிருந்து இசை வெள்ளம் பெருக்கெடுத்துப் பரவுகிறது. நிகழாத—நிகழ முடியாத— அற்புதம் என்று எந்தக் காரியத்தைச் சஞ்சீவி நினைத்தானோ அந்தக் காரியம் தன் கருத்துக்கும் கண்ணுக்கும் எதிரே நிகழ்வதைக் கண்டு எல்லையற்ற வியப்பிலே மூழ்கிக் கிடக்கிறான். கையிலிருந்த புத்தகத்தை மெல்ல மூடி வைத்துவிட்டுச் சோபாவிலே சொகுசாகச் சாய்ந்து இரு கண்ணையும் மூடி இசையலையில் மிதந்து வான யாத்திரை செய்யத் தொடங்கிவிட்டான்.

தாலாட்டு குழந்தைக்கா! தன் புது வாழ்வுக்கா!

சஞ்சீவிக்கு ஒன்றும் புரியவில்லை. உமாவின் இந்த மாறுதலை எப்படி விளக்குவது என்று அவனுக்குப் புரியவில்லை. மறுமலர்ச்சியா? புதுப்பிறப்பா?

தொட்டிலில் கிடந்த குழந்தை ஏதோ உளறிற்று. "இது புதுப் பிறப்பு. தாய் இன்றுதான் பிறந்தாள்" என்று அது சொல்லியதாகச் சஞ்சீவிக்கு எதிரே இருந்த ஒரு படம் விளக்கவுரை சொல்லியது. அந்த ஓவியத்தில் தாய் ஒருத்தி தன் சேய்க்குப் பாலூட்டும் காட்சி சித்தரிக்கப்பட்டிருந்தது.

அந்தக் கணத்திலேயே குழந்தைக்கு 'ஆண்டாள்' என்று பெயரிட்டான் சஞ்சீவி.

ஒரே தியாகி.

"உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் தியாகம் செய்தவர் என்று யார்யாரையோ புகழ்வதெல்லாம் பொருந்தாது. 'தாய்' என்ற ஒருத்தியின் தியாகத்தை எண்ணுகிற மனம், எப்படி மற்றவர்களைத் தியாகிகள் என்று சொல்லத் துணியும்!"

— யாரோ ஒருவர்

மீனின் மின்சாரம்

திரு. நா. கி. நாகராசன், M. A.

இங்கிலாந்திலுள்ள பிரபல மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் ஒரு சோதனை. ஒரு மனிதனை ஒரு நாற்காலியில் உட்காரவைத்து அவன் தோளில் அகலமான உலோகத் தட்டொன்று பொருத்தப்பட்டிருக்கிறது. சிறு உலோகத் துண்டொன்றை அவன் கையில் ஏந்தியிருக்கிறான். இவ்விரண்டும் கம்பிகளால் மிக நுணுக்கமான ஒரு மின் காட்டியுடன் (Galvauoscope) பிணைக்கப்பட்டிருக்கின்றன. அவனருகே உள்ள விஞ்ஞானி ஏதோவொரு சமிக்ஞை செய்ய அவன் கையை அசைக்கிறான். உடனே மின்காட்டியின் முள் இமைப் பொழுதில் நகர்ந்து மீண்டும் தன் பழைய நிலையைச் சிறிது மெதுவாக அடைகிறது.

கையின் அசைவால் மின்காட்டி பாதிக்கப்படுவானேன்? மனிதன் கையை அசைக்க அவன் கையிலுள்ள தசை நார்களை இயக்குகிறான். இதனால் தசை நார்களில் நிகழும் மாறுதல்களால் சிறு மின்னோட்டமொன்று தோன்றுகிறது. இது மின் காட்டியின் முள்ளை அசைக்கிறது. தசைகளின் இயக்கத்தால் மின்சாரம் தோன்றும் என்ற உண்மை இச்சோதனையால் புலனாகிறது. ஆகையால் நம் உடலின் ஒவ்வொரு பகுதியிலும் மின்னாக்கிகள் (Electric Generators) உள்ளன எனலாம். அவற்றில் எப்போதும் தோன்றியவண்ணம் உள்ள மின்சாரத்தைப் பற்றிச் சிறிதும் சந்தேகிக்காமலே நம் வாழ்க்கையைக் கடத்திவிடுகிறோம்.

உடலில் மின்சாரத்தை ஆக்கும் திறன் மானிடனுக்கு மட்டும்தான் உண்டு என அவன் இறுமாப்புக் கொள்ளவேண்டாம். எல்லா உயிரினங்களிலும் இம் மின்சாரம் தோன்றத்தான் செய்கிறது. நீரில் வாழும் சில பிராணிகளில் இத்தகைய மின்சாரம் பேரளவில் நிகழுமாறு அதன் உறுப்புகள் அமைந்திருக்கும். அத்தகைய மீன்களின் அருகிற் சென்றாலே நமக்குப் பலத்த மின்சார அதிர்ச்சி விளையும். மின்சாரத்தின் அழுத்தம் வோல்ட் (Volt) என்னும் அலகால் அளவிடப்படுகிறது. வீடுகளில் நாம் பயனாக்கும் மின்சாரத்தின் அழுத்தம் 220 வோல்ட். இந்த அழுத்தம் கொண்ட மின்சாரமே எவ்வளவு அபாயகரமான அதிர்ச்சியை அளிக்க வல்லது என்பதை நாம் அறிவோம். இதைப்போல் பன் மடங்கு அழுத்தமுள்ள மின்சாரத்தைத் தம் உடலில் ஆக்கும் மீன் வகைகள் உண்டு. ஆனால் இத்தகைய மின்சார மீன்களிற் பெரும்பான்மையானவை சில வோல்ட் அழுத்தமே உள்ள வலிவற்ற மின்சாரத்தைத் தோற்றுவிக்கின்றன.

இவ்வுயிரினங்கள் தம் உடலில் நிகழும் மாறுதல்களால் தோன்றும் மின்சாரத்தை வலுப்படுத்தி அதைத் தம் வாழ்க்கைப் போராட்டத்திற்கு ஏற்ற சாதனமாகப் பயன்படுத்திக்கொள்கின்றன. வலிவான மின்சார சக்தி கொண்ட இவற்றை நீரில் வாழும் மற்ற உயிர்கள் அணுகவும் அஞ்சும். ஆகையால் மின்சார உறுப்புத் தற்

காப்புச் சாதனமாகப் பயன்படுகிறது. எல்லா மின்சார மீன்களும் நீரில் வாழும் மற்ற உயிரினங்களை உண்டு உயிர்வாழ்பவை. அவற்றினருகே உண வுக்கேற்ற சிறு பிராணிகள் வந்தால் அவை அவற்றை அதிர்ச்சியுறச் செய்து செயலற்றவை யாக்கும். அவ்வாறு அசைய முடியாது உள்ள நிலையில் அவை இம் மீன்களுக்கு இரையாகின்றன. இவ்வகையில் மின்சார உறுப்பு இரைதேடும் சாதனமாகவும் அமைகிறது. இவற்றைத் தவிர இன்னொரு வகையிலும் இவ்வுறுப்புப் பயனாகலாம். இலேசான மின்சார அதிர்ச்சிகளை வெளியிட்டு இப் பிராணிகள் ஒன்றோடு ஒன்று 'பேசி'க் கொள்கின்றனவாம்! மின்னதிர்வுகள் ஒரு வகைத் தந்தி முறையாக இப் பிராணிகளுக்கு அமைகின்றன. கடலின் ஆழத்தில் வாழும் சில மீன்களுக்கு இது பார்வைப் புலனுக்குப் பதிலாக இயங்கலாம் எனக் கருதப்படுகிறது. ஆகையால் இம் மீன்கள் மின்சாரக் கண் கொண்டவை எனலாம். ஆழத்தின் இருட்டிலும், சேறு, பாசி முதலியவை நிறைந்த நீரிலும் பார்வைப் புலன் அவ்வளவாகப் பயனாகாது. ஆகையால் இப் பிராணிகளின் பரிணும வரலாற்றின்போது மின்சார உறுப்புகள் கண்களுக்குப் பதிலாகத் தோன்றின எனக் கூறவேண்டும்.

மின்சார மீன்களில் மூன்று வகைகளை மட்டுமே நாம் ஸ்பரிசத்தால் அறிய முடிகிறது. மற்ற வகைகளை நாம் நுண்ணிய கருவிகொண்டே மின்சார மீன்கள் என அறியலாம். பல கெண்டை, திருக்கை வகை மீன்களின் வாலில் உள்ள ஒரு தசை மின்சார உறுப்பாக மாறிவிட்டது. விரும்பிய போது இவை சுமார் ஒரு வோல்ட் அழுத்தமுள்ள அதிர்ச்சியை அளிக்கும். இவற்றின் இரையை மயக்கிப் பிடிக்க இந்த அதிர்ச்சி போதுமானது.

மத்திய தரைக் கடலில் வாழும் திருக்கை ஒன்று மின்சார டார்பிடோ (Electric Torpedo) என அழைக்கப் பெறும். இதன் உடல் அகலமாகவும், தட்டையாகவும் இருக்கும். இதன் செதில்களில் உள்ள சில சுரப்பிகளும் (Glands), தசைகளும் மாறுதல் எய்தி மின்சார உறுப்பாகிவிட்டன. இதில் விளையும் ரசாயன மாறுபாடுகளால் இது 40—50 வோல்ட் அழுத்தமுள்ள மின்சாரத்தைத் தோற்றுவிக்கிறது. இதன் மின்சார உறுப்புக் கடினமான வெண் திட்டுகள் போல் இதன் இரு புறங்களிலும் அமைந்திருக்கும். மின்சார அதிர்ச்சியை அளிக்கும்போது இது தன் உடலின் வலிமை யனைத்தையும் இதில் ஈடுபடுத்துகிறதுபோலும். எனெனில் இது அதிர்ச்சியை அளித்தபின் சிறிது நேரம் சோர்ந்துபோய்க் கிடக்கும்.

ஆப்பிரிக்க நதிகளில் பூனை மீன் (Catfish) என்றொரு மீனினம் உண்டு. இது முகத்தில் மீசையுடன் பூனையை ஒத்த முகத்தை உடையது. இதன் சகோதரர் நம் நாட்டு ஆறுகளிலும் உண்டு. ஆப்பிரிக்கப் பூனைமீன் மின்சார உறுப்புக் கொண்டது. மின்சார உறுப்பு இதன் உடலைச் சுற்றிலும் அமைந்து அதற்கு ஒரு போர்வை போல் இருக்கும். நமது தோலில் எண்ணெய் வெளிவிடும் சுரப்பிகள் இருப்பது போலவே இதற்கும் தோற்சுரப்பிகள் உண்டு. இவை மாறிப் பசைபோன்ற உறுப்பாயின. இது ஒரு மின்கடம்போல் இயங்கி மின்னோட்டத்தை ஆக்குகிறது.

மின்சார மீன்களில் மிக முக்கியமானது தென் அமெரிக்காவிலுள்ள அமேசான், ஒரினேகோ என்ற பேராறுகளில் வாழும் ஒருவகை மீன். இது மின்சார விலாங்கு (Electric Eel) என அழைக்கப்படுகிறது. ஆனல் இது உண்மையில் விலாங்கு வகையைச் சேர்ந்ததல்ல. இது கெண்டை வகையைச் சார்ந்த ஒரு மீன். பாம்பை ஒத்த வடிவுள்ள இது சுமார் ஐந்தடி நீளம் இருக்கும். நீண்ட இதன் உடல் நெடுகச் சுமார் 14,000 தகடுகள் போன்ற தசைகள் உள்ளன.

இவை மீனின் மத்திய நரம்பு அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன. மோட்டார் வண்டியிலுள்ள மின்கடத்தின் தகடுகளைப்போலவே இவை மின்சாரத்தை ஆக்கும் திறனுள்ளவை. இதன் மூளையில் கொடுக்கப்படும் உத்திரவு இத்தகடுகள் அனைத்தையும் ஒரே சமயத்தில் அடைந்து அவற்றை இயக்குகிறது. ஆகையால் அவற்றில் சிறு மின் அதிர்வுகள் தோன்றி ஒன்று கூடுகின்றன. இதனால் இது மிகவலிவான மின் அதிர்ச்சியை அளிக்க முடிகிறது. விநாடியில் சுமார் 2,000 பங்கே நீடிக்கும் இவ்வதிர்ச்சியின் அழுத்தம் சுமார் 600 வோல்ட் வரை இருக்கலாம். நொடிப்பொழுதே நீடிக்கும் இவ்வதிர்ச்சிகள் தொடர்ந்து பல மணி நேரம் வரை நிகழலாம். எதிரிகளையும், இரையாகத் தகுந்த உயிர்களையும் இவ்வதிர்ச்சிகளால் கொல்லும் மின்சார விலாங்கு தரும யுத்தத்தில் நம்பிக்கை உள்ளது என நினைக்க இடமிருக்கிறது! ஏனெனில் வலிவான அதிர்ச்சிகளை அளிக்குமுன் இது வலிவற்ற சில அதிர்ச்சிகளை அளிக்கிறது. இவை பின்னால் வரவிருக்கும் அபாயத்தின் எச்சரிக்கைகள். இவ்வெச்சரிக்கைகளை உணராது அதை விட்டு அகலாத பிராணிகளுக்குச் சாவு நிச்சயம். மின்சார விலாங்கு முதலையினும் கொடிய பிராணியாக மதிக்கப்படுகிறது. ஏனெனில் மனிதர்களும், குதிரைபோன்ற பெரு விலங்குகளும் இவ்வதிர்ச்சியினால் மூர்ச்சையாகி ஆற்றில் மூழ்கி இறக்கவேண்டியதுதான்.

முதுகெலும்புள்ள பிராணிகளில் முதலில் தோன்றியவை மீன் வகைகள். பல கோடி ஆண்டுகளுக்கு முன் விந்தை வடிவங்கள் கொண்டு கடலில் வாழ்ந்த மீன்களின் சந்ததிகளே நாம் என்பதை நம்புவதும் கடினம். தற்காப்புக்காகவும், போராட்டத்திற்காகவும் இவை தம் உடலைச் சுற்றிலும் வலிவான எலும்புக் கவசத்தைப் பெற்றிருந்தன. இக்கவசம் பின்னர்ச் செதில்களாக மாறியது. காலப்போக்கில் செதில்கள் பற்களாயின. இந்திரன் உடலெல்லாம் கண்ணைப் பெற்றான். ஆனால் நம் மூதாதையரின் உடல் முழுதும் பற்களாக இருந்தன எனலாம்! ஆதி மீன்களின் கவசத்தில் ஒரு பகுதி மின்சார உறுப்பாக இருந்தது என நம்ப இடமுள்ளது. மானிடன் மின்சாரத்தைப் பயன்படுத்தத் துவக்கி இரண்டு நூற்றாண்டுகளே ஆயின. ஆனால் எளிய மீனினமோ இதைப் பலகோடி ஆண்டுகளாகவே சிறந்த வகையில் பயனாக்கி வந்துள்ளது என்பதை அறிந்தேனும் "மானிடன் செய்த மாண்புறு செயலில்" நாம் கொள்ளும் தற்பெருமையைச் சற்றுக் குறைத்துக் கொள்ளலாம்.

உடலிலுள்ள தசைகளின் இயக்கம் மின்சாரத்தைத் தோற்றுவிக்கிறது. இது மட்டுமல்லாது உயிரினங்களின் அவ்வகை இயக்கமும் சில பௌதிக, ரசாயன மாறுபாடுகளால் நிகழ்கிறது எனத் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இம்மாறுபாடுகளின் விளைவாய்ச் சிறு மின்னோட்டங்கள் தோன்றுகின்றன. இது எல்லா உயிர்களிலும் நிகழும் ஒரு விளைவு. இயற்கையன்னை இதைப் பயன்படுத்தி மீன்களின் மின்சார உறுப்பை ஆக்கினாள். மின்சார விலாங்கின் தசை அணுக்கள் (Muscle Cells) தமது ஆதி வேலையான நீட்டலையும், சுருக்கலையும் மறந்து மின்சாரத்தை ஆக்குவதையே தம் தொழிலாகக் கொண்டுவிட்டன. பூனை மீனின் சுரப்பிகள் காலப்போக்கில் நீரைச் சுரப்பதை விட்டு மின்சாரத்தை ஆக்கத் தொடங்கின. ஆகையால் தசைநாரும், சுரப்பியும் மின்சார உறுப்பாக மாறின. பரிணாமப் பாதையில் முன்னேறிப் பல விதமான மாறுதல்களை எய்தும் உயிரினங்களுக்கு மின்சார உறுப்பு வழியிற் கண்டெடுத்த ஒரு பயனுள்ள பொருள் போன்றது.

தந்தி: "ஆண்டவர்"

பழனி ஆண்டவர் மில்ஸ்

லிமிடெட்,

உடுமலைப்பேட்டை.

★

மானேஜிங் ஏஜண்ட்ஸ் & செக்ரிடரீஸ்

பாக்யலக்ஷ்மி & கோ.,

211714

★

20-நெ. முதல் 60-நெ. வரை

ஒற்றை முறுக்கு நூல்கள்

தயாரிக்கிறோம்.

இந்திய மூலதனம்
இந்திய உழைப்பு
இந்திய நிர்வாகம்

★

சிங்கிள் கதிர்கள் 22000 *டப்ளிங் கதிர்கள் 624*

தந்தி: ''சுப்ரமணியா'' டெலிபோன் { ஆபீஸ் 176 / பங்களா 146 }

ஸ்ரீ பாலசுப்பிரமணிய மில்ஸ் லிமிடெட்,

சிங்காநல்லூர், கோயமுத்தூர்.

(ஸ்தாபிதம் 1934)

- பிரக்யாதி பெற்ற மில்களில் உத்தமமானது இதுவும் ஒன்று
- இந்த மில்லில் குணம் நிறைந்த சரக்கை உற்பத்தி செய்வதே நிர்வாகஸ்தர்களது நோக்கம் - -
- இந்த மில்லில் கைத்தறிகளுக்கும் பவர் த்றிகளுக்கும் உகந்த 36-நெ. முதல் 80-நெ. வரை ஒற்றை முறுக்கு நூல் தயாரிக்கப்பட்டு வருகின்றன - -

12,512 கதிர்கள் தொழில் செய்கின்றன.

தேசீய மூலதனம்
தேசீய தொழிலாளர்
தேசீய மேனேஜ்மெண்டு

ஆக எல்லாம் இந்திய மயமாக நடைபெற்று வருகின்ற

தேசீய தொழில் ஸ்தாபனமாகும்.

ஆரம்பித்த நாள் முதல் இன்றுவரையிலும் பங்குதாரர்கட்கு நல்ல டிவிடெண்டு தரப்பட்டு வந்துள்ளது.

Sri Balasubramania Mills Limited,

Singanallur, Coimbatore.

Managing Agents & Secretaries:

K. Krishnaswamy Naidu & Brother.



— THE —

SALESMAN

SANITARY ENGINEERS & CONTRACTORS,
5/319, AVANASHI ROAD,
COIMBATORE.

★

We stock all sanitary materials, wash-basins closets, Stone ware pipes etc.

★

Mosaic flooring
a speciality.

★

**YOUR HOME
OFFICE or FACTORY.**

LFT US BUILD IT
FOR YOU.

உண்மையான
ஆயுர்வேத மருந்துகளும்
சாஸ்திர முறைப்படி
ஆயுர்வேத சிகிச்சைகளும்
தேவையா?
இவைகளை
ஆர்ய வைத்திய பார்மசி
(கோவை) லிமிடெட்டில்
பெறலாம்.

தலைமை ஆபீஸ் :
கோயமுத்தூர்
(டெலிபோன் நெ. 108)

கிளை ஆபீஸ் :
இராயப்பேட்டை.
(டெலிபோன் நெ. 84110)

பி. கு.

கோயமுத்தூர் டிஸ்டிரிக்டைச் சேர்ந்த சிங்காநல்லூரில் 40 ஏக்கரா நிலம் கவர்மெண்ட் மூலம் வாங்கியிருக்கிறோம். இங்குச் சீக்கிரத்தில் 'நர்சிங் ஹோம்' ஒன்று ஆரம்பிக்கப் போகிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

சேவையே எமது லக்ஷியம்

பயனீர் பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்,

தலைமை ஆபீஸ்: ஜெயில் ரோடு, கோயமுத்தூர்

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார் விபத்து முதலிய எல்லா
விதமான இன்ஷ்யூரன்ஸ்களும் ஏற்று வருகிறோம்.

செல்வாக்கும், திறமையும் வாய்ந்த ஏஜெண்டுகளும் ஆர்கனைசர்களும்
தாராளமான நிபந்தனைகளின் பேரில் தேவை.

விபரங்களுக்கு:— **தலைமை ஆபீசுக்கு எழுதுக.**

Phone: **209** Gram: **"NAIDUBROS"**

L. P. KRISHNASWAMY NAIDU & BROS.,

MERCHANTS & CONTRACTORS.

FRASER SQUARE, COIMBATORE.

Agents for:

Messrs. HARRISONS & CROSFIELD, LTD., COCHIN & QUILON. for

FABRICATED STEEL WORKS
Such as TRUSSES, PURLINS etc., etc.

ASBESTOS CEMENT LTD'S
Roofing Materials & Rain water Goods, etc.

S. V. O. C.
Industrial Lubricants, Petrol, Mobiloils, Crude oil, High Speed Diesel Oil, Power Kerosene etc.

GOODLASS WALL LTD'S
Paints, Enamels Varnishes Distempers Etc.

Dealers in:

ELECTROLUX Refrigerators, Motor Tyres, Tubes, A. D. V. & Trolley Equipments Etc.

Agents for Messrs:

GREAVES COTTON & CO., LTD., for Textiles, Mill Stores and Machinery Parts.

Edited & Published by G. R. Damodaran, B. Sc., Elec., B. Sc., Mech. (Durham) A.M.I.E.E. (London) and Printed at the P. S. G. Industrial Institute Press, Peelamedu, P. O., Coimbatore.

ஸிபோன் கே. 17 தந்தி: "ரங்கவிலாஸ"

ஸ்ரீ ரங்கவிலாஸ் ஜின்னிங், ஸ்பின்னிங்
அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1922-ல்)

ரிஜிஸ்டர் ஆபீஸ்: பூளைமேடு, கோயமுத்தூர்.

ூதனம், ரூ. 16,00,000 வெளியிடப்பட்டு வசூலானது ரூ. 15,02,500.



வேலை செய்யும் மொத்த கதிர்கள் 30.000

ெ. முதல் 100 நெ. வரை ஜவுளி நூல் தினுசுகள், பனியன் வகையராக்களுக்கு உபயோகப்படும் கோன் நூல் தினுசுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இன்னும் அதிக யந்திரங்களை வைப்பதற்கு கட்டிடங்கள் தயாராயிருக்கின்றன.

மானேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு பாங்கர்ஸ்:

பி. எஸ். கோவிந்தசாமி நாயுடு அண்டு சன்ஸ்,

பூளைமேடு — கோயமுத்தூர்.

ந்திய மூலதனம், இந்தியக் கைத்தொழிலாகிய

இந்த சுதேசித் தொழிலை ஆதரியுங்கள்

Telegrams: PIONEER

THE COIMBATORE PIONEER MILLS, LIMIT

PEELAMEDU, COIMBATORE, SOUTH IN

SPINDLES — 19280. SPINNERS OF HIGH QUALITY YARN — 40s TO 100s.

Managing Director : G. R. GOVINDARAJULU NAIDU.



Printed at the R. S. G. I. I. Press, Peelamedu, Coimbatore, (S. India).